படைப்பு

ஊற்று-4 | நதி-1 | மே-2021 | திங்களிதழ்

ISSN : 2582-4015

www.padaippu.com

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

## “இலக்கியம் வாசிப்பாளனை மானுடத்தின் உயர்ந்த பிரதியாக மாற்றிவிடுகிறது..”

▪ எழுத்தாளர் எம்.எம்.தீனுடனான நேர்காணல்



• நூர்தீனின் நூற்றாண்டுக்கான ஊளியின் நுனி....

- துரை. நந்தகுமார்



• தேநீர் அருந்தும் கலை

- பாரதிநிவேதன்



• பியட்டா : அன்பெனும் ஆயுதம்

- கவிஜி

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-1 | மே 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **"இலக்கியம் வாசிப்பாளனை மானுடத்தின் உயர்ந்த பிரதியாக மாற்றிவிடுகிறது.."**
  - எழுத்தாளர் எம்.எம்.தீனுடனான நேர்காணல் -பக். 05
- **நூர்தீனின் நூற்றாண்டுக்கான உளியின் நுனி....**
  - துரை. நந்தகுமார் -பக். 16
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 24
- **பியட்டா : அன்பெனும் ஆயுதம்**
  - கவிஜி -பக். 29
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 31
- **மனநிலைக் குறிப்புகள் 10**
  - ஆதிரன் -பக். 45
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  - கவிஞர் விக்ரமாதித்யன் -பக். 50
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 54
- **இலக்கியமும் கொரொனாவும்**
  - தங்கத்துரையரசி -பக். 60

## சிறுகதைகள்


- **கிணிங்... கிணிங்**
  - நந்தன் கனகராஜ் -பக். 21
- **வெண்ணிலா**
  - மீரா -பக். 38
- **பாப்பம்மாவின் வாருகோல்..**
  - மதுரா -பக். 57


## கவிதைகள்


- **பாரதிநிவேதன்** -பக். 15
- **பா.சிவகுமார்** -பக். 36
- **இனியவன் காளிதாஸ்** -பக். 37
- **பட்டியூர் செந்தில்குமார்** -பக். 37
- **ஷர்ஜிலா யாகூப்** -பக். 37
- **ராம் பெரியசாமி** -பக். 37
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 9**
  - ஜின்னா அஸ்மி -பக். 53
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 59

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' முப்பத்தேழாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது. 'தகவு' நான்காம் ஆண்டுப் பயணத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறது. தொடர் ஆதரவினை நல்கிவரும் படைப்பாளர்களுக்கும் வாசகர்களுக்கும் 'தகவு' தனது சிரம் தாழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழின் ஆகப்பெரும் எழுத்தாளராகிய கி.ராஜநாராயணனின் மறைவு தமிழ் எழுத்துலகிற்கு ஏற்பட்ட அதீதமான இழப்பு. தன் வேர்களின் மூலத்தைக் கண்டறிய முற்பட்டவர், அதன் நீட்சிகளை அடையாளம் கண்டு எழுத்துக்களாக்கினார். அவர் எழுதிய புனைவுகளில் உண்மை இருந்தது. மானுடவியல் ஆய்வுகளுக்கு இணையான எழுத்துக்களை அவர் படைப்புகளாக்கினார். எளிய மக்களின் வழக்காறுகள் தமிழ் இலக்கியங்களில் பதியப்பட அவரது பங்களிப்பு அலாதியானது. இச்சமூகத்தின் மாண்பை உயர்த்திய மனிதருக்குக் கல்விப்புலமும் அரசும் மரியாதை அளித்து அனுப்பிவைத்துள்ளது. வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர். வானுறையும் தெய்வத்துள்தான் வைக்கப்படுவார்.

ஒரு காலகட்டத்தின் படைப்பு அக்காலகட்டத்தின் பின்புலத்தில் வேரோடியிருந்தால் மட்டுமே நிலைத்த நம்பிக்கை பெறும். இக்காலகட்டம் உலக மக்களுக்கே இக்கட்டான ஒரு காலகட்டம். மனித மனங்களில் வெறுமையும் நம்பிக்கையின்மையும் சோகங்களும் பரவலாகத் தென்படுகிற காலகட்டம். கொரானா என்னும் நுண்கிருமி நம்மிடம் ஏற்படுத்திய பாதிப்புகள் ஓராண்டு கடந்தும் தீர்ந்தபாடில்லை. மேலும்மேலும் பிரச்சினைகள் தீவிரமாகிக்கொண்டே இருக்கின்றன. மனிதர்களிடத்தில் அச்சமும் சோர்வும் இயல்பாய் எழுந்துவிடுகின்றன. அன்றாட வாழ்விற்கான பொருளை அன்றன்று ஈட்டவேண்டிய மக்கள் தங்கள் வாழ்க்கைப்பாட்டிற்காகக் கிருமியின் பரவலுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். மருத்துவத்துறையினர், காவல்துறையினர் உள்ளிட்ட முன்களப் பணியாளர்கள் ஓயாமல் இயங்கிக்கொண்டே இருக்கிறார்கள்.

இக்காலகட்டம் முரண்களின் கூடாரமாக இருக்கிறது. ஓயாமல் உழைக்கவேண்டிய குறிப்பிட்ட துறையினர்கள், இயங்குதலற்று முடங்கியே இருக்கவேண்டிய பொதுமக்கள்; இயல்பாக எழுந்துவிடுகிற கடும்சோர்வு பயம் விரக்தி, கட்டாயம் உள்ளத்தில் கொள்ளவேண்டிய நம்பிக்கை, போராட்ட உணர்வு; ஓய்வினால் தங்களை மீட்டெடுக்கும் மனிதர்கள், உழைப்பில்லா ஓய்வினால் தங்களைத் தொலைத்துவிடும் மனிதர்கள்.

முரண்கள்தான் படைப்பாளிகள் இயங்கவேண்டிய களம். இச்சூழலில் இருவேறு வகையான படைப்பாளர்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள். இக்காலகட்டத்தின் வலியை அப்படியே சற்றும் பிறழாமல் வரலாற்றின் பக்கங்களுக்குக் கடத்தவேண்டிய அசலான எழுத்துக்கள், சமகாலகட்டத்தில் மக்களின் மனதில் சோர்வை அகற்றி நம்பிக்கை வெளிச்சத்தை அடையாளங் காட்டும் உத்வேக எழுத்துக்கள். சமூகத்தின் முரண்களை வென்றெடுக்க இலக்கியவாதிகள் இவ்விரு எழுத்துக்களையும் பதியவேண்டியவர்களாகிறார்கள். இக்கட்டான காலகட்டத்தைப் படைப்பாளன் படைப்புகள் வழிதான் கடக்கவேண்டியிருக்கிறது, கடக்கவைக்க வேண்டியிருக்கிறது. இப்படைப்புகளை வரலாறு ஒருசேர நோக்கும்போது இக்காலகட்டம் குறித்த தெளிவான சித்திரத்தைப் பெற்றுவிடும்.

இந்த மாத இதழில் எழுத்தாளர் தீன் அவர்களுடைய நேர்காணல் இடம்பெற்றுள்ளது. மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர்

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# "இலக்கியம் வாசிப்பாளனை மானுடத்தின் உயர்ந்த பிரதியாக மாற்றிவிடுகிறது.."

**– எழுத்தாளர் எம்.எம்.தீனுடனான நேர்காணல்**



எழுத்தாளர் எம்.எம்.தீன் மானுடர்களின் புற மற்றும் அக வாழ்வின் நுட்பமான சித்திரங்களைப் புனைவின்வழி சாத்தியம் செய்தவர். கதை மாந்தர்களையும் இயற்கையையும் கண் முன் காட்சியாய் விரியச் செய்பவர். திருநெல்வேலியில் முப்பது வருடங்களுக்கும் மேலாக வழக்கறிஞராகவும் எழுத்தாளராகவும் இருந்துவருகிறார். இலக்கியம், வாழ்வு எனப் பலவும் பகிர்ந்துகொண்ட அவருடனான ஒரு நேர்காணல்..

**ஓர் எழுத்தாளன் தான் எழுத ஆரம்பித்த தருணத்தை நினைக்கும்போதெல்லாம் உள்ளுக்குள் அது மலர்த்திவிடும். உங்களை மலர்த்தும் அந்தத் தொடக்ககால எழுத்துச்சூழல் பற்றிக் கூறுங்களேன்.**

எனக்கு எழுத்து எப்போதும் அந்நியமாக இருந்தது இல்லை. நான் ஆசிரியர் மகனாக இருந்ததால், சிறு வயதில் இருந்தே நூல்களை வாசிக்கும் பழக்கம் இருந்தது. ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது எனது ஆசிரியர் மரியநாதன் எங்களுக்கு நூலகம் பற்றி எழுதுங்கள் என்று கேள்வி கேட்டு இருந்தார்.

நூலகத்திற்குச் சென்று பார்வையிட்டது பற்றி எழுதாமல் எனது தந்தையார் வாசிக்கக் கொடுத்த மகாத்மா காந்தியின் சுய சரிதத்தை மனதில் இருத்திக்கொண்டு நூலகத்தில் நடு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்ததாகவும் அது மகாத்மா காந்தியின் சுயசரிதை நூலாக இருந்ததாகவும் அதில் பிடித்திருந்த பகுதியைக் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். மிக நீண்ட கட்டுரையாக அதை எழுதி இருந்தேன். ஆசிரியர் விடைத்தாளை முழுமையாகப் படித்துவிட்டு என்னை முன்னால் வரச் சொல்லி அழைத்தார். நான் சொல்லாததையெல்லாம் எப்படி எழுதலாம் என்று கோவித்துக்கொள்வதைப் போலச் சொன்னார். நான் மிகவும் பயந்து அழுதபடியே நின்றேன். அவர் என் தோளில் தட்டி இப்படித்தான் பதில் எழுதணும் என்று அதிக மார்க் வழங்கினார்.

அதன்பின் ஏழாம் வகுப்பு படித்தபோது எங்களது வகுப்பு ஆசிரியை சண்முகவாழவடிவு அவர்கள் எங்கள் ஊர் பற்றிக் கட்டுரை எழுதச் சொன்னார். நான் அந்தக் கட்டுரையைத் திக்கெல்லாம் புகழ் பரப்பும் திருநெல்வேலிச் சீமையிலே என அடுக்கு மொழியில் எழுதி இருந்தேன். அவர் என்னை அழைத்து முன்னிறுத்தி வாசிக்கச் சொன்னார். இன்னும் இது போலச் சில சம்பவங்கள் நடந்தன. என்னாலும் எழுத முடியும் என்று எனக்குத் தோன்றியது.

பதினாறு பதினேழு வயதுகளிலே பாரதிராஜாவின்பால் ஈர்க்கப்பட்டேன். அவரது பதினாறு வயதினிலே மற்றும் சில படங்கள் வந்திருந்தன. எனக்கு சினிமாவில் பயணிக்க வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டு இருந்தது. சந்தக் கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த எனக்கு சிறுகதைகளும் எழுதத் தோன்றியது. ஆனந்த விகடன், கல்கி போன்ற வார மாத இதழ்களை வாசித்துவிடுவேன். அதன் பிறகு சிறுகதைகளை எழுத ஆரம்பித்தேன்.

1979இல் முதன்முதலாக எனது சிறுகதை மாலைமுரசு இதழில் பரிசு பெற்ற சிறுகதையாக அறிவிப்பு வந்தது. அந்தச் சிறுகதையின் தலைப்பு "மொட்டு". இப்போதும் அந்தக் கதை மகிழ்ச்சியைத் தரும் சிறுகதையாக இருக்கிறது. அதன் பிறகு இதழ்களிலும், கல்லூரி மலர்களிலும் சிறுகதை எழுதி இருக்கிறேன்.

1989 வரை சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்தேன். அதன் பிறகு வழக்கறிஞர் தொழிலில் கவனம் செலுத்தியதாலும், குடும்பக் கடமைகளுக்காகவும் எதுவும் எழுதவில்லை. தொடர்ந்து வாசித்துக்கொண்டிருந்ததால் எனக்குள் எழுத வேண்டுமென்ற ஆர்வம் கனன்றுகொண்டே இருந்தது. இப்போது கடந்த ஐந்து வருடங்களாக எழுதிக்கொண்டிருக்கிறேன். எழுதுவதன் மூலமாக எனக்குள் இருக்கும் எழுத்து வேட்கையைத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.

**விளிம்புநிலை மனிதர்களான பிச்சைக்காரர்கள் பற்றியதாக யாசகம் நாவல் எழுத வேண்டும் என எந்தச் சூழலில் தோன்றியது?**

யாசகம் நாவல் எழுதப்பட்ட காலச் சூழல் வித்தியாசமானது. நான் ஒரு வழக்கில் ஆணையராக நியமிக்கப்பட்டேன். அது ஆற்றாங்கரை தர்காவில் இரண்டு தரப்பினரிடையே யார் கொடி கட்டுவது என்பதைக் குறித்தது. அதில் இருபக்கமும் முடிவு எட்ட முடியாததால் இடைக்காலமாக என்னை ஆணையராக நியமித்துக் கொடி கட்ட உத்தரவிட்டிருந்தார்கள். அப்போது அந்தத் தர்காவில் மூன்று நாள் தங்க வேண்டியிருந்தது. எனது காரியம் முடிந்த பிறகு யாருடனாவது பேசிக்கொண்டிருப்பேன். அப்படி பேசிக்கொண்டிருக்கும்போது, நாவலில் வரும் தக்கரை போன்ற ஒரு மனிதனைச் சந்தித்தேன். அதுதான் நாவல் எழுத அடிப்படைக்



காரணமாக இருந்தது. அந்தக் கதையை ஒருநாள் இரவில் டாக்டர் வண்ணதாசன் அவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். 'இதை நாவலாக எழுது, நன்றாக இருக்கும்' என்றார்கள்.


**யாசகம் நாவலில் வரக்கூடிய பிச்சைக்காரர்களின் வாழ்வைத் தெரிந்துகொள்ள என்ன செய்தீர்கள்?**

பிச்சைக்காரர்கள் பற்றி எழுத வேண்டும் என்று முடிவு செய்துவிட்ட பிறகு அவர்கள் இருக்கும் இடங்களை எல்லாம் தேடிச் சென்றேன். எனது நண்பர் விஜயகுமார் பாக்கியம் திருநெல்வேலி சந்திப்பு பிச்சைக்காரர்களின் வாழ்நிலையைப் பற்றிச் சொன்னார்.

குளோரிந்தா சர்ச் முன்பாக காலையில் இருந்து இரவு வரை அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்கள் தங்களைக் குறித்து எழுதுங்கள் என்று என்னை விரட்டிக்கொண்டே இருந்தார்கள். அப்போது அதையடுத்த ஆர்.சி. சர்ச் பக்கம் ஒரு வடநாட்டுப் பிச்சைக்காரி ஸ்வெட்டர் பின்னிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். தார்ச்சாலையில நடந்துபோகிற பிச்சைக்காரர்களும் எனது கவனத்தை ஈர்த்தார்கள். இப்படியான பல பார்வைகள் அவர்களிடம் நெருங்கிப் பழக வைத்தது. அதன் மூலம் கிடைத்த சில நிகழ்வுகளைமையமாக்கிக்கொண்டுகதையை எழுதத் தொடங்கினேன். வளைத்து கைகளை உயர்த்தி ஒரு மாய நிலையில் தெருவில் நின்று ஆடும் வடநாட்டுப் பிச்சைக்காரி ஸ்வெட்டர் பின்னுவதைப்போல, கதை வளர்ந்துகொண்டே இருந்தது. அதில் பீர் சேவல், சுலைகா கதாபாத்திரங்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளதாகக் கருதுகிறேன்.

**யாசகம் நாவலில் சோத்துப் பெட்டி பாத்திரம் எப்படி உருவானது?**

யாசகம் நாவலை முதலில், வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்த பிறகு பாளையம்கோட்டை பள்ளி வாசலில் யாசகம் கேட்டு நிற்கிற யாசகர்களில் ஒரு ஐந்து பேரை முன்னிறுத்தி எழுதத் துவங்கினேன். அவர்கள்தான் நான் யாசகம் பெற்ற கதை மாந்தர்கள். தோள் பை போட்டுக்கொண்டு கையில் கம்போடு அலையும் தக்கரையும், பெரும் வியாதிக்காரன் சூசையும், முத்திச்சியும், அவளது பார்வையற்ற மகனும், கூடவே சோத்துப் பெட்டியும் வரிசையாக யாசகம் கேட்டு நிற்பார்கள். அந்த சோத்துப் பெட்டி அடிக்கடி எனது வழக்கறிஞர் அலுவலகம் தாண்டி இருக்கும் மூத்த



வழக்கறிஞரைப் பார்க்க வருவான். அவன் நன்றாகப் படித்தவன். திருப்புகழ், சித்தர் பாடல்கள் அனைத்தும் மனப்பாடமாகத் தெரியும். அதற்காக மூத்த வழக்கறிஞருக்கு சோத்துப் பெட்டியையும் பிடிக்கும். அவன் அத்தனை படித்திருந்தாலும் தோளில் பெரிய பை வைத்துக்கொண்டு திருமண மண்டபங்களுக்கு முன்பாக அலைவதைப் பார்த்திருக்கிறேன். வயிறு நிறைந்துவிட்டால் தன் பைக்குள் வைத்திருக்கும் புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டு இருப்பான்.

அவன் பேசுவதைப் பார்த்தால் ஒருவேளை வசதியானவனாக இருந்திருந்தால் பெரும் பேச்சாளியாக இருந்திருப்பான் என்று தோன்றும்.. அவனைப் பார்க்கிறபோதெல்லாம் அவன் குறித்து என் மனதில் ஒரு கிளர்ச்சி உருவாகிக்கொண்டே இருக்கும். அந்த உந்துதல்தான் சோத்துப் பெட்டி கதாபாத்திரம் உருவாகக் காரணமாக அமைந்திருக்கலாம். சில நண்பர்கள் ஆன்மீகம் பேசிக்கொண்டு அது குறித்துப் பல கதைகளோடு உலவித் திரிவர். அவர்களோடு பழகியிருக்கிறேன். அவர்கள் சொன்ன ஆன்மீகக் கருத்துக்களுள் சோத்துப் பெட்டி கதாபாத்திரம் எல்லாவற்றையும் கடந்த துறவு நிலை கதாபாத்திரம் என்பதால் அது கூடுதல் கவனத்தை ஈர்க்கக் காரணமாக இருக்கிறது.

மற்றபடி யாசகம் நாவலில் வரும் எல்லாக் கதாபாத்திரங்களும் அவற்றிற்குரிய தனித்த தகுதியை அடைந்துவிட்ட கதாபாத்திரங்களாகவே அமைந்துவிட்டன. அது நான் விருப்பப்பட்டோ, விருப்பப்படாமலோ நிகழ்ந்துள்ளது என்றுதான் எண்ணிக்கொள்கிறேன்.

**அந்த நாவலை வாசித்தோரின் பிரதிபலிப்புகள் எவ்விதம் இருந்தன?**

யாசகம் நாவல் எழுதி முடித்த பிறகு இந்த நாவல் மக்களிடம் போய்ச்சேரும் என்று நான் எண்ணவில்லை. பிச்சைக்காரர்கள் குறித்து என்ன வாழ்க்கை இருக்கப் போகிறது என்று வாசகர்கள் எடுத்த எடுப்பிலேயே கழித்துவிடக்கூடும் என்றுதான் எண்ணினேன். இன்னும் சிலர் இதில் படிப்பதற்கு ஒன்றுமே இல்லை என்று நிராகரிப்பார்கள் என்று பயந்தேன். ஆனால் எனது பயம் பொய்யாகிப்போனது. படித்த வாசகர்கள் எல்லாம் நிறைவோடு பேசினார்கள், எழுதினார்கள்.

நாவலை வாசித்த பலரும் நான் உண்மையிலேயே பிச்சைக்காரர்களோடு ஒரு வருடமாவது வாழ்ந்திருப்பேன் என்று நம்பினார்கள். அதையும் விட மேலாக, நாவலை வாசித்த பலரும் பிச்சைக்காரனாகத் தான் உணர்கிறேன் என்று கூறினார்கள். சில நண்பர்கள் ஒரு நாளாவது அந்த அனுபவத்தை உணர வேண்டும் என்று சொன்னார்கள். ராசபாளையம் எழுத்தாளர் கலைமாமணி கோ.ம.கோதண்டம் அவர்கள் நாவலைப் பற்றி விமர்சித்துவிட்டு 'நான் ஒரு காவி வேஷ்டியையும், துண்டையும் எடுத்து வைத்திருக்கிறேன். அதோடு வெளியேறி ஒரு பிச்சைக்காரனாக வாழ விரும்புகிறேன்' என்று சொன்னார். அதுவும் இந்த நாவலுக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதுகிறேன். அதைவிடவும்பட்டினத்தாரும், பத்ரகிரியாரும் இந்த நாவலுக்குரிய பிச்சை எடுப்பது குறித்து நிறைய விவரங்களைச் சொல்லித் தந்தார்கள். கொங்கணச் சித்தர் முன்பு அமர்ந்திருந்த சட்டை முனியாக அமர்ந்து இருந்தேன். அந்த மனநிலையே நாவலை வளர்த்துக்கொண்டு போனது. மற்றபடி நாவலை நானாக எதுவும் செய்துவிடவில்லை.

**"இருள் வேய்ந்த இரவுப் பந்தலை யாரோ கிழக்கிலிருந்து பிரித்துக்கொண்டு வந்ததைப்போல இருந்தது விடிவெள்ளி" என்று உங்கள் படைப்புகளில் பல இடங்களில் இப்படியாக வெளிப்படும் அழகியல் திட்டமிட்டு வைப்பதா? அல்லது படைப்பு தன் போக்கில் அதுவாகவே எழுதிக்கொள்கிறதா?**

படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்குகிறபோது, குதிரை வண்டிக்கு முன்னால் ஓடுகின்ற குதிரையைப் போல, முன்னால் பார்த்தபடி ஓடிக்கொண்டே இருப்பான். ஆனால் சேணம் கட்டாத குதிரையாக அவன் பார்வை விரிந்துகொண்டே இருக்கும். போகிற வழியில் மலையும் மரங்களும் மண்ணும் மலர்களும் அவன் பார்வையில் படும். அதை வேறொரு வகையாக விவரித்து வாசகனுக்கு ஒரு புதிய ருசியைக் கொடுக்க விரும்புகிறான். விரிகின்ற அவனது பார்வையில் மண்ணின் வாசமும், இயற்கையின் நேசமும் தானாகவே வெளிப்படும்.

அந்த வகையில், நானும் ஒரு வண்ணத்துப்பூச்சியைப் போல ஒவ்வொரு மலராக இந்த வாழ்க்கையை உற்றுப் பார்க்க விரும்புகிறேன். அப்படிப் பார்க்கிறபோது எழுத்து தன்னையும் ஒரு மலரென எண்ணிக்கொள்கிறது. படைப்பாளனுடைய பங்கு என்னவென்றால் அந்த மலர் விரிவதை வாசகனுக்கு முன் வைப்பபதே. எனது எழுத்துக்களும் அப்படியான பார்வையோடு இருக்க விரும்புகிறேன்.

படிமங்களையும், உவமானங்களையும் நான் நினைத்துக்கொண்டு எழுதுவது இல்லை. அது அந்த இடத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்யும் இடத்திற்கு அந்த நேரத்தில் சிந்தனையில் விரிவதைத்தான் எழுதி வருகிறேன். இந்தப் படிமம் மட்டுமல்ல மற்ற எல்லாக் கருத்துக்களும் உவமானங்களும்கூட இயல்பாக என் மனதில் பூக்கும் மலர்களாகத்தான் இருக்கின்றன. மற்றபடி கதைக்கான இயல்புத் தன்மை மாறாதிருக்கும் உவமைகளையே வைக்க விரும்புகிறேன். இந்தப் படிமம்கூட அப்படித்தான் நிகழ்ந்தது. இது பலருக்கும் பிடித்த படிமமாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

**ஒரே ஒரு இரவை நாவலாக ஆக்க முடியுமா? இப்படியான ஒரு எழுத்து முறையை முன்னிறுத்துவதற்கு வேறு ஏதாவது நாவல் உங்களுக்குக் கை கொடுத்ததா அல்லது வழிகாட்டியதா?**

சந்தனத்தம்மை நாவலின் கதை மனைவியைக் கொலை செய்துவிட்டு, உழல்கிற, மனச்சாட்சியோடு கதறுகிற ஒரு கதையாக இருப்பதால் அந்த நாவலை ஓர் இரவுக்குள் எழுத வேண்டிய கட்டாயம் இருந்தது. இறப்புக்குப் பின் கதை தொடங்குவதால் பிரேதத்தை எடுப்பதற்குள் கதையை முடித்தாக வேண்டும். அந்த அடிப்படையில் கதை எழுதுகிறபோது இரவுகளின் பரிணாமங்களைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பத்து மணிக்குள் மின்மினிப் பூச்சிகள் ஓய்வெடுக்கச் செல்லும். தேய்பிறை நிலவு சீக்கிரமாக நடு உச்சிக்கு வந்துவிடும். காலைப்பொழுதில் மனிதர்களின் அரவம் கேட்கத் துவங்கும். இப்படியான இயற்கை நிகழ்வுகளுக்குள் அவன் படும் இன்னல்களைச் சொல்லித் தீர்க்க வேண்டியிருந்தது. அதுதான் ஓர் இரவினைப் பல பகுதிகளாகக் கிழித்துப்போட்டது.

நான் அவற்றின் காலத்திற்கேற்ப அத்தியாயங்களுக்குப் பெயர் வைத்தேன். யாசகம் நாவலில் வரும் இடங்களுக்குப் பெயர் வைத்ததைப்போல, சந்தனத்தம்மை நாவலுக்குக் கால வகை குறித்த தலைப்புகள் வேறொரு பரிணாமத்தைக் கொடுத்ததாகத் தெரிய வருகிறது. காலத்தைப் பிரித்தவர்கள் மனித குலத்தின் வெற்றியாளர்களாக மாறி இருக்கிறார்கள். பொழுது, சாமம், நாழிகை என்று முதலில் பிரித்தவர்கள் இப்போது நுண் வினாடியில் (Micro Seconds) வந்து நிற்கிறார்கள். உலகம் புகழும் உயர்ந்த ஓட்டக்காரன் நுண் வினாடிகளிலேயே வெற்றி பெறுகிறான். மதங்களும் ஆறுகால பூஜை, ஐந்து வேளை தொழுகை, இரு வேளை பிரார்த்தனை என்று நாளைப் பிரித்து வைத்தார்கள். பிரித்து வைக்கிற பகுதிகளெல்லாம் அவர்களை, அந்தக் கால கட்டத்தில் சிறிதுசிறிதாகத் தங்கள் செயல்களைச் செய்து முடிக்க உதவியது. காலத்தை, நாளை பிரித்துப் பார்க்கிற அம்சம் இந்த நாவலில் அதன் போக்கில் நிகழ்ந்தது என்றாலும் அது நாவலின் மேன்மைக்குத் துணை புரிந்தது.


மிகச்சிறந்த விமர்சகர் தோழர் மணிமாறன் அவர்கள் இரவின் காலங்களை வகைப்படுத்தியமை குறித்து மதுரை விமர்சனத்தில் முன் வைத்தார்கள். அவர்களுக்கும் இந்தப் பதில் சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

**மாறவர்மன் குலசேகர பாண்டியன் நூலுக்கு உங்கள் உழைப்பு அபரிமிதமானது. அந்த நூலுக்காக சரித்திர ஆய்வு மேற்கொள்ள காரணமாக இருந்தது எது?**

பாண்டியப் பேரரசின் கடைசிப் பேரரசர் மாறவர்மன் குலசேகரன். அவர் காலத்துப் பல நிகழ்வுகள் பிரமிக்கத்தக்கன. அவரது ஆட்சி அக்கால உலகப் பேரரசுகளோடு இணைந்திருந்தது. மார்க்கோபோலோ வந்த காலம் அது. சீனத் தூதுக்குழுக்கள் மூன்று தடவை வந்தன. பாண்டியப் பேரரசின் தூதுக்குழு சீனாவிற்குச் சென்றது. அவன் காலத்தைய கல்வெட்டுகள் தென்னகம் முழுவதிலும் இருக்கின்றன.

இலங்கையை வென்று புத்தர் புனிதப் பல்லைக் கவர்ந்து வந்தவன். இலங்கை மன்னன் அவரது அரசவையை வணங்கி புனிதப் பல்லை வாங்கிச் சென்றான் என்பது வரலாறு. நெல்லையப்பர் கோவில் பிரகாரத்தைக் கட்டியவன். பாண்டியர் காலத்து முன் முகப்பு கோபுரங்களைக் கட்டியவன். தனி ஈழத்தை ஏற்படுத்தியவன். அவரைக் குறித்த தனித்த எந்த வரலாற்று நூலும் இல்லை. எனவே ஒரு வரலாற்று மாணவனாக இருந்து இந்த நூலை எழுதினேன். அந்த நூலின் முன்னுரையிலும் தெரிவித்துள்ளேன். திருநெல்வேலியை ஐம்பது வருடங்கள் ஆட்சி செய்த ஸ்ரீவல்லபன், அழகம் பெருமாள், மற்றும் நெல்லை தென்காசி பாண்டிய அரசர்களைப் பற்றி எழுத எண்ணியுள்ளேன்.

ஊத்துமலை ஜமீனை நல்ல முறையில் நிர்வகித்து வந்த ஊத்துமலை மன்னர் இருதாலய மருதப்ப பாண்டியர் அவர்களின் துணைவியார் பட்டத்து ராணி சிவஞான நாச்சியார் ஐம்பது வருடங்கள் ஆட்சி செய்தது குறித்தும் நூல் எழுத எண்ணியுள்ளேன். இது நெல்லைச் சீமையின் வரலாற்றைச் சொல்லும் சிறு முயற்சியாக இருக்கும் .



**உங்கள் படைப்புகளில் சொந்த (அ) உறவினர் வாழ்க்கை ஊடாக வந்து போகிறதா?**

நான் எப்போதும் உறவுகளோடும், நட்புகளோடும் வாழ விரும்புகிறேன். மேலப்பாளையம் உழவர் சந்தையில் சிவப்பு பொன்னாங்கண்ணிக் கீரை மூன்று கட்டு வாங்கினேன். ‘எதற்கு மூன்று கட்டு வாங்குகிறீர்கள்?’ என்று கீரைப்பாட்டி கேட்டாள். நான் ‘நட்டு வளர்க்க’ என்று சொன்னேன். பாட்டி சொன்னார், ‘இந்தா இருக்க பாரு கௌளி, அதை இப்படி எடுத்து நட்டு வைக்கணும்’ என்று சொல்லிக் காட்டினாள். நான் வாங்கிக்கொண்டு வருகிற வழியில் அந்தச் சொல் மறந்துபோனது. நீண்டதூரம் பயணித்துத் திரும்ப அந்தப் பாட்டியிடம் ஓடோடிப் போய் எப்படி நட்டு வைக்க வேண்டுமென்று சொன்னீர்கள் எனக் கேட்டேன். அவருக்கு அந்தச் சொல் பெரிதில்லை. வழக்கத்தில் உள்ளது. அவரிடம் அந்தச் சொல்லைக் கேட்டபோது, மீண்டும் நட்டு வைப்பதைப் பற்றிப் பாடம் சொன்னார். கௌளி என்ற சொல்லை மீண்டும் வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அந்தச் சொல்லை வீட்டுக்கு வருகிறவழியில் புடம்போட்டுக்கொண்டேன். இன்றளவிலும் பாதுகாப்பாக அந்தச் சொல் என்னிடம் இருக்கிறது.

கிராமத்திற்கு நான் சென்றிருந்தபோது, பழைய புல்லுக்கட்டு பெருக்குமாறைப் பார்த்தேன். கடைக்காரர் சொன்னார். ‘இது கொடிப்புல் வகையைச் சார்ந்தது. ஒரு பர்லாங் நீளத்திற்குக் கொடி ஓடிக்கிடக்கும். காய்ந்த பிறகு அதைப் பிடுங்கிக்கொண்டால் ஒரு பர்லாங் நீளத்திற்கு வரும். கையில் பெரிய பந்து போல உருண்டு விடும். ஒரு புல்லுக்கட்டு பெருக்குமாறுக்கு போதும்’ என்று சொன்னார்.

இதைவிட இலக்கியத்தை நான் எங்கிருந்து பெற்றுவிட முடியும். யார் என்னோடு பேசினாலும் அந்தப் பேச்சில் ஒரு இலக்கியச் சொல்லாடல் கிடைக்காதா என்று மனம் தவிக்கிறது. வீட்டில் துணைவியாரும், பிள்ளைகளும் பேசுகிற வித்தியாசமான உரையாடல்களை நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

என் கண் முன்பாக ஆவாரம்பூக்களும், எருக்களைப் பூக்களும் வண்டுகளை

வர வைத்தபடி ஆடிக்கொண்டேதான் இருக்கின்றன. என்னைச் சுற்றிய உறவுகள், நட்புகள் எனக்கு இலக்கியத்தைத் தந்துகொண்டே இருக்கிறார்கள். எல்லோரும் எனக்கு இலக்கியத்தைக் கற்பித்துக்கொண்டே இருக்கிறார்கள். அதுவே இந்த எழுத்தினை வடிவமைக்கும் என்றால் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**நீங்கள் எழுதியவற்றில் பிடித்தமான நிறைவைத் தருவதாக எந்தப் படைப்பு இருக்கிறது?**

என் முதல் சிறுகதைத்தொகுப்பு எம்ஜிஆருடன் பேசிக்கொண்டிருக்கிறேன் எனக்கு முழுநிறைவைத் தந்த தொகுப்பாகும். சந்தனத்தம்மை நாவலில் நான் எழுதிய விதம் என்னை எப்போதும் சுயமோகம் கொள்ள வைக்கிறது. இன்னும் மேன்மையான படைப்பை நான் எழுதவில்லை என்று நினைக்கிறேன். ஒரு தரம் வாய்ந்த படைப்பை வாசகனுக்குக் கொடுக்க வேண்டும். இனிவரும் படைப்புகளில் எனது தரம் குறித்து அளவுகோல் உருவாகலாம். அதன் பிறகுதான் சிறந்த படைப்பு எதுவென வாசகர்கள் அறிய முடியும்.

தரம் வாய்ந்த ஒரு படைப்பைப் படைப்பாளன் கொடுத்துவிட்டால், அது அவன் வாழ்வுக்குப் போதுமானது என்று எண்ணுகிறேன். அதை நோக்கியே என் பயணம் தொடரும். அதில் சிறந்த படைப்பு எதுவென வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**உங்கள் வாசிப்பு உலகம் எப்படியானது?**

வாசிப்பு உலகம் என்று சொல்கிற வார்த்தையே சரியானது. வாசிக்கிறவன் உலகம் முழுவதும் பயணிக்கிறவனாக மாறிவிடுவான். ஆங்கில இலக்கியங்களைப் படிக்கிறபோது, இங்கிலாந்து தேசம் எப்படி இருந்தது என்பதை அவனால் உணர முடியும். ஜேன் ஆஸ்டின் அவர்களினுடைய நாவல்களைப் படிக்கிறபோது, பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்து கிராமம், அங்கிருந்த ஆண் பெண், அவர்கள் காதல், அதில் ஏற்படும் சிக்கல்கள், அங்கு நடக்கும் கேளிக்கைகள் எனப் பலவற்றையும் உணர முடியும். அதே போல ரஷ்ய நாவல்களைப் படிக்கும்போது ரஷ்யாவின் சதுப்பு நிலக் காடுகள், அங்கு இருக்கிற மலர்கள், மரங்கள், அங்கு இருக்கிற பனி, உறைந்துபோகும் நதி என எல்லாவற்றையும் காணவும் உணரவும் முடியும்.

முரகாமியின் நாவல்களைப் படிக்கிறபோது அவன் வாழும் நாட்டின் சூழல்களை நாம் புரிந்துகொள்ள முடியும். மலையகத்தில் வாழ்கிற மக்களின் வாழ்க்கை நாகலாந்து நாவலாசிரியர் ஈஸ்ட் இன் ஹையர் என்பவரின் எழுத்துக்கள் மூலம் தெரிய வரும். குருதீஸ் அகதி வேதனைகளை அந்த நாட்டிலிருந்து எழுதும் நாவலாசிரியர் படம் பிடித்துக் காட்டிவிடுவார். ஆக வாசிப்பு என்பது உலகம் சார்ந்தது. வாசிப்பு குறித்துப் பலரும் பல நூல்களை எழுதி இருக்கிறார்கள். சுவாமி சிவானந்தர் எப்படி வாசிக்க வேண்டும் என்று சொல்கிறபோது, அது ஆன்மீகத்தின் அடுத்த பகுதியாக இருக்கிறது.





நியூ மேன் வாசிப்பைக் குறித்தும், அறிவைக் குறித்தும் பேசுகிறபோது நம் மனது அறிவியலைத் தாண்டிக்கொண்டு செல்கிறது. வாசிப்புப் பழக்கமுள்ள மனிதன் எப்போதும் தன்னைப் புதியவனாக உணர்கிறான். ஒவ்வொரு வாசிப்பும் அவனைப் புதிதாகத் துலக்குகிறது. புளி போட்டுத் தேய்த்த குத்துவிளக்கு போல அது மிளிரச் செய்யும். என்னைப் பொறுத்தவரையில், நான் சிறுவயதில் இருந்து தீவிரமான வாசகனாகவே இருந்துவருகிறேன்.

எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும்போது வீரவநல்லூரில் நூலகராக இருந்த வே.தங்கையா என்னை அழைத்து நூலக உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டார். என் வாசிப்பைப் பார்த்துவிட்டு எனக்குக் கிடைத்த முதல் அங்கீகாரம் அது. தொடர்ந்து நான் நூலகத்திலும், வெளி இடங்களிலும் நூல்களை வாசித்துக்கொண்டே இருந்தேன். என்னைச் சுற்றி இருக்கிற மனிதர்கள் எல்லோரும் என்னை ஒரு தொடர் வாசிப்பாளனாகவே அறிந்திருப்பார்கள். இதுவரையில் எந்த ஒரு காலத்திலும் வாசிப்புப் பழக்கத்தை விட்டதே இல்லை. சில சமயம் அது எனக்கு எதிரியாகவும் இருந்திருக்கிறது. பல இழப்புகளையும் நான் சந்தித்திருக்கிறேன். ஆனாலும் வாசிப்பு எப்போதும் என்னை

அழைத்துச் செல்கிறது. அதன் வழியே நான் போய்க்கொண்டே இருக்கிறேன். வாசிப்பு இல்லாமல் எந்த மனிதனும் முழுமையாக முடியாது. தன்னை ரசித்துக்கொள்கிற ஆழக்கதி அதில் எப்போதும் இருக்கிறது. அந்த இசையை நுகர்ந்தவன் அதை விட்டு வெளிவருவதே இல்லை.

**விருப்பமான எழுத்து என்று குறிப்பிட்ட எழுத்தாளரைக் குறிப்பிட முடியுமா?**

யாரும் வாசிப்பாளன் நிலையில் இருந்து இதற்கு ஒரு நிறைவான பதிலைத் தர முடியாது. ஏனென்றால் வாசிப்புத் தன்மை நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கிறது. அம்புலிமாமாவை ஆசையோடு வாசித்த காலம் ஒன்றாக இருந்தது. அதன் பின்பு வேடிக்கைக் கதைகள், படக் கதைகள், துப்பறியும் நாவல்கள் என வாசிப்பு மாறிமாறிப் பயணித்து இப்போது ஒரு நிலைக்கு வந்திருக்கிறது.

ஒரு காலத்தில் மிகவும் பிடித்த குறிஞ்சிமலர் போன்ற லட்சியவாத நாவல்கள் இப்போது எனது வாசிப்பிற்கான கவனத்தைப் பெறவில்லை. ஆனால் சில நாவல்கள் தொடர்ந்து என்னை வசீகரித்துக்கொண்டே இருக்கின்றன. குறிப்பாக கி.ராவின் கரிசல் காட்டுக்கதைகள் மனதில் ஒரு மகிழ்வைத் தந்துகொண்டே இருக்கிறது. ஒரு வாழைப்பழத்தை உறித்துச் சாப்பிடுவது போல எளிதான அவரது எழுத்தும் இனிப்பான அந்த நடையும் நெசமான கரிசல் காட்டு மனிதர்களின் வாழ்வும் எப்போதும் வாசிக்கத் தூண்டிக்கொண்டே இருக்கின்றன. கரிசல் காட்டிற்குள் 99 ஆண்டுகள் குந்தி இருந்த ஒரு மனிதனின் பார்வைகள் பார்க்கும்போதெல்லாம் வியப்பைத் தருகிறது.

வண்ணநிலவனின் ரெனியஸ் ஐயர் தெரு நாவல் முழுவதும் கவித்துவமாக எழுதப்பட்ட ஒன்று. படிக்க படிக்க இன்பம் பயப்பது.

அதைப் போல வண்ணதாசனின் சிறுகதைகளில் இலையின் பின்பக்க நரம்புகளைப் பற்றியும், குளித்துவிட்டு வந்த பெண்ணின் தோளில் முறுக்கிக் கிடந்த துணிகள் பற்றியும், இறப்பு வீட்டில் இருக்கிற மௌனத்தைப் பற்றியும், பணப்பெட்டியில் கீழே உள்ள அடுக்கில் இருந்த மூக்கம்மாள் ஆச்சியின் புகைப்படம் பற்றியும் நுண்ணிய பார்வையோடு அவர் எழுதுகிற எழுத்து மனிதனின் ரத்த நாளங்களுக்குள்ளாகப் பயணித்து நம்மை வேறொரு மனிதனாக மாற்றிவிடுகிறது.

வீட்டிலிருந்து புறப்பட்ட நடைப்பயணத்தில் ரெண்டு கிலோ மீட்டர் தூரம் பயணித்து வீடு திரும்புவதற்குள் பார்க்கும் எல்லாக் காட்சிகளையும் நுண்ணிய படிமமாகச் சொல்வதில் நம்மை வேறொரு கிரகத்தில் இருப்பவர்களாக மாற்றிவிடும் அவரின் சிறுகதைகள்.

அதைப் போலவே ரஷ்ய எழுத்தாளர் சிங்கிஸ் ஐத்மாத்தவ் அவர்களின் நாவல்கள் படிக்கப் படிக்க நம்மைக் கண் கட்டி வாய் பொத்தி அவரின் சுண்டெலிகளாகப் பயணிக்க வைத்துவிடும். ருஷ்ய மாய ஜால வித்தைக்காரனாக, தனது ஊதுகுழல் இசையால் வாசகர்களைத் தன் உலகத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவார். அப்படியான எழுத்துக்கள் நம்மை ரசிக்கவும் ருசிக்கவும் வைக்கின்றன.

தகழியின் செம்மீனும், முகுந்தனின் மய்யலிக்கரையோரம் நாவலும் எனக்குப் பிடித்தமான மலையாள நாவல்கள். அழகான நாவல்களை வாசிப்பது என்பது இதமான மனநிலையை உருவாக்கித்தருகிறது. அந்த வகையில் வாசிப்பு ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ரசவாதத்தை உருவாக்கிவிடுகிறது.

**வெகுஜன மக்களிடம் இலக்கியம் என்ன செய்யும்?**

இலக்கியம் என்பது மனித மனத்தின் விளையாட்டுகளுள் ஒன்று. மனம் சிலவற்றை விளையாடிக் களிக்க விரும்புகிறது. வாசிப்பற்ற மனங்கள் தூர்ந்துபோன கிணறுகளாக மாறிவிடுகின்றன. தினம் தினமும் சேந்திக்கொண்டு வரும் கிணற்று நீர் புத்தம்புதியதாக இருக்கும். அந்த வகையில், இலக்கியம் வாசிப்பாளனை மானுடத்தின் உயர்ந்த பிரதியாக மாற்றிவிடுகிறது. இலக்கியம் யாதொன்றையும் வயிற்றுக்குத் தருவதில்லை என்பவர்களைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. வயிற்றுக்கு மேலேதான் இதயத்தின் நிறைதல் இருக்கிறது. இலக்கியம் எப்போதும் மனிதனை மனிதனாக வைத்திருக்கிறது. அது எல்லா ஆக்கத்தையும்

தரும். முயற்சி திருவினையாக்கும். இதற்கு மேல் வேறென்ன வேண்டியிருக்கிறது.

**இஸ்லாமியச் சமூகத்திற்கும் பெரும்பான்மைச் சமூகத்திற்கும் இடையேயான உறவுகளைத் தமிழ் இலக்கியம் பதிவு செய்திருக்கிறதா? இஸ்லாமிய வாழ்வியல் குறித்த பதிவுகள் எவ்வாறு இருக்கின்றன?**

தமிழகத்தில் இஸ்லாமிய மக்களும் இந்துச் சகோதரர்களும் ஒரு தாயாதி உறவு முறை பேணுகிற விதத்தில் மாமன், மச்சான், சீயான், சித்தப்பா, தாத்தா என்கிற உறவுமுறைகளால் ஒருவருக்கொருவர் அழைத்துக்கொண்டு சுற்றத்தார் போல பழகிவருகிறார்கள். இன்னும் கிராமங்களில் மாமன், மதினியார், சித்தப்பா என்று தலைமுறைகளாக உறவுமுறைகளைச் சொல்லி வாழ்ந்துவருகிறார்கள்.

மாமன், மதினி என்ற உறவுமுறைகள் சொல்லி இன்றளவிலும் கிராமத்தில் எல்லாச் சாதி சமயத்தோடும் கேலி செய்யும் பழக்கம் இருந்து வருகிறது. தமிழ் பேசும் முஸ்லீம்கள் ஒரு காலத்தில் இந்து சமயத்தில் இருந்து மதம் மாறியவர்கள்தாம். இந்த உறவுமுறைகள் இன்றளவும்அந்தப்பூர்வீகத்தைநிலைநாட்டும் சொல்லாடல்களாக இருந்துவருகின்றன.



ஆனால், இது குறித்து யாரும் தங்களது படைப்புகளில் பேசி இருக்கிறார்களா என்று தெரியவில்லை. சிலர் இது குறித்துச் சிறிய அளவில் எழுதியிருக்கக் கூடும். இந்தப் பண்பாட்டு வாழ்வியலைப் பதிவு செய்ய வேண்டியது இதைத் தொட்டு எழுதுகிற படைப்பாளிகளின் கடமையாக இருக்க வேண்டும். அது சமூக நல்லிணக்கத்திற்குப் பயன் தரும்.

மற்றபடி பாரதியார் எழுதிய "சந்திரிகையின் கதை" நாவல் தொட்டு இன்று வரை பல நாவல்களில் முஸ்லீம் கதாபாத்திரங்கள் குறித்து எழுதப்பட்டுள்ளன. அதை அழுத்தமாக, உறவுமுறை பேணும் கதாபாத்திரங்களாக.. இஸ்லாமியர்கள் தொட்டு எந்தப் படைப்பாளிகளும் பதிவு செய்யவில்லை என்றே தெரிகிறது. இதை நானும் மற்ற படைப்பாளிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கேள்விக்குப் பதிலாகிறது.

தமிழக இஸ்லாமிய வாழ்வியல் குறித்த பெரும் கதையாடல்கள் இன்னும் தோன்றவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பெருவிளை மீரான் மைதீனும், தோப்பிலாரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த வாழ்க்கை குறித்து மலையாளப் பகுதியோடு இயைந்த புதினங்களைத் தந்து இருக்கிறார்கள். அதைத் தாண்டிய இஸ்லாமிய வாழ்வென்பது பெரும்பான்மைச் சமூகம் அறியாத ஒரு வாழ்வியல். திருநெல்வேலி முஸ்லீம்களும், வேலூர் முஸ்லீம்களும், தஞ்சை முஸ்லீம்களும் முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரத்தைக் கொண்டவர்கள். பெரும் எண்ணிக்கையில் வாழும் முஸ்லீம் கிராமங்களின் வாழ்வியல் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. யாரும் அறியாதது. அந்த வாழ்வியலைப் பலரும் பொதுச் சமூகத்தின் முன்பு அழகாக வைத்தல் வேண்டும். அதற்கான படைப்பாளர்கள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் உருவாக வேண்டும். மற்றபடி இஸ்லாமிய வாழ்வியல் குறித்து எனக்குத் தெரிந்த அறிந்த அனுபவங்களை நாவல்களாக எழுத வேண்டும் என்பது என் மனதின் அடியாளத்தில் இருக்கும் ஆசைதான். சில நாவல்களை எழுதிய பிறகு அது குறித்துத் தகுந்த தயாரிப்போடு எழுத வேண்டுமென எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

**சாகித்ய அகாதமி விருதாளர் எழுத்தாளர் வண்ணதாசன் அவர்களும் நீங்களும் அடிக்கடி சந்தித்துக்கொள்கிறீர்கள். உங்கள் உரையாடலில் அதிகமாக இடம்பெறுவது எது?**

அது எனக்குக் கிரியா ஊக்கியாக இருக்கிறது. எப்போதும் அவருடன் பேசிவிட்டுத் திரும்பும்போது அவர் சொன்ன ஒரு உவமானம் என் மனதில் தோன்றியபடியே இருக்கும். அவர் சொன்ன உவமானம் இதுதான்.. “செவலை மண்ணிலிருந்து அப்போதுதான் பிடுங்கப்பட்ட பனங்கிழங்கு போலவும், கசாப்புக்கடைக்காரன் வெட்டிக் கொடுக்கும் புதிய கறித்துண்டுகளைப் போலவும் எப்போதும் புதிதாகவே இருக்கும்.” இது இலக்கியத்தைக் குறித்து அவர் சொன்னது. அவருடன் பேசிவிட்டுத் திரும்பும்போது இந்த உவமானம் போல அவருடனான பேச்சு என்னைப் புதியதாக்கும்.



ஒரு மாபெரும் எழுத்தாளர் எப்போதும் மனிதப் பண்பாளராய் இருக்க முடியும் என்பதற்கு அவர் சான்றாய் இருக்கிறார். நான் அறிந்த வண்ணதாசன் எழுத்தாளர் மட்டுமல்ல.. காலம் தவறாதவர். உதவும் சிந்தனையாளர். உண்மையாய்ப் பேசுகிறவர். அவரிடமிருந்து நான் இலக்கியத்தை மட்டுமல்ல பலவற்றையும் படித்துக்கொண்டிருக்கிறேன். இது இறைவனும் இயற்கையும் அளித்த பாக்கியம்.

**இப்படியான கொடுங்காலத்தில் சமகாலத்தைப் பற்றிப் பதிவு செய்யாமல் எழுத்தாளர்கள் நழுவிப்போவது பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?**

ஒரு எழுத்தாளன் உரைகல்லைப் போல இருப்பவன். பழைய நகைகளுக்கு மச்சம் பார்த்துச்சொல்பவனாகவும், மூஸ் தங்கத்தைப் பற்றிச் சொல்பவனாகவும் இருக்கிறான். முக்காலத்தையும் தன் அனுமானத்திற்குள் கொண்டு வருகிறான். அவன் உரசலுக்கு எந்தத் தங்கம் வருகிறதோ அதை உரைத்து அதன் தன்மையைச் சொல்கிறவன். அவன் கால பேதத்திற்கு அப்பாற்பட்டவனாக இருப்பான். அவன் பார்வையில் படுகின்ற விசயங்களை கூர்மையாக உள்வாங்கிக்கொண்டு அதை வெளிப்படுத்துகிறவனாக இருப்பான். எந்தக் காலத்தைப் பற்றி எழுதினாலும் அதில் அவன் மனம் நிறைந்து வழியும். ஆனால் இன்றைய அவலங்கள் குறித்து எழுதுவதென்பது இன்றைய மனசாட்சியின் குரலாக இருக்கின்றது அல்லது அவன் ஒரு அவலங்களற்ற தர்ம உலகை உருவாக்க விரும்புகிறான். அப்படிப்பட்ட மனசாட்சியுள்ளவர்கள் நிகழ்கால அவலங்களில் கொதித்துப்போகிறார்கள். அந்தக் கொதிப்பு படைப்பாக மாறுகிறது. அப்படிப்பட்ட திடகாத்திரமான படைப்புகள் நிகழ்காலத்தின் மனசாட்சியாக ஒலிக்க வேண்டும். ஆனால் எல்லாப் படைப்பாளிகளையும் நிகழ்காலத்தின் துயரங்களைப் படைப்பது குறித்து கட்டாயப்படுத்த முடியாது. அவன் மனம் லயித்த விசயங்களை முன்வைக்கவே விரும்புகிறான்.

நிகழ்காலத்தின் அவலங்களை எழுதுகிற காத்திரமான படைப்புகள் சமூக முன்னேற்றத்திற்கு அவசியமானவைதாம். பல காத்திரமான வாழ்வின் துயரங்கள் ஒரு படைப்பாளனால் புதிய தளத்தில் உலகின் முன் வைக்கப்படுகிறபோது அது சமூக முன்னேற்றத்திற்கான மக்கள் இலக்கியமாக மாறிவிடுகிறது. அதை எழுதுகிற படைப்பாளன் சமூகப் போராளியாக மாறி நிற்கிறான். அடுத்த தலைமுறைக்கான வாழ்வை உருவாக்குபவனாகவும் படைப்பாளன் திகழ வேண்டும். அதுதான் படைப்பாளியின் மூலமந்திரமும் ஆகும். வெற்றிகரமான எந்தப் படைப்பாளியும் நிகழ்கால அவலங்களைத் தொட்டு எழுத வேண்டும். எழுத்து செய்கிற புனிதக்காரியம் அது. அதுவே என் ஆசையும்கூட.

கவி : பாரதிநிவேதன்
சித்திரம் : அன்பழகன்

# தேநீர் அருந்தும் கலை



1.
வாஞ்சையுடன் பரிசளிக்கப்பட்டிருக்காத
தோளினை
முயங்கியிருந்த வாழ்க்கைப் பின்னல்
ஒரு குளிர்கால மேகம் வடிந்து அறுத்துவிட்டது
பின்னலைப்பற்றி வானதூதர்களின் இக்கூட்டுப்
பிரார்த்தனை முன்னறிவிக்கப்படவில்லை

புதுவாசலில் முறைமை செய்ய வந்துவிட்ட
காகங்களுக்கு
குவளைக்குள் கல்லாக விழ
கூழாங்கற்கள் மறுத்துவிட்டன

தூதர்களின் ஒய்யார இசை
கொஞ்சம் மாத்திரைகளை முழக்கயிறை
நடைபாதையில் அல்லது தண்டவாளத்தில்
நீட்டிக்கொள்வதைச் சிரித்து
ஆளுயரக்கலனில் ஒயின் ஊற்றி
குளிக்கவும் மீந்திருக்கிறது

குதிரையின் குளம்பொலி நின்று
தூசிக் கிளம்பாத மைதானம்
தூதர்கள் விலகிவிட்ட புரிதல்
இனி தன் கால்களால் கடக்க வேண்டும் திசை
கையில் மனச்சிம்னி

சேகரத்தால் கைவழுக்கும் கூழாங்கல்
தன்னையே எறிந்து கனிய
இப்போது காட்டின் ஓசை
மலையிலிருந்து நதிக்கும்
நதிக்குத் தெரியும் விளிம்பிற்கும்
வானம் ஒட்டிக்கொண்டிருக்கும் விதானத்திற்கும்
இடைப்பட்டால் அப்பறவைக்கும்

2.
மிருதுவளிடமிருந்து எப்போதும் பனிப்புகை

அவளுடன் தேநீர் அருந்துகையில்
கோப்பையில் பனிக்கட்டியை உடைக்க நேர்கிறது
அவளுடன் பங்குபெற்ற போதை வெளியில்
காலம் உறைந்து
மூச்சு பாம்பாக வெளியேறிவிட்டது

ரொட்டியைப் பகிர்ந்துகொள்கிற நேரம்
போதுமானதாக இருப்பதால்
காகித மலர்களில் வண்டுகளை அமரச் செய்து
விடுகிறாள்
இன்றைய இரவில் போர்வைக்குள்
தும்பியாகவும் அவள் தரிக்கக்கூடும்
விடியலைத் தாண்டி பால்வெளியை
ஊறச் செய்திட கூடலாம் அவள்மழை

உங்கள் கேள்வியுடன் நிதானமாகவே வாருங்கள்

ஆயுதங்கள் வேண்டாம் சொற்கள் போதும்
வழியுணவும் வேண்டாம்
பெருஞ்சேரலாதனின் நட்புண்டு
இங்கு வரும் வழியில் சுமைதாங்கிக்கல்லில்
இறக்கி வைத்துக்கொள்ளுங்கள் நுரைக்கும்
வார்த்தைகளை

சேருமிடம் சுழியமாக இருக்கலாம் முக்குளியுங்கள்

ஒரு இலை உங்கள் மீது விழும்
என்னைச் சந்திக்கும் உங்களை
அவள் இவ்விதமாகவே எதிர்கொள்ளத் திட்டம்

நீங்கள் என்னைக் கைக்குலுக்கிச் செல்வதற்காகவே
சுமைதாங்கிக்கல்லில் அவள் வீற்றிருக்கும்போது
அபத்தமாக எதுவும் நடந்துவிடாது அன்பர்களே

பனிக்கட்டி ஆவியாகும் வரை
உங்களை உலர்த்திக்கொள்ளுங்கள்
வேரை மட்டும் நனையவிடுங்கள்
இப்போது எப்படி இருக்கிறது தேநீர் ■

● துரை. நந்தகுமார்

# நூர்தீனின் நூற்றாண்டுக்கான உளியின் நுனி....



**மா**தவரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் நான். வகுப்பின் மத்தியில் பெய்யலாமா என வானம் யோசிக்கக்கூடிய வானிலை. சில்லென்ற இதமான காற்று வகுப்பைத் தன்வசப்படுத்துகிறது. அப்போது ஆங்கிலப் பாடம் நடந்துகொண்டிருக்கிறது. காலஞ்சென்ற எங்கள் ஆங்கில ஆசிரியர் வில்லியம்ஸ் சார் *"book for hour book for ever"* ... *John Ruskin* என்ற மேதையின் வரிகளை மேற்கோள் காட்டி படைப்பையும் அந்தப் படைப்பைப் படைத்த படைப்பாளியையும் பற்றிச் சிலாகித்தபடி எடுத்த வகுப்பில் நான் மீண்டும் அமர்கிறேன். என் கைகளில் நண்பன் வலங்கைமான் நூர்தீனின் 'இசைக்கும் வயலினுக்குக் குருதியின் நிறம்'.

இந்தக் கவிதை நூலில் பாடுபொருளாக நீக்கமற அத்தனையையும் நிறைத்திருக்கிறான் கவிஞன். நூலின் ஒவ்வொரு கவிதைத் தலைப்பிலும் கவிக்கோ அப்துல் ரகுமான் வந்தமர்கிறார். தலைப்பில் நிற்கவைக்கும் கவிஞன்; கவிதையில் மயங்கவைக்கிறான். ஆகச்சிறந்த படிமத்தில் கவிதைகள் மிளிர்கின்றன. அழகியலில், நுட்பத்தில் நெய்த கவிதைகள் ஒவ்வொன்றும் கர்ப்பிணியின் கவனமாகக் கடக்கிறது. அந்தக் கவனம் சுகப்பிரசவமாக நடந்திருக்கிறது. வாசிக்கும்போது நம்மை ஆட்கொள்கிறான் கவிஞன்.

**"உறங்கும்போது மரணம் என்பது**

**கனவுபோன்றது**

**பகிர்ந்துகொள்ள முடியாத சொப்பனத்தை**

**பத்திரமாக வைத்திருக்கலாம்".**

வியந்து முடிப்பதற்குள் நம் வியப்பை மற்றொரு கவிதையில் மடைமாற்றம் செய்யும் சூழ்ச்சியைக் கற்றுத்தேர்ந்தவனாய்த் திகழ்கிறார் நூர்தீன்.

**"வலசை சென்ற பறவைகள் அடைந்த**

**சமயம்**

**ஆடுகளை மேகமூட்டைகளாகக்**

**கொட்டிலிலடைத்து**

**தரிசு நிலமாய் வெளியேறுபவனின்**

**வற்றிய சிறு கண்ணீர்த்துளிகளாய்**

**தூறலைத் தொடங்கி சடசடத்துப்**

**பொழிகிறது".**

தொகுப்பின் தலைப்புக் கவிதையை வாசித்துவிட்டு மற்ற கவிதையை வாசிப்பது மட்டுமல்ல வேறெந்த நிகழ்வையும் அசைவையும் நடத்தவிடாமல் அது இனிய இம்சை செய்கிறது. காட்சியில் நகர்கிறது வாசிப்பவரின் நிமிடங்கள்.

**“கொடும் வெயில் கடும் மழை இயற்கைப்**
**பேரிடர்கள்**
**அத்தனையையும் மீறி பச்சையம் பூசி**
**நகைத்து நிற்கும் அதனுள்ளே**
**பேரிரைச்சலாய்க் கேட்கிறது நிசப்தம்...”**

வார்த்தைச் சித்தர் வலம்புரியார் வெளியே வந்து இந்தக் கவிஞனை ஆரத்தழுவிவிட்டு ஆத்ம திருப்தியாய் உள்ளே நுழைந்துகொள்கிறார்.

புரிந்துகொள்ள சிரமமானது தத்துவம். சாதிக்க உச்சம் தொடுவது சாதனை. இதைச் சிரமமற்று புரியும்படி தத்துவத்தையும், நேர்த்தியான படைப்பில் உச்சம் தொட்டு சாதித்திருக்கிறார் நூர்.

**“மரணம்**
**அத்தனை சுலபமில்லை**
**அத்தனை கடினமுமில்லை**
**ஒரு முற்றுப்புள்ளிதான்**
**வைத்த பிறகு**
**அதைப் பற்றி எழுத அவசியமுமில்லை.”**

ஒரு கவிஞன் காலம் கடந்தும் கவிஞனாக மிளிர்வதற்கு அழுத்தமான காரணம் அவன் தேர்ந்தெடுக்கும் பாடுபொருள். அந்தப் பாடுபொருளுக்காகத் தவம் கிடக்க தேவையில்லை. நம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வே பாடுபொருள். அதாவது இதை வாசிக்கும் தருணத்தில் உங்களது இடது, வலது மற்றும் நான்கு திசைகளில் ஏதாவது ஒன்று நிகழ்ந்துகொண்டிருக்கும், குறைந்தபட்சம் ஏதோ ஒன்று கடக்கும். அத்தகைய சூழலை மையப்படுத்தும் சூட்சுமம் கற்றுத் தேர்ந்தவனே ஆகச்சிறந்த படைப்பாளி. அவன் படைப்பில் பாடுபொருளாகப் பின்னப்பட்ட கவிதைகள் நிரந்தரமாக இலக்கியத் தடத்தில் தடம்பதிக்கும். இதை இன்னும் தெளிவாக நூரின் இந்தக் கவிதை தெளிவுபடுத்தும்.


**“இரு சக்கர வாகனத்தை**
**சாலையோரத்தில் நிறுத்தி**
**அலைபேசும்போது**
**நடுவில் ஊர்ந்துகொண்டிருக்கும்**
**மரவட்டைகளை**
**சிறு குச்சியாலோ என் செருப்பினாலோ**
**எத்தித் தள்ளுகிறேன்**
**சற்று தள்ளி விழும் அவை**
**தங்களைச் சுருட்டிக்கொள்ளும்**
**நசுங்கிச் சாகும் அதன் மரணத்திலிருந்து**
**சில நொடிகள்**
**சில நிமிடங்கள்**
**சில மணிகள்**
**காப்பாற்றியுள்ளேன்.**
**எங்கேயாவது சுருண்டு கிடக்கும்**
**ரயில் பூச்சிகளைப் போலவே**
**என் மரணமும்.”**

பாடுபொருளினூடே வாழ்வியல் தத்துவத்தையும் சொல்லிச் செல்லும் கவிதையில் ஆகச்சிறந்த கவிஞனாய் முன்மொழியப்பட்டு உடனடியாக வழிமொழியவும் படுகிறார் நூர்.

ஒரு சிறந்த கவிதை என்ன செய்யும்.. லயித்து வரிகளை வாசித்த பிறகு அப்படியே அந்தக் கவிதையின் பக்கத்தை நெஞ்சில் வைத்து இறுக அணைத்துக்கொள்ளச் செய்யும். இது அப்படி செய்கிறது.

**“பூனை கண்களை மூடியதும்**
**இருட்டிவிடும் உலகத்தில்**
**இரண்டு மின்மினிப்பூச்சிகள்**
**பறக்கின்றன.**
**அதைத் தாவித் தாவிப் பிடித்து**
**விளையாடலாம்**
**வால்கள் முளைத்த யாரும்”.**

நீண்டு கிடக்கும் நெடுஞ்சாலையில் பயணிப்பவரின் ஊரின் பெயர் அறிந்துகொள்ள ஆங்காங்கே கிடக்கும் மைல்கல் மாதிரி இந்தக் கவிதையை வாசிப்பவரின் ரசனைக்குப் பொருத்தி




விடுகிறேன். அங்கு மைல்கல்... இங்கு இசைக்கும் வயலினுக்குக் குருதியின் நிறம்.

**“மங்கிய விளக்கொளியில் மத்திய வட்ட மேசையில்**
**தக்கைகளாய்க் கொங்கைகள் பிதுங்க..**
**துடுப்பு போன்ற கால்கள் மிதக்க..**
**துடிக்கும் புழு போல நெளியும் அவர் சரீரத்தில்..**
**விழிகள் இரண்டும் தூண்டில்கள்.”**

சந்தோஷத்தின் உச்சியில் நம்மை அமர வைக்கும் நூர்... நமது பதின்மத்திலும் அமரவைக்கிறார்.

**“ஓர் இலையைச் சுருட்டி**
**பீப்பி ஊதுகிறான்**
**டவுசர் மட்டுமே அணிந்த சிறுவன்**
**இசைக்கும் காற்றில்**
**தன் மொத்த இலைகளையும்**
**சுருட்டிக்கொள்ள நினைக்கிறது**
**ஒற்றைப் பூவரசு மரம்.”**

இங்கு இப்படியும்.. இதோ இங்கு..

**“மஞ்சணத்தி மரத்தில்**
**காக்கை**
**கூடுகட்டியிருக்கிறது**
**நுணா பூத்துக் காய்க்கத் தொடங்கிவிட்டது**
**அடிக்கடி கேட்கமுடிகிறது**
**குயிலின் பாடல்”.**

தலைப்பில் கவிக்கோவை நினைவுபடுத்திய நூர்... இந்தக் கவிதையில் நகுலனைக் கண்முன் நிறுத்துகிறார்.

**“என்னிடம்**
**ஒரு வெற்றுக்கோப்பை இருந்தது.**
**அதில் நானே என்னை**
**நிரப்பி நிரப்பிக்**
**குடித்துக்கொண்டிருந்தேன்.**

**கோப்பை உடைந்த நாளொன்றில்**

**சிதறிய சில்லுகளை**

**யார் மனதையும் குத்தாமல்**

**அப்புறப்படுத்துகிறேன்.**

**'கிளங்' என்ற சத்தம்.**

**வேறொன்றுமில்லை:**

**நான் தான் உடைந்துவிட்டேன்'.**

(இறுதி வரியின் இறுதி வார்த்தையில் நுட்பம் கவனித்தீர்களா; உடைத்துவிட்டேன் என்று எழுதி இருந்தால் இங்கு நகுலன் நகர்ந்திருப்பார்... உடைந்துவிட்டேன் இதனால்தான் இன்னும் இங்கு அமர்ந்திருக்கிறார் நகுலன்).

இன்றைய வாழ்வியலை யதார்த்தத்தை இந்தக் கவிதையில் சொன்ன விதத்தில் நூர் நூறு சதவிகிதம் வெற்றி பெற்றிருக்கிறார். தற்போதைய காலகட்டத்தில் பலனை எதிர்பார்க்காது யாரும், எவரும் இருப்பதில்லை என்று 'நச்'சென இங்கு சொல்லிய விதம் அபாரம்.

**"கீரையில் ஊட்டச்சத்துகள் அதிகம்:**

**....................**

**....................**

**நாளை வாடிக்கையாளர்களிடமிருந்து**

**புகார்கள் வந்துவிடக்கூடாதல்லவா**

**கசாப்புக்கு:**

**'இறைச்சியில் ஒரே கசப்பு'."**

கவனமாக என் கவிதைகளை வாசியுங்கள் நண்பர்களே என்று நூர் சொல்லாமல் சொல்லும் விதம் அருமை...

கசப்பு

கசாப்பு

ஒரு துணைக்காலில் இந்தச் சொல்லாடலில் முத்திரை பதித்த கவிஞனுக்கு உங்கள் சார்பிலும் ஒரு சபாஷ்.

**"இருளைப் பூசிக்கொண்டு**

**அங்கலாய்த்து அலைந்த வௌவால்களே**

**விடிந்துவிட்டது**

**காகங்கள் சுமந்து பறக்கின்றன**

**நீங்கள் இறக்கி வைத்த இரவை".**

தலைகீழாய்க் கிடக்கும் பறக்கும் பாலூட்டி என்ற இருள் மெல்ல மெல்ல விலகி தொன்மத்தின் குறியீட்டில் எழுதிய விதம் ஆச்சரியம். நிறத்தை வைத்து மெய்யியலின் நீள அகலத்தைத் தொட்டு தந்த விதம் கற்பனையின் உச்சம். இந்த ஐந்து வரிகளுக்காகவே இந்தத் தொகுப்பை நாம் தாங்கிப் பிடிக்கலாம்.

சாக்ஸுக்குள் சிக்கிக்கொண்ட மணல் துகள்கள் மாதிரி நீண்ட நாட்களாய் என்னை அரித்துக்கொண்டிருக்கும் ஒரு கவலை இந்த போன்சாய் மரம் வளர்ப்பு. பெருமரமாய் கம்பீரமாக நின்று; நீள நீளமாய் ஆயிரமாயிரம் கிளை விரித்து நிழல் தந்து இளைப்பாறச் செய்து மழை தந்து பறவைகள் கூடமைத்து வாழுமிடமாய் நிற்கும் மரத்தை சிறுதொட்டிக்குள் சுருக்கி அபத்தம் செய்யும் நாகரீகத்தை நீள் கவிதையில் நூர் வைத்த விதம் மெச்சத்தக்கது.

**"தொகுப்பக வீட்டில்**

**போன்சாய் வளர்ப்பதில்**

**என் மீது புகார்கள் அவை வைப்பதில்லை.**

**அவ்வப்போது மனசில் சிறகுகள்**

**முளைக்கும்போதெல்லாம்**

**தொட்டி மரத்தில் பறவையாகிவிடுவேன்.."**

"பறக்கும் சாலை" என்று பக்.43இல் ஒரு அற்புதமான நீள் கவிதை. அதைத் தாங்களே வாசிக்க வேண்டும் நண்பர்களே என்று சொன்னாலும் அந்தக் கவிதையைத் தொடாமல் என்னால் நகர முடியவில்லை நண்பர்களே. மழை இரவும் தார்ச்சாலையும் அந்தத் தார்ச்சாலையில் நசுங்கிக் கிடக்கும் பறவையும் இரவெல்லாம் என்னை எழுப்பிக்கொண்டே இருந்தன. கவிதையினூடே கற்பனையின் உச்சமாய் வந்து விழுந்த அபார வரிகள் ஏராளம். வாங்கிய பொட்டலத்தில் ஒரு வேர்க்கடலையும் சொத்தை இல்லாது

சுகிக்கும் பேரானந்த உன்னத நிலை அடைந்த 'நாக்காய்' அத்தனை கருத்துச் சுவை.

எ.கா.

**'கருத்த சாலையை அது நீண்ட**
**இரவென்று நினைத்திருக்கலாம்'**
**'பெரும் இருள்படுத்துக் கிடக்கிறது**
**அதில் உறங்கலாமென வந்திருக்கலாம்'.**
**'இரவு போல, இருள் போல கரிய**
**சக்கரங்கள்'**
**'மாமிசங்கள் பசையாகி ஒட்ட'**

இப்படி விரிகிறது நசுங்கிய பறவை குறித்தான நூர்தீனின் கவலை... வாசித்தபின் துக்கம் மடைமாற்றமாய் நம் மீது கவ்வுகிறது.

அழகாக செவ்வகப் பெட்டியில் நீந்தும் அழகான வண்ணமயமான மீன்களை ஆசை ஆசையாய் வாங்கி வந்து அதன் கூடவே நாமும் நீந்திச் சென்ற அந்த ரசனையான நாட்கள்.. இன்றைய தலைமுறையை அலைபேசி விழுங்கிவிட்டது. தற்போதைய காலத்தை நூர்...

**"செவ்வகப் பெட்டியைவிட்டுச் சதுர**
**அறையை**
**மேயும் மீன்களின் கண்களில்**
**குழந்தைகள் விளையாடுகிறார்கள்**
**தொடுதிரை அலைபேசிகளில்".**

பிறந்த மண்வாசம் எல்லோருக்கும் பிடித்தமானது, வாழ்வில் மறக்கமுடியாதது. தொழில் நிமித்தமாய் பாரம்பரியம் மிக்க வீரமிக்க ராஜராஜசோழன் கால்தடம் பதித்த உயிர் கசிய வாழ்ந்த மண்ணைவிட்டு கடல் கடந்து பாலைவனத்து மண்ணில் பொருளீட்டச் செல்லும் சூழ்நிலையில் தள்ளப்பட்டாலும்... அன்னையின் மார்பில் சுரக்கும் பாலாய்ப் பீறிடுகிறது வலங்கைமான் நூர்தீனின் "பதினொன்றாம் நூற்றாண்டின் பசி"... பக்.53இல் நீங்களே புசியுங்கள் நண்பர்களே.

அடுத்தடுத்து அத்தனையையும் என்னிலை மறந்து நானே சொல்லிவிடக்கூடாது என்ற என் கட்டளையை நானே மீறிவிட்டேன் என்பதால் "தானியம் போல் சிதறும் உதிரம்" என்ற பிரமிப்புமிக்க கவிதையுடன் முடிக்கிறேன்.

**"போக்குவரத்து நெரிசல் இல்லாமலிருந்த**
**சாலையில்**
**தற்போது அடிக்கடி விரையும்**
**வாகனங்கள்**
**இடத்தைப் பார்வையிட கார்ப்பரேட்**
**நிறுவனங்களின்**
**ஆட்களை ஏற்றிவரும் அதிநவீன**
**நாற்சக்கர வாகனம் நசுக்கலாம்**
**பூர்வக்குடியைப் போலவே பட்சியையும்.**
**தானியம் போல் சிதறிய உதிரம் அறையும்**
**வாகனத்தில்**
**அதே சிவப்பு நிறத்தில் ஆங்கிலத்தில்**
**எழுதியிருக்கிறது**
**'கிறின் சிட்டி லேண்ட் புரமோட்டர்ஸ்'..."**

முரணின் மொத்த உருவத்தை நச்சென இறக்குகிறது வலங்கைமான் நூர்தீனின் எழுதுகோல்.

நண்பர்களே தான் வாழும் காலத்திலேயே இந்தச் சமூகத்துக்கு ஏதாவது ஒன்று செய்துவிட வேண்டும் என்று சதா நினைத்துக்கொண்டிருக்கும் மனநிலை படைத்தவரால் மட்டுமே இப்படி படைக்க முடியும். வலங்கைமான் நூர்தீனின் எழுதுகோல் நுனி தவத்தில் அமர்ந்திருக்கிறது. தவத்தின் பலனை இந்தச் சமூகத்தின் நகலாகிய நாம் அடைந்திருக்கிறோம்.

ஆகச்சிறந்த படைப்பான இந்த "இசைக்கும் வயலினுக்குக் குருதியின் நிறம்" தொகுப்பைப் படைப்பு பதிப்பகம் நேர்த்தியான வடிவமைப்பில், காதலியின் மென் வருடலுக்கு இணையான காகிதத்தில், மிளிரச்செய்யும் முகப்பு அட்டையில் செதுக்கி இருக்கிறது.

● நந்தன் கனகராஜ்
● ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

# கிணிங்... கிணிங்...



பருவம் முடிந்த புடலைப் பந்தலாகக் காய்ந்து இற்றுப்போய்க் கடக்கிறது காயல்குடி ஆறு. அப்படியொரு வனாந்திரக் குளுமையில் ஓடிக்கிடந்த அதன் பாதைகள், நீரோடிய காலத்தின் நினைவுகளைச் சுமந்துகொண்டு, நீண்டு கிடக்கிறது இப்போது. மேற்கே மலைக்காட்டில் பெய்யும் மழையில், அழகத்தான் குளம் நிறைந்து காயல்குடியில் மறுகால் பாய்ந்து சிவகாசி, சாத்தூர் வழியாக நாகலாபுரம் வரைக்கும் போகிற மாதிரியாக முன்னோர்களின் ஏற்பாடு இது.

செழித்துப் பாய்ந்த அதன் பசுமையில் இருந்துதான் கொத்தன்குளமும், படிக்கச்சான் பட்டியும் பட்டினி போக்கிக்கொண்ட ஊர்களாக இருக்கின்றன. இரண்டு ஊர்களுக்கும் ஊடாக எல்லைகளாக அமைந்துகொண்டு ஓடுகிற அதன் வரத்துக்கால்வாயில் படிக்கச்சான் பட்டி கரைக்குக் கீழ்ப்புறமாக நீளும் நிலங்களாக இருக்கும் ஆத்துப் பிஞ்சைக் காடுகள் மொத்தமும் அவ்வூர் சனங்களுக்கான ஆதாரமான புலன்கள்.

டவுண் ரோட்டு முக்கிலிருந்து இரண்டு மைல் உள் ஒடுங்கி வரும் பாதையில் ஈ.பி. ஆபீஸ் பக்கமுள்ள புங்கமரம் வண்டிப்பாதையாக ஊரின் அருகாமையைக் காட்டிவிடும். ஈத்துக் கண்ட மாடுகளின் கொடி சுத்திய சாக்குப்பைகளால் புங்கமரத்தின் கிளைகள் எப்போதும் நிறைந்து கிடக்கும். ஈத்து விழுந்த பசுக்களின் கொடியைப் புங்கமரத்தில் கட்டினால் மாடு கூடுதலாகப் பால் கறக்கும் என்பது வழிவழியாக இருந்துவரும் நம்பிக்கை.

சின்னப்பன், தவுட்டாயியின் மாமரக் கிணறும் ஒண்ணே கால் ஏக்கர் கரிசல் மண்ணும் அவர்களின் வியர்வையில் இருந்து சத்து பூக்கும் பூமியாக ஆத்துப் புஞ்சையில் இருக்கிறது. வடக்கோர வரப்பின் ரெட்டைப் பனைகளில், இடி விழுந்து கருகிய ஒன்றும், கடைசி ஓலைகளைக் காற்றின் சலசலப்புக்குத் தரும் மற்றொன்றுமாக, செழிப்புக்காலத்தைக் கட்டியம் கூறி நின்று கொண்டிருக்கின்றன. ஒற்றைச்செவ்விளநி மரத்தின்காய்த்திருட்டுக்கு ரிப்பன், கிலுக்கு, கண்ணாடி போன்ற பொருட்களால் பேய்க்கா, சாமிக்கா எனத் தெரியாதபடி, மரத்திடம் ஒரு அமானுஷ்யத்தை உண்டு பண்ணி வைத்திருப்பார் சின்னப்பன்.

பருவத்திற்கு ஏத்த மாதிரி பயிர்களை நடவு பண்ணுகிற அவரின் வாழ்க்கை ஜீவனுத்துல பேய்ஞ்சு கெடுக்கிறதுமா, பேயாமல் கெடுக்கிறதுமா மழைக்கு முக்கிய பங்கிருக்கு. மழையின் சதிக்கு கொஞ்சமும், பங்கு முறைக்குக் கிணத்துத் தண்ணீர் பத்தாது கொஞ்சமுமா ஊசலாட்டத்தை

இழுத்துக்கொண்டு வருகிறது அவரின் சம்சாரி வாழ்க்கை. ரெட்டை மாட்டு வண்டியும் ரெண்டு மூணு பசுமாடுகளும், தன் குடும்பமும்தான் சின்னப்பனின் பரந்த உலகம். தவுட்டாயிக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான வாழ்வுத் தடத்தில் பிசிறாத இடம் சின்னப்பன்.

“என்ன சேது? இன்னைக்கு என்ன ஏவாரம்?” எனச் சின்னப்பன் கேட்டுக்கொண்டே வந்தால் பொழுது மங்குகிற ஆறு மணியாகி விட்டதாக அறிந்து கொள்ளலாம். ஊரின் வியாபார கேந்திரங்களாக இருக்கும் சேதுபாண்டி டீக்கடையும், காலசாமி பெட்டிக் கடையும்தான் ஆத்துப்பிஞ்சை வயக்காடு தாண்டி சின்னப்பனுக்கு இருக்கும் பொழுதுபோக்குப் புகலிடங்கள். காலசாமி கடையில் பழம் தின்றுவிட்டு ரெண்டு நக்கல் பேசிக்கொண்டிருக்க, ஏழு மணி ரெங்கவிலாஸ் பஸ் ஊரைக் கடந்துவிடும். சின்னப்பன் வீடடைகிற எட்டு மணிக்கெல்லாம் ஊர் நடுநிசியாகிப் போய்விடும்.

“ஐயா, ஐயா”னு சத்தம் போட்டு தெருவை ஒரு ரவுண்டு அடித்துவிட்டு வரும் பால் கறப்பு சங்கையாதான் ஊரின் அலாரம். கன்னுக்குட்டிகளை மடிக்கு விட்டுவிட்டு பின் லாவகமாகத் தாக்காட்டி பால் கறந்துவிடுவான். பாலை அளந்து ஊத்தி சிட்டை குறிச்சு அவன் நிமிரும் கணத்தில் கோழிச் சத்தங்கள் பெருக ஆரம்பித்துவிடும்.

“சித்தங்குளம் பருத்தி களையெடுப்புக்குப் பத்து பேரு, பத்து பேரு... நொண்டி நாயக்கருக்குக் கரும்பு வெட்டு வாராவுக வரலாம்,” அக்கா மாரியின் ஆளெடுப்புக்கு அந்த நேரத்தில் ஊரே பரபரத்துவிடும். “ஏம்மா நீயெல்லாம் கொத்தச்சியா? அஞ்சு குறுக்கம் நடனும் ட்டு, ஏழு குறுக்கத்துக்கு வேலை வாங்கிட்டாக” இப்படி வாதங்களும் பிரதி வாதங்களும் பஞ்சாயத்தாகி உடனடியா தெருவுல பைசலும் ஆகிவிடும்.

சின்னப்பன் இதன் எதற்குள்ளும் ஆட்பட மாட்டான். ஒண்ணே கால் ஏக்கர் முழுசும் சின்னப்பனும் தவுட்டாயியும் ஓடாத் தேஞ்ச பூமி. எந்த மகசூலுக்கும், எப்படியான வெள்ளாமைக்கும் தன் பட்டறிவால் நேர்த்தியா கையாண்டுக்கிடும் நுட்பம் அறிஞ்சவன்.

தூரத்து உறவான அத்தைக்குப் பிறந்த எல்லாப் பிள்ளைகளும் ஒவ்வொண்ணா தங்காமப் போக, குடும்பமே சேர்ந்து, ‘அடுத்த குழந்தை பூமி தங்கணுமம்மா. எங்க வம்சம் விருத்தியாகணுமம்மா’ ன்னு சொல்லி சீலக்காரி கோயிலில் தஞ்சம் சேர்ந்துவிட்டது. “பொறக்கப் போற புள்ளையைத் தவுட்டுக்குக் கொடுத்து வாங்கு. எல்லாம் நான் பாத்துக்குடுதேன்”னிட்டார் அருள் வந்த பூசாரி. அப்புறமா பெறந்த புள்ளையைக் கோயில்ல போட்டு தவுட்டைக் கொடுத்து மறு உபகாரமாகப் புள்ளைய வாங்கி வளர்த்தெடுக்கப்பட்டவதான் தவுட்டாயி. வெச்சதென்னவோ சாமி பேரத்தான்னாலும் தவுட்டாயிங்கிற பேரு நெலச்சு போச்சு.

ஒத்தப் புள்ளையா வளர்ந்த தவுட்டாயிக்குச் சின்னப்பனோட கல்யாணம் ஆகி வருசையா மூணு பொண்ணு ஒரு ஆணு என நான்கு குழந்தைகள். கண்மாய் நெறயாம காயல்குடி ஆத்துல நீர் வரத்து இல்லாத பஞ்ச காலம் மூணாவதும் பொண்ணா பொறந்ததால “போதும் பொண்ணு”ன்னு அதுக்குப் பேர் வச்சு நேத்திக்கடன் போட்டதுக்கப்பறம் பிறந்தவன்தான் நாலாவதாக ஆண் பையன். மண்ணையும் மக்களையும் நேசிக்கிற மாதிரி மாடு கன்னுகளையும் நேசிக்கணும்ங்கிறதுதான் சின்னப்பனுக்கு அவுக அப்பா சொல்லித்தந்த குலப்பாடம். அந்த அன்பின் இழையோட்டத்தில் இருந்துதான் குலை தள்ளி, குலை தள்ளி வம்சத்தை வாழை மரமாக ஆக்கிக் கொண்டான்.

லீவு நாட்களில் வயக்காடுகளுக்கு வரும் புள்ளைகளுக்குனே தவிட்டாயிட்ட கதைகள் இருக்கும். தென்னை மரத்தின் கீழிருக்கும் கல்லுல மத்தியான சாப்பாட்டுக்குச் சோளக்கஞ்சி கரைப்பதற்கு முன்னாடி ஒரு சிறு கை அள்ளி வைப்பாள். அணில் குஞ்சுகளும் மைனாக்களும் சினேகிதம் போட்டு அவளோடு பேச வரும். வீட்டுல நடக்கிற குழந்தைக சேட்டையை அதுகளிடம் குதூகலமாகச் சொல்லி வைப்பாள்.

நடவு போட்டிருக்கிற தக்காளிச் செடிகளின் மஞ்சள் நிற பூக்கள் நட்சத்திரங்கள் போல இருப்பதாகவும், எள்ளு வெளஞ்ச காலத்தில் அதன் வெள்ளைப்பூக்கள் காதுக்குத் தொங்கட்டான்கள் மாதிரியும், கத்தரி பாத்திகளின் நீல வண்ணப் பூக்கள் தலைக்கு மேலுள்ள ஆகாயமாகவும் ரசிப்பின் எல்லைகளை விரித்து விரித்து அப்படியே கேட்டுக்கொண்டே இருக்கும்படி கிடத்திவிடுவாள் தவுட்டாயி.

அவள் கதைகளுக்கு அந்தக் கரிசல் காட்டு பிஞ்சை மொத்தமும் கிறங்கிக் கிடக்கும். சோளம், கம்பு வெளஞ்சு நிற்கும் பருவத்தில் வரும் கிளிக்கூட்டங்களைப் பரண் அமைத்து விரட்டுகிற செய்முறையை அவள் சொல்லச் சொல்ல, குழந்தைகளின் உச் கொட்டும் அழகில் ஓடிப்போன கிளிகள் எல்லாம் திரும்ப வந்தது மாதிரி ஆகிவிடும்.

சிறிதுசிறிதாக நகர்மயமாகத் தொடங்கியிருக்கும் ஊரில் சுற்றியிருந்த நிலங்கள், மெல்ல மெல்ல பஞ்சாலை முதலாளிகளின் வசம் போய்க்கொண்டு இருந்தன. சின்னப்பனின் வண்டி மாடும் பால் மாடுகளும் பெண் பிள்ளைகளின் திருமணத்திற்குத் தரகு பேசப்பட்டு டவுண் சந்தையில் விலை போய் விட்டிருந்தது. மகனின் கல்லூரி படிப்புக்கான மூன்றாண்டு பருவக் கட்டணங்களுக்கும் பருத்தி, கரும்பு, நெல் எனப் பருவ வெள்ளாமைகளின் சொற்ப மிச்சத்தில் தாக்குப் பிடித்து வந்துகொண்டிருந்தான் சின்னப்பன்.

பருத்திகள் பூத்துச் சிரித்த நிலமெங்கும் பஞ்சாலைகள் பெருகத் தொடங்கி ஊருக்குள்ளிருக்கும் இளம் பெண்களை வேன்களில் ஏற்றத் தொடங்கி இருந்தது. அவர்களின் மேனி மஞ்சள் வாசத்தையும் வளையலோசைகளையும் மட்டுமல்லாது, விடியல் பொழுதுகளையும் ஏற்றிக்கொண்ட வேன்கள் இப்போது ஊரில் புதுச் சத்தங்களை உண்டு பண்ணத் தொடங்கி இருந்தன. அப்பா அண்ணன் தம்பி என அவர்களின் சட்டைகளில் புகுந்துகொண்டு வேலைக்குப் போன இளம்பெண்களைத் திண்ணைப் பாட்டிகள் அதிசயித்துப் பார்க்கத் தொடங்கினார்கள்.

பக்கத்து டவுணின் பெரிய சிவன் கோயிலில் இருந்து அதன் நிர்வாக அதிகாரி அனுப்பியிருந்த கடிதம், சின்னப்பனைக் காய்ப்பு முடிந்த காட்டிலிருந்து ஒடித்துப்போடும் பருத்தி மாராக ஒடித்துப் போட்டது. கடிதத்தின் விவரத்தை மகன்தான் வாசித்துச் சொன்னான்.

ஆண்டாண்டுகாலமாகச் சிறு தொகையை மட்டும் கோயிலுக்குச் செலுத்திவிட்டு, நீங்கள் பாடுபடும் கோயில் நிலத்தைத் திருக்கோயிலின் சார்பாக சுகாதார மையமும் அதையொட்டி வணிக வளாகங்களும் கட்ட ஒப்படைக்க வேண்டிய காரணத்தை விளக்கி நேரில் வருமாறு அழைக்கப்பட்டிருந்தது. சின்னப்பனுக்கு நடப்பது ஒன்றும் புரியவில்லை. கோடை மழையின் இடிச்சத்தம் போல வந்த கடிதத்தின் செய்தியால் நிலைகுலைந்து போனான்.

திருக்கோயிலின் அறக்கட்டளை மடத்திற்கு படிக்கச்சான் பட்டி மட்டுமின்றி சுத்துப்பட்டு கிராமங்களில் நிறைய நிலபுலன்கள் இருக்கின்றன. முப்பாட்டன், பாட்டன் எனத் தலைமுறையாக அநேக குடும்பங்கள் விவசாயத்தைச் செய்துவருகின்றன. திடீரென வந்த ஒரு சுழலில் செய்வதறியாத சின்னப்பன் கோயிலின் உலகளந்த நாதசுவாமியை வேண்டிக்கொண்டு மன விசனத்தோடு கோயிலுக்குச் செல்ல முடிவெடுத்தான்.


பஞ்சாலைகளின் வாகனங்கள் இப்போது ஊருக்குள் இரவு பகலாக மாறி மாறி வந்துபோகத் தொடங்கியிருந்தன. சினிமாப் பாடல்கள் ஒலிக்க இளம்பெண்களின் சிரிப்பொலிகளைப் போட்டி போட்டு ஏற்றிக்கொண்டு இருப்பதில் ஊரின் பொழுதுகள் இமை மூடாததாக மாறி இருந்தது.

“நம்மூரு வாட்ச்மேன் ஏன்தான் கெடுபிடியா இருக்காரோ?” “சூப்பரேசரு சொல்லி இருக்காராம், ஷிப்டுக்கு உள்ள போறப்பயும், வெளிய வாரப்பயும் சாப்பாட்டுக் கூடைகளை செக் பண்ணி அனுப்பணும்னு.” “ச் சே ரொம்பதான் சிடுசிடுன்னு விழுவுறாரு.” “டவுண்லர்ந்து வர்றாகளே மத்த ரெண்டு ஷிப்ட்டு வாட்ச்மேன்கள், ரொம்ப நல்லவுக.” இளம்பெண்களின் கவலைப் பேச்சை வேனில் எல்லோரும் ஆமோதித்து வைத்தார்கள்.

காயல்குடி ஆற்றின் கரைப்பாதையில் ஓங்கி அடித்துக்கொண்டே, மில்லுக்குப் போகும் சைக்கிளின் பெல்லுக்கு ஒதுங்க யாருமோ எதுவுமோ இல்லைதான். அது காலம் நெட்டித் தள்ளி மென்று துப்பிப்போட்ட ஒருவனின் மன விசாரம். அதைத் தரித்துக்கொள்கிற சூழ்நிலைதான் எத்தனை பரிதாபத்துக்குரியது. திடீரென கைவிடப்பட்ட ஒரு வாழ்வின் தடுமாற்றத்தைச் சமாளிக்க அடித்துக்கொள்கிற அந்த சைக்கிளின் பெல் சத்தத்தையும், சதா காட்டிக்கொண்டிருக்கும் சிடுசிடுப்பையும் புரிந்துகொள்வது சிரமம்தான்.

தொடர் 3

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

எண்பதுகளின் பிற்பகுதியில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, காரைக்குடி அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்தேன். தினமும் புதுக்கோட்டையிலிருந்து காரைக்குடிக்கு இரயில் பயணம். எப்போதோ சிறுவயதில் இரயில் பயணம் போயிருந்த எனக்கு, தினந்தோறும் இரயில் பயணம் என்பதை நினைக்கையில் குதூகலமாக இருந்தது.

என் வீட்டிலிருந்து புதுக்கோட்டை இரயில் நிலையம் இரண்டரை கிலோ மீட்டர் தூரமிருக்கும். தினமும் வீட்டிலிருந்து நடந்தே செல்வேன். நடப்பது என்பது எனக்கு சிரமமாக இல்லாமல் பிடித்திருந்தது. சென்னையிலிருந்து வந்து, காலை 8.05 மணிக்கு புதுக்கோட்டையிலிருந்து புறப்படும் இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், 40 நிமிட பயணத்தில் கோட்டையூர் வந்துவிடும். அங்கிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் கல்லூரி இருந்தது. சரியாய் 9 மணிக்கு முதல் பாடவேளை தொடங்கிவிடும். அங்கிருந்து ஓட்டமும் நடையுமாய்த்தான் தினமும் கல்லூரிக்குப் போவது வழக்கமாயிற்று.

மாதத்தில் ஒரு நாள், இரண்டு நாள் மட்டுமே முதல் பாடவேளையில் இருக்க முடிந்தது. மற்ற நாள்களில் எல்லாம் ‘லேட் கம்மர்ஸ்’ என்று ஒரு பாடவேளை முழுக்க வெளியே நின்றிருப்பேன். இந்திய நேரப்படி இரயில் சில நாள்களில் சரியான நேரத்திற்கு வந்தாலும், 15 நிமிடத்திற்குள் 3 கி.மீ தூரத்தை ஓடிக் கடக்க முடியாமல், மூச்சு வாங்கியபடியே வெளிவாசலில் நின்றிருந்தது எனக்கான கல்வி.

அப்போதைய எனக்கான பெரிய கனவே, ஒரு சைக்கிள் வாங்க வேண்டுமென்பதே. வீட்டிலிருந்து முன்கூட்டியே கிளம்பிவிடுவதால் இரயிலைத் தவறவிட மாட்டேன். ஆனால், 10.. 15 நிமிடம் தாமதமாக வரும் இரயில், கோட்டையூருக்கு வரும்போதே காலை 9 மணியாகிவிட, அங்கிருந்து எப்படித்தான் ஓடினாலும் என்னைவிட வேகமாக ஓடிக் கடந்துகொண்டிருந்தது காலம். கோட்டையூர் இரயில் நிலையத்திலிருந்து கல்லூரி செல்ல ஒரு சைக்கிள் வாங்கிவிட வேண்டுமென்கிற என் இமாலய கனவு, மூன்றாண்டுகளில் கைகூடவேயில்லை.

“ஏன்... டெய்லி இப்டி லேட்டா வந்து நின்னு டிஸ்டப் பண்றீங்க? ட்ரெயின் ஸ்டூடண்ஸ்க்காகத்தான் செட்டிநாடு பாலிடெக்னிக் இருக்கில்லே. அங்கப் போயி படிக்க வேண்டியதுதானே..!”

என்று நுனி நாக்கில் பேசியபடி எங்களை அர்ச்சனை செய்யும் ஆங்கிலப் பேராசிரியர் இராமமூர்த்தியின் மூக்கு சிவக்கும்.

தினமும் புதுக்கோட்டையிலிருந்து பாலிடெக்னிக்கில் படிக்க 300 பேருக்கு மேல் இரயில் பயணம் செய்தாலும், செட்டிநாடு இரயில் நிலையம் (அண்ணாமலை பாலிடெக்னிக்) வந்ததும் மொத்த பேரும் இறங்கிக்கொள்ள, நானும் நண்பர்கள் இருவரும் சேர்ந்து கோட்டையூர் செல்வோம்.

திருச்சியிலிருந்து வரும் கண்ணன், அண்டக்குளத்திலிருந்து வரும் துரைராஜ், புதுக்கோட்டையிலிருந்து நான்... என மூவர் மட்டுமே அழகப்பா பாலிடெக்னிக்கில் படித்தோம். அதுவும் மூவரும் மூன்று துறைகளில் (சிவில், எலெக்ட்ரீகல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல்) ஆளுக்கொருவராக இருந்ததால், மூவரின் பாடும் திண்டாட்டமாகவே கழிந்தது.

மிகுந்த மன நெருக்கடியுடனும் ஆயாசத்துடனும் நகர்ந்த இந்தக் கல்லூரிப் பொழுதுகளை, எனக்கே எனக்காக மீட்டுத் தந்தவை புத்தகங்களே. ஆம்; புத்தகங்கள் மட்டும் அப்போதைய சூழலில் என் கைகளுக்குக் கிட்டாமல் போயிருந்தால், என் பொழுதுகள் கசங்கி, கிழிந்துபோயிருக்கும்.

திருக்கோகர்ணம் அரசுக் கிளை நூலகத்திலும், நெருக்கமான கவிஞர்களின் வீடுகளிலிருந்தும் வாசிக்கக் கிடைத்த புத்தகங்களே என் பயணப்பொழுதை அர்த்தப்படுத்தின. தினமும் ஒரு புத்தகத்தையாவது எடுத்துக்கொண்டு போய்விடுவேன். பாடவேளைக்கான புத்தகங்களைக்கூட சில நேரங்களில் மறந்துவிட்டுச் சென்றிருக்கின்றேன். ஆனால், ஒருநாளும் படிக்க புத்தகங்களை எடுத்துச்செல்ல தவற மாட்டேன்.

இரயிலிலேறியதும் சன்னலோர இருக்கை தேடி அமர்ந்து, புத்தகத்தைக் கையிலெடுத்துவிட்டால் அதுவொரு தனிசுகம்தான். கோட்டையூருக்கு இரயில் தாமதமாக வந்தாலும் பதட்டமின்றி, புத்தகம் வாசித்தபடியே நடப்பது, முதல் பாடவேளையை மறந்துவிட்டு புத்தகம் படிப்பது எனத் தினமும் குறைந்தது ஒரு புத்தகமாவது வாசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

கவிஞர் நா.முத்துநிலவன் வீட்டிலுள்ள நூல்களை எவ்விதத் தடைகளுமின்றி எடுத்துவந்து படிப்பேன். அப்படியாக, ஒருமுறை எடுத்துவந்து படித்த கவிதை நூல் ‘மார்கழி வீதி’. எழுதியவர் கவிஞர் வல்லம் தாஜூபால். 1987இல் முதல் பதிப்பாக வெளியான நூல்.

அப்போது நண்பர்களோடு சேர்ந்து நடத்திவந்த ‘விடியல்’ இதழில் நானொரு ஹைக்கூ எழுதியிருந்தேன்.


‘மாட்டுச் சாணம்


பூச்சூடும்...

மார்கழி வாசல்’.

கவிதை நூலின் தலைப்பு தந்த மெலிதான ஈர்ப்பில் எடுத்துவந்து படித்தேன். எளிமையான அதே நேரத்தில் கவித்துவமான கவிதைகளின் தொகுப்பாக அந்த நூல் இருந்தது. பல கவிதைகள் எனக்கு மிகவும் பிடித்துப்போயின.

அப்போது தஞ்சையில் நடைபெறும் இலக்கிய விழாக்களுக்குத் தவறாமல் சென்று வருவேன். தஞ்சையில் கவிஞர்கள் சுகன், வெற்றிப்பேரொளி, ஆரூர் தமிழ்நாடன், தியாகஜோதி இராமலிங்கம், தங்க. செந்தில்குமார், தஞ்சை செழியன், ஆலங்குடி



*ஆபா, தஞ்சை ச.சீனிவாசன், கதிர்பாரதி... என என் மனசுக்கு நெருக்கமான ஒரு கவிஞர் வட்டம் உருவாகியிருந்தது.*

*தஞ்சை இராமநாதன் செட்டியார் மன்றத்தில் நடைபெற்ற ஒரு கவியரங்கில் எனக்கு அறிமுகமானார் கவிஞர் வல்லம் தாஜுபால். லேசான கனைப்புடன் கூடிய கவிஞரின் சிரிப்பு, எனக்கு ரொம்பவே பிடித்துப்போனது. அப்போதே இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளவர் என்கிற கர்வம் சிறிதுமின்றி சட்டென என்னோடு நெருக்கமாகிவிட்டார். பற்றிக்கொண்டு படர இதமாகவும் கதகதப்பாகவும் இருந்தது கவிஞர் வல்லம் தாஜுபாலின் அன்பும் அரவணைப்பும்.*

*1992இல் வெளியான அவரது 'செம்மண் சிறகுகள்' எனும் கவிதை நூலினைக் கையெழுத்திட்டு எனக்களித்தார். அன்றைக்குத் தஞ்சையிலிருந்து புதுக்கோட்டைக்கு நான் பேருந்தில் வரவில்லை; 'செம்மண் சிறகுகளை' கைகளில் விரித்தபடி பறந்துதான் வந்தேன். அந்தக் கவிதை நூலில் பேராசிரியர் இரா. கதிரேசன், 'வெல்லம் நிகர் கவிதை தரும் வல்லம் தாஜுபால்' என்று தலைப்பிட்டு முன்னுரை ஒன்றினை எழுதியிருந்தது இப்போதென் நினைவை மீட்டுகிறது.*




*உண்மைதான்; இனிக்க இனிக்கப் பேசுவதைப் போலவே, கவிதைகளிலும்*




*சுவை கூட்டுபவர் வல்லம் தாஜுபால். பெரிய கவிஞர், இளைய கவிஞர் என்கிற பாகுபாடின்றி எல்லோரோடும் ஒரே மாதிரியான அன்பைப் பொழிவதில் வல்லத்தாருக்கு நிகர் அவரே. எந்த மேடையேறினாலும் கவிதைகளோடு கூடிய நகைச்சுவை மிளிரும் பேச்சால் பார்வையாளர்களைக் கவர்வதில் வல்லவர் வல்லத்தார்.*

*தஞ்சையிலுள்ள வல்லத்தில் 1955ஆம் ஆண்டு பிறந்தவர் வல்லம் தாஜுபால். இயற்பெயர் முகமது இக்பால். இளைய வயதிலேயே வாசிப்பில் ஆர்வம் பெற்றவர், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே 'மின்னல்' எனும் கையெழுத்து இதழை நண்பர்களுடன் சேர்ந்து நடத்தினார். கல்லூரியில் படிக்கும்போது பல்வேறு கவிதைப் போட்டிகளில் பங்கேற்று, பரிசுகளைப் பெற்றார்.*

*1973ஆம் ஆண்டு கல்லூரியில் படிக்கும்போது, கர்மவீரர் காமராசரின் திருக்கரங்களால் கவிதைக்கான பரிசினைப் பெற்றதை வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது என நினைவில் பொத்தி வைத்துள்ளார்.*

*தஞ்சையில் தபால் தந்தி அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டே, தொழிற்சங்கப் பணிகளிலும், இலக்கியப் பணிகளிலும் தன்னைத் தொடர்ந்து ஈடுபடுத்திக்கொண்ட ஆற்றலாளர் வல்லம் தாஜுபால்.*

*இலக்கிய உலகின் மஞ்சள் வெளிச்சம் தன்மேல் படவில்லையே என்கிற ஆதங்கமோ, எதிர்பார்ப்போ ஏதுமின்றி, கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தன்போக்கில் மனநிறைவோடு எழுதிவரும் கவிஞர் வல்லம் தாஜுபால், இதுவரை பல்லாயிரம் மேடைகளில் கவிதைகள் வாசித்தும், உரை நிகழ்த்தியும் உள்ளார்.*

*வானொலியில் வாசிக்கப்பெற்ற கவிஞரின் கவிதைகளுக்கென்று தனி ரசிகர் கூட்டமே உண்டு. 2014ஆம் ஆண்டில் திருச்சி வானொலியில் கவிஞர் வல்லம் தாஜுபால் வாசித்த 'பூமியைப் புதுப்பிப்போம்' எனும்*

தேச ஒற்றுமையை வலியுறுத்தும் கவிதை, தமிழின் சிறந்த கவிதையாகத் தேர்வு செய்யப்பட்டது.

2016ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசுத் தினத்தன்று காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான இந்தியக் கவிஞர்கள் பங்கேற்ற கவிதை வாசிப்பில் கவிஞர் வல்லம் தாஜுபாலும் பங்கேற்று, தனது கவிதையை வாசித்தார். அந்தக் கவிதை இந்தியிலும், ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டு நூலாகப் பின்னர் வெளியிடப்பட்டது.

சூரியச் சுவடுகள், மௌனம் நம் எதிரி, மனவாசனை, சூடாகச் சில பனித்துளிகள், கம்பன் கவியரங்கில்.... என 7 கவிதை நூல்களையும், 'கடலைத் தேடி சங்கமிக்கும் நதிகள்' (2016) எனும் அமரர் காசி அய்யா குறித்த வாழ்க்கை வரலாற்று நூலை கா.பாலச்சந்திரன், ஐஏஎஸ்-உடன் இணைந்தும் எழுதியுள்ளார்.

கவிஞரின் 'மனவாசனை' கவிதை நூலை வாசித்துவிட்டு, இந்தியக் குடியரசின் மேனாள் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் எழுதிய பாராட்டுக் கடிதமொன்றினைப் பொக்கிஷமென வைத்திருக்கிறார்.

கவிதை குறித்த எனது கட்டுரைகளில், உரைகளில் நான் அடிக்கடி மேற்கோளாகச் சுட்டும் கவிதைகளில் கவிஞர் வல்லம் தாஜுபாலின் கவிதைக்கு முதன்மையான இடமுண்டு.

'சாதி வெறி

மத வெறி

இன வெறி

மற்றும்

உள்ளூர் வெறிகள் தனி...' எனும் கவிஞரின் கவிதையொன்று இந்தியச் சமூகத்தில் புரையோடியிருக்கும் கீழ்மைகளைச் சாடும் ஆழ்ந்த பொருள் கொண்டது.

பத்திரிக்கைச் சுதந்திரம் பற்றிப் பேசும்போதெல்லாம் கவிஞரின் கவிதையொன்று என் நினைவுக்கு வந்துவிடும்.

'தலையங்கம் எழுதலாம்;

மீசை கூடாது.

ராசி பலன் போடலாம்;

ஆட்சி பலன் கூடாது.

தடவிக் கொடுத்தால்

டெண்டர் அனுப்புவர்;

தட்டிக் கேட்டால்

குண்டர் அனுப்புவர்...' – என்பதாகத் தொடரும் அந்தக் கவிதை, இன்றைய சமூக உண்மைக்குச் சாட்சியாகும் வரிகள்.

மொழியைத் தன் கவிதைகளில் வெறும் வார்த்தை விளையாட்டாகக் கையாளாமல், அதன் பொருளை ஆழமாக உள்வாங்கி, மிகச் சரியான இடத்தில் பயன்படுத்தும் நுட்பமான கவிதை வெளிப்பாட்டு உத்தியைக் கைவரப் பெற்றவர் கவிஞர் வல்லம் தாஜுபால். அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த கவிதையொன்று; (உழைப்பவரின் உதிரம் உறிஞ்சும் முதலாளி ஒருவரின் படம், இதழொன்றின் அட்டையில் பிரசுரமாகியிருக்கிறது. அதைப் பற்றிய கவிதையிது).

'உதிரம் உறிஞ்சிக்

கொழுத்தவர் படம்

அந்த இதழின் அட்டையில்.

அவரைப் பற்றி

அறிந்தவன் சொன்னான்...

அட்டையில் ஓர் அட்டை'.

'இலக்கியம் நம்மை மென்மைப்படுத்தும் மேன்மைப்படுத்தும் கண்ணாடி. இரு வகையில் பயன்தரும். உள்ளதை உள்ளபடி காட்டும். சீர்படுத்திக்கொள்ள உதவும். இலக்கியம் சமூக நிலையைக் காட்டும், தன்னைச் சீர்செய்துகொள்ள உதவும்' என்கிற புரிதலுடன் கவிதை எழுதிவரும் வல்லம்

தாஜூபால் எழுதி 'செம்மலர்' (1989) பொங்கல் மலரில் வெளியாகி, 'செம்மண் சிறகுகள்' கவிதை நூலிலும் இடம்பெற்றுள்ள 'ஒரு பெண்ணின் டைரி' எனும் 8 பக்க அளவிலான கவிதை, தமிழின் மிகச் சிறந்த கவிதைக் கதை என்பேன். அந்தக் கவிதையை நான் வாசித்து, 32 ஆண்டுகளைக் கடந்த போதிலும், இன்னும் அப்படியே மனதில் தங்கியுள்ளது அந்தக் கவிதைக் கதை.

அலுவலகத்தில் பணியாற்றும் நண்பரொருவரின் மகளுக்குத் திருமணம் ஏற்பாடாவதோடு கவிதை தொடர்கிறது. அந்த நீள்கவிதையின் சில வரிகளை மட்டும் கவிஞரின் வார்த்தைகளிலேயே இனி படிக்கலாம்.

'அவளைக் கரையேற்றுவதற்காக
அவர் சோகக் கடலில்
மூழ்கியிருந்தார்.
ஜி.பி.ஃஎப் கடன்
சொசைட்டி கடன்
காப்பீட்டுக் கடன் என
பெற்ற கடன் கழிக்க
மற்ற கடன்கள்
அனைத்தும் வாங்கினார்.

...............................

...............................

அவள் பூத்த இடம்விட்டு,
புகுந்த வீடு புறப்பட்டாள்.
தந்தை சொன்னார்;
"மகளே! மாங்கல்யம் மின்ன
மறு வீடு செல்கின்றாய்.
சென்ற இடத்தில் சிறப்பாய் இருந்தால்
பேனாவாலே கடிதம் எழுது;
அல்லது உன்னை
அல்லல் படுத்தினால்
பென்சிலால் எழுது!" '

காலம் கடந்தோட, மகளிடமிருந்து தந்தைக்குக் கடிதம் வருகிறது. எடுத்துப் பார்க்கிறார். பேனாவால் எழுதப்பட்டிருந்தது அந்தக் கடிதம். பெரிதும் மகிழ்ந்த தந்தை, கடிதத்தைப் படிக்கிறார்.

"அப்பா...
இங்கே எனக்கு
எல்லாம் கிடைக்கிறது...
பென்சிலைத் தவிர..!"

கடிதத்தைப் படித்ததும் கண்ணில் இரத்தம் கசிகிறது தந்தைக்கு. என்ன செய்வார் அந்தத் தந்தை..? சம்பந்தி வீட்டாரைச் சந்தோசப்படுத்த ஏதேதோ செய்து பார்த்தார். கடைசியில் மகளின் புடவையில் நெருப்புப் பற்றி, அவள் எரிந்துபோனதாகச் செய்தி வருகிறது. கவிஞர் வல்லம் தாஜூபால், அந்தக் கவிதைக் கதையை இப்படி முடித்திருப்பார்.

'இது வெறும் கதையல்ல...
சொத்துரிமை சமூகத்தில்
தொங்குகிற சதை...
இந்தச் சதையை
அறுப்பது நம் பொறுப்பு...
இல்லையேல் தினம்வரும்
புடவையில் நெருப்பு!'

- இன்னும் சொல்வேன் ■






கவிஜி

# பியட்டா




அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ்.... அன்பிற்குத்தான் உண்டு அடைக்குந்தாழ்.

அன்பென்பது அசுர முகம் கொண்டது. அன்பைப் போல ஆயுதம் கண்டோர் இங்கில்லை. அன்பின் ஜுவாலைகள்தான் இந்த வாழ்வை எரிக்கும் நீர்க்குமிழிகள். அதன் தீரா நாக்கில்தான் இந்த உலகம் தோன்றின காலம் முதல் கபளீகரம் உள்ளிழுக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

இதயமற்ற ஒருவனின் வாழ்வில் இதயத்தோடு ஒரு ஜீவன் வந்தால்.. அது உலகிலுள்ள அத்தனை அன்பையும் அவன் மீது வைத்தால்.. பின் மெல்ல மெல்ல அவனை அதே அன்பால் பலி வாங்கினால்.. அவனைக் காலம் முழுக்க அவன் செய்த பாவத்துக்கு மனம் புழுங்கிச் சாகும் தண்டனையைக் கொடுக்க தன் உயிரையும் கொடுத்தால்..

இப்படி சாதாரணமாக இந்தக் கதையைக் கடந்துவிட முடியாது. காட்சிகளின் வனப்புகளில் வனாந்திரத் தனிமையைக் காணும் விழிகளில் தைத்துக்கொண்டே போவதில் "கிம் கி டுக்" மீண்டும் மீண்டும் திகில் திறக்கிறார்.

"கிம் கி டுக்" என்ற மாபெரும் கலைஞனின் மகத்தான படைப்பு இந்தப் படம். ஒவ்வொரு காட்சியிலும் அன்புக்கு ஏங்கும் கொடூரமான ஒரு மனதின் தூர் வாரப்படாத பக்கங்கள்.

கொடுமையின் குரூரத்தை முகத்திலும் அகத்திலும் சுமந்து திரியும் கதை நாயகனின் கண் மையிட்ட விழிகளில் எப்போதும் வழிந்துகொண்டே இருக்கும் மிருகத்தனமான பசியில்.. அவனால் அடிபடும் உடைபடும் சாகும் மனிதர்களோடு நாமும் நிலைகுலைந்து போவதில்... அது அப்படித்தான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எதிர் வினைக்குக் காத்திருக்கும் எல்லாமும் வினைகளின் உச்சம் பெறும்.

படம் ஆரம்பிக்கும் முதல் காட்சியிலேயே அவனின் தீராத் தனிமையின் வலியை மிக அருகே பயத்தோடு உணர்கிறோம். கண்கள் மூடி உலகைத் தேடும் இரவுப் பூனையின் நிமித்தமெனக் கீச்சிடுகிறது. அது போதும் போதுமென இருட்டின் பக்கங்களை வேகமாகவும் வேதனையாகவும் திறக்கிறது. ஒரு பக்க வசனம் பேச வேண்டிய காட்சியைக்கூட ஒரே ஷாட்டில் காட்டிவிடுவதில்... கொஞ்சம் பிரமித்துச் சிமிட்ட முடியும் கண்கள் பாக்கிய மீன்கள். அது நீந்தும் சொற்பத்தின் மூடுதல்களிலும் முந்தின காட்சி ஓடுவதில் உயர்ந்து நிற்பது "கிம் கி டுக்"கின் இயக்கம்.

இந்த மானுடத்தின் சாபமும் வரமும் அன்பு மட்டுமே. அது நம்மிடையேயிருக்கும் ஆயுதத்துக்கெல்லாம் உயர்ந்த ஆயுதம். அதைக் கொண்டு எதிராளியின் மனதுக்குள் கூர் கத்தி ஒன்றைச் செய்து உள் நோக்கி மரணத்தைத் திருப்பி விட்டுவிட முடியும். அடித்துக்கொண்டேயிருப்பது வன்முறை என்றால்.. அடி வாங்கிக்கொண்டே மீண்டும் மீண்டும் அடி என்று கூறுவது வன்முறையின் உச்சம். அகிம்சையைப் போல எதிராளிக்கு இம்சை தரும் ஆயுதம் வேறொன்று இல்லை. உச்சத்தின் முனையில் நின்று அம்மா கதாபாத்திரம் தாய்மையின் மார்பு திறந்து விஷம் சொட்டுகிறது. சாத்தானின் முருங்கை மரம் மெல்ல உடைபடும் நேரத்தில் வேதாளம் இடம் மாறுகிறது.

எதிர் வினையில் நின்ற வினைக்குள் எட்டிப் பார்க்கும் பொருளுக்கு பொருளற்றுச் சேர்ந்துகொள்ளும் பொருள் ஒன்றில்... சொல்லப்படும் நிர்பந்தங்களைத்தான் இந்த மனித மனம் விரும்புகிறது. அந்த மனம் முழுக்க அவனின் துயரத்தின் சுவடுகள்.

வினோதம் மூச்சடைத்துச் சாவும் மணித்துளிகளை அவன் மீன் தொட்டியில் ரசித்துக்கொண்டிருக்கும் உக்கிர தூதுவன் ஆகிறான்.

வட்டிக்குக் காசு கொடுத்துத் திரும்ப தர முடியாதவர்களுக்கு அவன் செய்யும் கொடுமை.. காட்சிகளின் வலிமை. வழிந்து ஓடும் இயலாமையின் சூழலுக்குள் இந்த வாழ்க்கை இறக்கை உடைத்துக்கொண்டே போவதில் வறுமையின் நிறம் வானம் என்றே நம்ப வைக்கப்படுகிறது. இரண்டு கையும் இழந்தால் கிடைக்கும் காப்பீட்டுத் தொகையில் தன் குழந்தைக்குத் தேவையானதை வாங்க வேண்டும் என்று கூறும் ஒரு கடன்காரன்.. கைகள் வெட்டப்படும் முன் கடைசியாக தனக்கு மிகவும் பிடித்த கிட்டாரை ஒருமுறை வாசித்துக் கொள்கையில்... அதிரும் நரம்புகளின் பிதற்றல்.

பசித்தவனின் பாழும் குருதித் துளிகளை பணம் என்ற வேதாளத்தின் பற்கள் மெல்ல மெல்ல கடித்துக் கொக்கரித்து உறிஞ்சுகின்றன. ரத்தமும் சதையுமாக மானுடத்தின் அதீதம் திரை முழுக்க வியாபித்திருக்க... மானுட ஆதி மண்டியிட்டு வேண்டிக் கிடப்பதுதான் வாழ்வின் முரண். வாழும் முரண் கொண்ட வாழ்வியலின் நெறிதான் ஒவ்வொரு காட்சியிலும் ஓவியமாகச் சிதறிக் கிடக்கிறது.. இந்த சினிமாவின் உன்னதம்.

“கிம் கி டுக்”-கின் படங்களில் எப்போதும் இருக்கும் நீங்கள் திறக்கத் தயங்கும் கதவுகள் வெகு சாதாரணமாகத் திறந்துகொள்ளுதல் இம்முறையும் இனிதே நடக்கிறது. திறக்கத் திறக்க நம் மனம் மூடிக்கொண்டு உள்ளே அடம் பிடித்து அழும் நிஜத்தின் சூது கவ்வலை நிஜமாகவே கசக்கிப் பிழிந்து ஒன்றுமில்லாமல் செய்யும் சுயத்தின் பிறழ்வுகளை நம்மால் கடக்காமல் இருக்க முடியாது. கடக்கவே முடியாத தூரங்கள்தான் இந்தப் பூமியைச் சரியான பாதையில் சுழலவைத்துக் கொண்டிருக்கின்றன. அன்பென்ற பற்சக்கரங்களின் இடையேதான் வாழ்வின் சலசலப்புகள் கடக் முடக்கென்றாலும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. மனநிலை சரி இல்லாமல் சுற்றும் யாவருக்குமே பேரன்பின் பாதிப்புதான் முதல் இடத்தில் இருக்கும். முடியாமைகளில் முகிழ்ந்து எழுந்து மூச்சு முட்ட வெளியேறியவர்களின் மௌனம்தான் “பியட்டா” வாக இருக்கின்றன.

முடியாதுகளில் முடிந்து நிற்கிறது... முடிந்த போன்றவைகளும்... முடியப் போகின்றவைகளும்.

செத்துப்போன தாயாக வந்தவளுடனும்.. அவளின் செத்துப்போன மகனுடனும்.. இதயமற்றவன் செத்தவன் போலப் படுத்துக் கிடக்கும் ஒரு காட்சி போதும்.. மொத்தப் படத்தின் முன் பின் அசைவுகளை அசைவற்று அசைபோடும்... அசல் சினிமா.

“இன்னும் கொஞ்சம் அடி. ஆனால் காசு மட்டும் தா...” என்று கூறும் கை போனவனின் கண்களில் இயலாமையின் ஆறு தேங்கி மூச்சடைத்து மீண்டும் மீண்டும் சுழன்றுகொண்டே இருப்பதைக் காணும் நொடிகளில்... பரிதவிப்பும் கோபமும் போரிட்டு இணைகின்றன. உன்னை என் வண்டிச் சக்கரத்தில் போட்டு அரைத்துக்கொள்ள வேண்டும் என்று வெஞ்சினத்தோடு அழுதுகொண்டே எதிர்குரலைப் பதிவு செய்யும் அந்தக் கை போனவனின் மனைவிக்குக் கடைசியில் அவன் அப்படியே சாவதுகூட தெரியாது. தெரியாத எல்லாவற்றுக்கும் இது ஒரு சான்று.

தன்னைத் தாய் என்று நம்ப வைக்க அந்த அம்மா எதுவரை துணிவாள் என்பதைப் போகிற போக்கில் ஜன்னல் திறந்து கூறும் திரைக்கதையில்.. அவளின் மகனின் மரணம்.. தீராக் கோபத்தை அவளுள் சுழற்றிக்கொண்டே இருக்கிறது. மெல்ல மெல்ல அவனை ஆக்கிரமிக்கும் இடத்தில்... அத்துவான காடு சுருங்கிச் சுருங்கி... ஒற்றை மரமாய் ஆகி அதை அவள் சொல்லி அவன் நட்டு வளர்க்கும் மிருதுவுக்குள் புலி ஒன்று மானாகித் தப்பிக்கும் கதையாகிறது. முயல் ஒன்று தப்பித்து விதியாகும் வெளியாகிறது.

தான் ஆடும் நாடகத்தில் தானே இயக்குனர் என்பதால் அந்த அம்மா கதாபாத்திரம்... உயர்ந்த கட்டடத்தில் நின்றுகொண்டு யாரோ தள்ளிவிடுவது போல விழ முற்படுகையில் பின்னால் தள்ளிவிட ஒரு பாழும் கிழவி முயன்றுகொண்டிருப்பது வஞ்சத்தின் நியாயம். அது திருப்தியின் திரும்புதலை எங்கோ ஒளித்துக்கொண்டு எங்கோ தேடுகிறது. பிரியமானவர்களின் மரணத்தில் மீந்துவிடுகின்றது இப்படியாகப்பட்ட மானுடத்தின் மிச்சம்.

வலிமைக்கு வலிமை எளியவையும் ஆகும். அது மிகச் சாதாரணமாகக் கதவைத் தட்டிவிட்டுப் போய்விடும். திறக்கையில் அன்போடு சிறகு முளைத்த தேவதை ஒருத்தி எந்த வயதிலும் நிற்கலாம்.. ஒரு கூடை அன்பைச் சுமந்தோ அல்லது ஒரே ஒரு காரணம் சுமந்தோ.

அன்பை விட கொடிய ஆயுதம் ஒன்றுண்டோ....!

**திரைப்படம் : Pieta**

**இயக்கம் : Kim Ki-Duk**

**மொழி : கொரியன், ஆங்கிலம்**

**ஆண்டு : 2012**

■

கவிதையியல் குறித்த நேர்காணல்கள்

6

மௌனன் யாத்ரிகா

# கற்பதுவே.. கேட்பதுவே..!

மொழிபெயர்ப்பாளர் அசதா



**சொந்த மரபைத் தவிர்த்து மேற்கத்திய மரபை உள்வாங்கி எழுதப்படும் கவிதைகள் ஒரு மொழிக்கு புதிய கோட்பாட்டை வேண்டுமானால் உருவாக்கிக் கொடுக்கலாம். காலம் கடந்தும் மொழியின் ஆவணமாக மிஞ்சியிருக்கக்கூடிய ஆற்றல் அதில் இருக்க முடியுமா?**

மரபு என்பது பெரிதும் வடிவம் உத்தி போன்ற புறவய குணங்களைச் சுட்டுவது எனக் கொண்டால் தொடக்கம் முதலே நாம் மேற்கத்தியக் கவிதைகளைச் சார்ந்து வந்திருக்கிறோம். நவீனக் கவிதை அவர்களுடையது, மெல்ல நமதாக அதனை உட்செரித்துக்கொண்டுவிட்டோம். நவீனக் கவிதைகள் குறிப்பிட்ட ஒரு மரபின் நூல் பிடித்து ஒழுகுவதில்லை, பாடுபொருள் என்ற வகையிலும் அவற்றின் பிரபஞ்சத்தன்மைக்கு முன்னால் இலக்கிய மரபுகள் தூலமாக நிற்பதுமில்லை. ஒரு காலகட்டத்தின் பொதுவானதும் தீவிரமானதுமான போக்குகளே இருக்கின்றன.

நீங்களே சொல்வதுபோல அவற்றின் பாதிப்பில் கவிதைகள் எழுதப்படலாம், அப்படியே நகலெடுக்காமல். மனிதனது உணர்வுநிலையின் தீவிரத்தில் குவியும் எந்த விஷயமும் பாடுபொருளாகலாம். வகுப்பில் எட்னா செயின்ட் வின்சென்ட் மிலேயின் ‘பீத்தோவனின் சிம்பனியைக் கேட்டல்’ கவிதையை நடத்தும்போது பிரம்மராஜனின் ‘சௌடய்யாவின் வயலின்’ கவிதையை வாசித்துக் காட்டிவிட்டுத் தொடங்குவேன். பிரம்மராஜனை நடத்தும் ஒருவர் வின்சென்ட் மிலேயை மேற்கோளிட்டுத் தொடங்கமுடியும். இதுதான் பிரபஞ்சத்தன்மை என நினைக்கிறேன். நெரூதா, பிரெவர் போன்றோர் தமிழில் கொண்டாடப்படுவதையும் இதனோடு

சேர்த்துப் பார்க்கலாம். மேற்கத்தியக் கவிதைகளின் பாதிப்பை உள்வாங்கி அசலாக எழுதப்படும் கவிதைகள் தமிழுக்கு அணிசேர்க்கவே செய்கின்றன. கவிதையாக அவற்றின் வெற்றியே காலத்தில் அவற்றின் இருப்பைத் தீர்மானிக்கின்றன.

**தன் வாழ்வியல் அல்லது உளவியலோடு தொடர்புபடுத்தி கவிதையைப் புரிந்துகொள்ள விரும்பும் வாசகன் ஒரு கவிதையை எப்படி அணுக வேண்டும்?**

நமது அகக் கவிதைகளின் அடிப்படையே இதுதான் என நினைக்கிறேன். தன்னை நோக்கிக் கவிதையைத் திறக்க முயலாமல் கவிதையை நோக்கி வாசகன் தன்னைத் திறந்துகொள்ளும்போது தனது வாழ்வியல் உளவியலோடு அந்தக் கவிதையை அவன் அணுகலாம். நவீனக் கவிதைகளில் அகமும் புறமும் திரிந்த அல்லது கலந்த ஒரு ஸ்திதி இருக்கிறது என்பார் யவனிகா ஸ்ரீராம். இப்படியான நிலையில் வாசகன் இன்னும் நுட்பமறிந்தவனாக பொறுமைமிக்கவனாக இருக்கவேண்டும். சங்கக் கவிதைகள் முதலாக நமது கவிதை மரபின் தொடர்ச்சியை அறிந்து வைத்திருப்பதும் உதவியாக இருக்கும்.

**பழங்குடி பாடல் மரபில் ஒரு தனித்துவம் உண்டு. ஒவ்வொரு வரியும் உடல் மொழியை வேண்டி நிற்கும். கவிதையும் உடல் மொழியும் இணையும் புள்ளியில் மகத்தான உணர்வு வெளிப்பாடு நடக்கும் என்று நினைக்க முடிகிறது. இன்றைய நவீனக் கவிதைகளில் அத்தகைய முயற்சியைக் காணமுடிகிறதா?**

பழங்குடி மரபின் தொடர்ச்சியாக எழுதும் என்.டி. ராஜ்குமார் போன்றோரது கவிதைகளில் நீங்கள் சொல்லும் பண்புகளைக் காண முடியும். லட்சுமணனின் ‘சப்பெ கொகாலு’ பழங்குடியினரது மொழியிலேயே எழுதப்பட்ட கவிதைகளைக் கொண்ட தொகுப்பு. இத்தகு கவிதைகள் உரத்து வாசிக்க வேண்டிய கவிதைகள், உடல்மொழி உரத்த வாசிப்பிலேயே சாத்தியம். ஆனால், கவிதை உரத்து வாசிப்பதற்கு அல்ல என்ற கருத்தே இங்கு நிலவி வருகிறது.

பட்டிமன்றம் உள்ளிட்ட பொது மேடைகளால் கேளிக்கை வடிவமாக நீர்க்கச் செய்யப்பட்டுவிட்ட கவிதை வாசித்தல் எனும் நிகழ்வுக்கு எதிரான ஒரு தீவிர நிலைப்பாடாக இதனைப் பார்க்கலாம். வாசகனும் கவிதையும் அந்தரங்கமாக உரையாடுவதே வாசிப்பு எனும்போது நவீனக் கவிதைகள் அதை நோக்கியே எழுதப்படுகின்றன. கவிஞர் ரவி சுப்ரமணியம் போன்றோர் நவீனக் கவிதைகளை இசைப்பதும், நாடக ஆளுமைகளால் நவீனக் கவிதைகள் நிகழ்த்தப்படுவதும் வரவேற்புக்குரியனவாகி இருக்கின்றன. இத்தகு கவிதை நிகழ்த்துதல்களில் உணர்வு வெளிப்பாடுகள் இன்னொரு தளத்தை அடையவே செய்கின்றன.

• • •

## கவிஞர் அன்பாதவன்

**சமூகம் பாழ்படும்போது, அதன் மிகப்பெரிய மனசாட்சியாகக் கவிஞன்**



**இருந்துவிடுகிறான். பின்வரும் காலமும் அதனால் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகுமா..?**

*சமூகம் பாழ்படும்போது அதன் மிகப்பெரிய மனசாட்சியாகக் கவிஞன் இருந்துவிடுகிறான். மிகச் சரியான அவதானிப்பு மௌனன். ஆனால், என் பார்வையில் 100 சதவீதம் இல்லை. நெஞ்சை உலுக்கும் பல நிகழ்வுகளைக் கண்டுகொள்ளாமல் மவுனங்களால் கடந்துபோகும் உன்னத கவிகள் ஊரில் உண்டு. எனினும் மனசாட்சியோடு படைப்புலகில் இயங்குபவரை பெரும்பான்மையாகக் கொள்ளலாம். அதனால்தான் இன்னும் மணிமேகலையை ஏற்க முடிகிறது. பாண்டியன் மீது கோபம் வருகிறது. யுத்தங்களைப் பெருமிதமாய்க் கருதிய சக்ரவர்த்திகளை விமர்சிக்க ஏலுகிறது.*

*காலமும் சமூகமும் நிச்சயம் குற்ற உணர்வுக்கு ஆளாக்கும், ஆளாக்க வேண்டும். அதோ அந்த மரம் என் அக்கா போல எனச் சொல்லி காதலனை வேறுபக்கம் அழைத்துப்போன சங்கத் தலைவி எங்கே! போராட்ட வடிவமாக வளர்ந்த விருட்சங்களை வெட்டிக் கொன்ற சங்க மனிதர் எங்கே! அந்தச் செயலை நியாயப்படுத்தும் படைப்பும் படைப்பாளிகளும் இன்றுமுண்டே. ஆற்று மணல் கொள்ளை, அரியலூரின் காற்று மாசு, எம் சேண்ட்க்காக மலை விழுங்கி கபளீகரிக்கும் மலையமான்கள், கொரோனாக் காலத்திலும் ஊழல் எனக் குற்றக் கூட்டத்துக்குக் குற்றவுணர்வு வருமா? வாக்களிக்க பணம் வாங்கும் மந்தை மனிதருக்கும் குற்றவுணர்வு வரக்கூடும். ஆனால், பலனிருக்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வி.*

**மொழிதல் முறையில் சமகாலக் கவிதைகள் அடைந்துள்ள மாற்றங்கள் எப்படி இருக்கின்றன?**

*ஒரு வாசகனாக, விமர்சகனாக, படைப்பாளியாக திருப்தி தரவில்லை. மேலை நாடுகளின் இசங்களை இறக்குமதி செய்து இருண்மை அது இது என்றும், பிறகு விரைத்த குறி விரிந்த யோனி எனவும் ஜல்லியடித்த கூட்டமொன்று இருந்தது ஒருகாலத்தில்.. வாசகனைப் பிச்சைக்காரனைப்போல் நடத்தி அறியாத பின்புலம், புரியாத மொழி எனக் கவிதை செய்பவரால் யாருக்கு லாபம்?*

*காதலித்த பெண்ணைத் திருமணம் செய்ய வக்கில்லாத totally negative ஆன கோழை மனிதனைச் சாதனையாளனாகக் கொண்டாடும் குழுச் சூழல் வெற்றியின் திசைகளில் பயணிக்கும், அல்லது தான் கொண்ட கொள்கை, அரசியலில் மாறாமல் படைக்கும் படைப்பாளிகளிடம் நுட்ப ஸ்கேலால் அளக்கும். புறக்கணிப்பு அரசியல் அனைவரும் அறிந்ததுதான். மேலும், தலித்திய, பெண்ணிய மொழிதலின் கூர்மை பல நவீனக் கவிதைகளில் இருப்பதாக நான் கருதவில்லை.*

...

## கவிஞர் கவிதைக்காரன் இளங்கோ



**அடுத்தடுத்த வாசிப்பில் அற்புதமான வாசிப்பனுபவத்தைத் தந்தது என்று சொல்லப்படும் கவிதைகள் முதல் வாசிப்பில் ஏன் புரிவதில்லை?**

எந்த நவீனக் கவிதையும் வாசகனைக் கைப்பிடித்துக்கொண்டு தன் மையத்தை நோக்கி அழைத்துப் போக விரும்புவதில்லை. மாறாக, வாசகனோடு சேர்ந்து அவன்

போக்கில் பயணிக்கவே பொறுமையாகக் காத்திருக்கிறது. (அது, எத்தனைக் காலமானாலும்). ஒரு வாசகன் தான் விரும்பி தேர்ந்தெடுத்துக்கொள்ளும் கவிதைக்குரிய மிகச் சரியான வழிகாட்டி அவனேதான். கவிதையின்பால் உருக்கொள்ளும் அவனுடைய வாசக மனமும் அதன் கண்கொண்டு தரிசிக்கவிருக்கும் பார்வைக் கோணமும் அவனுக்கானது. மிகப் பிரத்யேகமானது.

வாசிப்பில் புரிதலும், புரிதலற்ற தன்மையும். முதலாவதாக (அதுகாறும்) கைக்கொண்டுள்ள மொழி வல்லமை சார்ந்தது. இரண்டாவதாக, வாசிப்பனுபவமாய் அதனோடே நிகழ வேண்டிய உளப் பாய்ச்சலுக்கான திறன் சார்ந்தது. ஒரு நவீனக் கவிதையின் அகவெளிக்குள், புறத்திலிருந்து பிரவேசிக்க விரும்பும் நோக்கத்தில் இருக்க வேண்டிய தெளிவு என்பது தனிமனிதத் தேர்வு சம்பந்தப்பட்டது. எந்த ஒரு பிரதியும் வாசகனைத் தமக்குள்ளே கட்டுப்பாடுகளற்று அனுமதிக்கவே செய்கிறது. முதல் வாசிப்பிலேயே புரியாமல் போகின்ற போதாமையின் காரணங்களை ஆராய்ந்துகொள்ள வேண்டியது அவரவர் தேவையைப் பொறுத்தது.

**ஒரு கவிஞர் தன் சொந்த வாழ்வை எழுதித் தீர்த்தல் என்பது ஆற்றாமையின் வெளிப்பாடா? இல்லை, அதிலிருந்துதான் ஒரு கவிஞரின் படைப்பூக்கம் வளர்கிறதா?**

பரந்து விரிந்துகொண்டிருக்கும் பிரபஞ்சத்தில் சிறு தூசு இந்தப் பூமி. அதிலிருந்து ஐம்பூதங்கள் பற்றின உணர்தலை எப்போதோ எய்திவிட்டோம். ஐம்புலன்கள் குறித்து நன்கு அறிந்துகொண்டோம். அப்படியான ஐம்பூதங்களையும் ஐம்புலன்களையும் ஒப்பிட்டுத் திரிய முடிந்த நாகரிக மிருகம்தான் மனிதன் எனவும், அவனுடைய இருப்புத்தான் இந்த வாழ்வு எனவும் புரிந்துகொண்டதாக ஒப்புக்கொண்டு நம்பினோமேயானால், அப்படியான வாழ்வைச் 'சொந்தம் கொண்டாடி' எழுதித் தீர்த்தல் என்கிற ஒன்றிற்கு சாத்தியமேயில்லை. அதிலிருந்துதான் ஒரு படைப்பூக்கம் 'வளரும்பட்சத்தில்' ஒருவன் கவிஞனாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

படைப்புக்குரிய க்ரியா ஊக்கி உள்ளிருந்து வெளியேயும், வெளியிலிருந்து உள்முகமாகவும் உந்தித் தள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது. அதில் ஆதிமனிதனின் மரபணுத் தொடரிலிருந்து இன்னும் பிறக்கவே பிறந்திடாத மரபணு உயிரி வரைக்கும் சம்பந்தம் உள்ளது (அதிலும் ஐம்பூதம் + ஐம்புலன்).

இடைப்பட்ட வழிப்பயணத்தில் கவிஞன் அனைத்தையும் அவதானித்திடும் ஒரு சாட்சியாகக் கொஞ்ச காலம் பிறருடன் இருக்க விருப்பங் கொண்டிருக்கிறான். (இதில் ஆற்றாமையைப் பற்றிப் பேசுவானேன். That's a Cliché.)

**கவிதைக்கான அழகியல் தொழிற்படாமல் விடுபடுவது ஒரு படைப்பின் வீழ்ச்சியாகுமா?**

பழகிய நெடும்பாதையிலிருந்து விலகி நவீனத்துவத்தில் புதிய தரிசனங்களைக் கண்டடைய விரும்பும் ஒரு கவிதை யாத்ரீகனுக்கு, விரும்பியோ விரும்பாமலோ தம் முதுகில் ஏற்றிக்கொள்ளும் பழஞ்சுமை கொடுஞ்சுமையாக மாறி அப்பயணத்தை மட்டுப்படுத்திவிடலாம். 'எமக்குத் தொழில் கவிதை' என்று சொன்ன பாரதியை எப்படி உள்வாங்கிக் கொண்டோம் என்கிற தன்னிச்சையான சுயகேள்வியை ஒருமுறை நினைத்துப் பார்த்துக்கொள்ளத் தோன்றுகிறது.

ஆக, கவிதைச் செயல்பாட்டில் நவீனத்துவத்தை முன்னிறுத்தி இம்மூன்றாம் கேள்வி கேட்கப்பட்டிருக்கும் பட்சத்தில், 'அப்படியான' அழகியல் தொழிற்படாமல் விடுபடுவது ஒரு படைப்பின் வீழ்ச்சியாகாது.

• • •

## கவிஞர் ஸ்டாலின் சரவணன்



**கவிஞன் பல்வேறு கோணங்களில் வாழ்பவன். வெவ்வேறு மனநிலையில் சஞ்சரிப்பவன். மாபெரும் கூட்டத்தின் நடுவே நின்றுகொண்டு தனிமையை உணர்பவன். பலரும் மகிழ்ச்சியாக இருக்கும் இடத்தில் உடைந்து அழுதுவிடக் கூடியவன். ஏன் இந்தக் கவி மனம் இப்படியெல்லாம் இருக்கிறது?**

கவிஞன் வெவ்வேறு மனநிலையில் சஞ்சரிப்பவன் என்பதில் சந்தேகமில்லை. நேர்க்கோட்டில் வாழ்பவனுமில்லைதான். மற்றைய அனுபவம் எனக்கு நிகழ்ந்ததில்லை. இந்த வெவ்வேறு மனநிலைகள் ஓடும் தெளிந்த நீரெனில் உருண்டோடும் கூழாங்கற்கள் அவனது கவிதைகள். அவ்வாறே பளபளக்கும், பாசிபிடித்த, கருப்பு கூழாங்கற்கள் வகைவகையாய்க் கிடைக்கின்றன.

சில கவிதைகள், படிமங்கள் நமக்குள் எவ்வாறு பதியமிட்டன என்பதன் நதிமூலத்தை நாமே அறிந்துகொள்ள முடியாது. அது நனவிலி மனதின் வேலையாகத்தான் இருக்க வேண்டும். ரொம்பவும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினால் நமக்கு நாமே கால்கள் இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொள்வதில் கொண்டு விட்டுவிடும்.

எல்லாவற்றையும் கவிமனம் என்னும் காளியின் சூலத்தின் கூர்முனையில் போட்டுவிட்டால் அது நாக்கில் எழுதிவிட்டுப் போகிறது.

**தன் சொந்தத் திணை மண்டலம் கண் முன்னால் சிதைவதை எழுதி அரற்றுவதைவிட ஒரு கவிஞனால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. இச்சூழலில் ஒரு கவிமனம் அடையும் பாடுகள் எப்படி இருக்கும்?**

மொழியும் நிலமும் ஒன்றையொன்று சார்ந்து வளர்வன. பாணர்கள் பாடி திரிந்துதான் நாட்டின் வரைபடத்தை வரையறுத்தார்கள் என்று சொல்வார்கள். மொழி, நிலம், புலவர்கள் சமூகத்தின் அடுத்தடுத்த கண்ணிகளாகின்றனர்.

தனி மனிதனை மொழிதான் நிலத்தோடு பிணைத்துச் சமூகமாக்குகிறது. குறிப்பிட்ட மொழி பேசுபவர்கள் விரவும் இடமெல்லாம் நிலத்தின் எல்லை விரிந்துகொண்டே செல்கிறது. புற, அகப்பாடல்களின் பொருண்மையாக நிலம் ஆகும்போது காதலும் வீரமும் முகிழ்க்கின்றன. நிலம் குறித்த பாணனின் பாடல் உரிமையின் குரல். அவன் பாடும் அறம் அரசதிகாரத்தை நெஞ்சைப் பிடித்துக்கொண்டு வீழச் செய்யும் என்று நம்புகிறேன்.

**ஒரு படைப்பாளன் தம் மொழிக்கும் நிலத்துக்கும் சமூகத்திற்கும் நேர்மையாக இருக்க வேண்டுமா?**

நிலமும் மொழியும் சமூகத்தின் அடையாளங்கள். மனிதன் தன்னைப் புறவயமாக நிலத்தின் வழியாகவே உணர்கிறான். மொழியைக் கட்டமைக்கும் ஒரு வடிவம் கவிதை. கவிதையின் கால்கள் நிலத்தில் வலுவாக ஊன்றி நிற்கின்றன. ஒன்றின் வழியாக ஒன்று ஊடாடும்போது கவிஞன் காலத்தின் சாட்சியாகிறான். பெரும்பாலும் அரசதிகாரத்திற்கு எதிராக நிற்பதென்பது படைப்பு நேர்மையைக் கூர்ப்படுத்துகிறது. ■



## முகவரியற்ற புன்னகை!

பழுத்தோலை
குருத்தோலைக்கு
உயிர்(வளி) தந்து
உயிர்ப்பித்து
உதிர்கின்றது
முதிர் புன்னகையுடன்!

பேரிடர் காலத்தில்
புகலிடமாகின்றன
கோவில்கள், தேவாலயங்கள்,
மசூதிகள்!
அடைக்கலம் அளித்தவர்களின்
முகங்களில் பூத்திருக்கும் சமயமற்ற
சகோதரத்துவப் புன்னகை!

இரத்த சம்பந்தங்களின்
அறுவை சிகிச்சைக்கு
இரத்தத்திற்கு அல்லாடுகையில்
இரத்த சம்பந்தமே
இல்லாதவர் உவந்தளிக்கும்
இரத்தத்தில் பூத்திருக்கும்
மரணிக்காத
மனிதப் புன்னகை!

இன்னா செய்தாரை அவர் நாண
நன்னயம் செய்வதில்
மறைந்திருக்கும்
வெற்றிப் புன்னகை!

ஈருருளியில் விரைகையில்
அண்ணா! சைட் ஸ்டாண்ட்
என எச்சரிக்கும்
முகமறியா
நலன் விரும்பியை
நினைத்து மனதில் பூக்கும்
முகவரியற்ற
நன்றி புன்னகை!

குழந்தைகளை
பாலூட்டி சோறூட்டி
சீராட்டி வளர்த்து
ஆளாக்கி
சமுதாயவீதியில் கம்பீரமாக
உலவுவதை வாசற்படியில்
நின்று இரசிக்கும்
அன்னைகளிடம்
தஞ்சமடைந்திருக்கின்றன
முகவரியற்ற
தியாகப் புன்னகைகள்!

கலி முற்றினும்
எத்தனையோ
முகவரியற்ற புன்னகைகளால்தான்
இன்றும் நிற்காமல்
சுற்றிக்கொண்டிருக்கிறது
பூமி!
கொஞ்சம் கண்துஞ்சி ஓய்வெடுக்கிறார்
சாமி!

- பா.சிவகுமார்

•

இறந்தகாலத்தின்
உதரம் கிழித்து
உறைந்து கிடக்கும்
நினைவுத் துணுக்குகளை நிழலாடச் செய்து..

கனவின் அடியாழங்களில்
கால்வைத்து இறுகிக்கிடக்கும்
சந்தோசத்தின் பூட்டுகளைத் திறவுகிறது...

பிசுபிசுத்துக் கிடக்கும்
பெருங்கதறல்களின்
சாம்பல் குழைத்து
உடலெங்கும் பூசிக்கொண்டு..

பல்லிடுக்கில் சிக்கிய
உணவுத் துகளாய் நழுவிப்போன
பால்யத்தை முத்தமிட்டு,
நிகழ்காலத்தின் முகவரிக்குள்
அழைத்துவரும் நிழற்படங்கள் யாவும்

நினைவுகளின் பிம்பங்கள் மட்டுமல்ல.

ஓய்வின்றி
நகரும் காலத்தின்
காற்புள்ளிகளின் மேல் வைக்கப்பட்ட
சிலவிநாடி முற்றுப்புள்ளிகள்.

**- இனியவன் காளிதாஸ்**

*

எங்கோ நிழல் தேடி
வேகமாய்ப் பறந்து போகும் பறவை
வேடிக்கை பார்த்தபடி வெயிலில் நான்

**- பட்டியூர் செந்தில்குமார்**

•

தெளிந்த ஓடையில்
ஆழத்தில் தொடர்கின்றது
நகரும் படகின் நிழல்

**- ஷர்ஜிலா யாகூப்**

•

என் வாழ்விற்கு
மிக நெருக்கத்தில
இரண்டு சாலைகள் உள்ளது
ஒன்று நான் தனிமையில்
நடந்து வருகிறேன்
மற்றொன்றில்
நிறைய பேரிருந்தும்
தனியாய் நடந்து வருகிறேன்
மூன்றாவதாக ஒரு குறுக்கு வழி
யார் யாரோ என்னைப் பார்த்து
கையசைக்கிறார்கள்
செருப்பை உடலாக்கி
தேய்வதற்கு மனமில்லை
திரும்பி விடுகிறேன் பத்திரமாக

**- ராம் பெரியசாமி**

*



சிறுகதை



● மீரா
● ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

# வெண்ணிலா

குறும்பும் குதூகலமுமாக நிறைந்த அவள் நெஞ்சம் இப்போதெல்லாம் அப்படி இல்லை. எதையோ இழந்தாற் போலவே தெரிகிறாள். யாரையோ எதிர்நோக்கிய அவள் பார்வைகளும் வெற்றிடம் நிரம்பிய அவள் சூழலும் அவளை எங்கோ இழுத்துச் செல்கிறது. இழுபடுதலென்ற கொடூரம்... படித்தலில் புரிதல் அல்ல. கட்டாயப்படுத்தும் காலமும் கை விலங்கிட்ட நேரமும் என்னவோ அவளுக்குச் சாதகமாய் இல்லை என்றே உணர்ந்திருந்தாள். ஒட்டடை படர்ந்த அவள் நினைவுகளை ஏனோ இன்றுதான் விலக்கிப் பார்க்கத் துணிந்திருக்கிறாள். நாம் ரசித்து வசித்த புழக்கத்தில் இல்லா வீடொன்றைத் திறக்கையில் நிழலாடும் நிஜங்கள் நம்மை எப்போதும் பலகீனமாக்கும் என்பதை அவளும் உணர்ந்திருந்தாள். பழக்கமில்லாப் பலகீனத்திற்குள் நுழைய பலமாகியிருந்தாள்.

ஆமாம்... யாரவள்... ஏன் அவள் இந்த இரவில் இங்கிருக்கிறாள்... எதற்காகத் தன் பழைய பக்கங்களைத் திருப்பிப் பார்த்துத் தூசி தட்டத் துடிக்கிறாள்... யாரவள்?

நாட்குறிப்பேட்டில் அடுத்த நாள் தொடர்வதுக்கு ஏதுவாய்... பக்கங்களை நினைவுபடுத்தும் ஒற்றை கயிறொன்றை எந்தப் பக்கத்திலும் திணிக்காது தனித்து விடப்பட்டவள்தான் இவள்... என்பதை விட எந்தப் பக்கங்களிலும் நுழைந்திருக்கும் விருப்பமற்றுத் தனித்திருக்க ப்ரயத்தனப்பட்டவள்தான் இவள் எனலாம்.

ஆம்... ஒவ்வொரு பக்கங்களையும் அழகாக்கி நேர்த்தியாய் அடுத்த பக்கங்களுக்கு இட்டுச் சென்று சுவாரசிய உணர்வுகளை அவளுடையதாக்கிப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் ஏதுவாக அழகிய கதை களத்தைத் தன்னுள் அடக்கிய நாயகி அவள்.

ஆண்களின் உயரத்திற்கு இணையானவள். கோள விழியழகில் கொத்தித் தின்பவள்.. கூர் நாசி தீட்டி உளியாக்கி வளியைக் கிழிப்பவள்... இதழிரண்டும் இணைந்திருக்கும் இரட்டைக் கிளவிகள்... கன்னங்கள் கவியெழுத படர்ந்திருக்கும் காகிதங்கள்... செவியோ செந்தமிழ் சொல் நுழையத் துடிக்கும் இன்பச் சுரங்கம்... கழுத்தும் மார்பும் தங்கங்கள் தங்கித் தவழும் தேகக் குழந்தை... இடையோ மழலை மகிழ்ந்திருக்கும் மலர் அணி ஊஞ்சல்... கால்கள் இன்ப வழி அறிந்து வழி நடத்தும் திசைகாட்டிகள்... பாதம் பக்குவமாய் இசைக்கும் நாதம்... தேவாதி தேவனும் மண்டியிடும் தேவதைகளின் கடவுளின் மனிதப் பிறப்பு இவள்... என்று வர்ணனையின் உச்சிக்கே கவிஞர்களை இட்டுச் செல்லும் பேரழகி இவள்.

பெயரோ வெண்ணிலா. இருபத்து ஐந்து வயது ததும்பியவள். வீட்டிற்கு முதல் பெண். ராஜா ராமு... இரண்டு தம்பிகளை அன்பாய்ப் பேணும் அன்னை. நடுத்தர வயதினை அடைந்த விவசாயி இவள் தந்தை. அன்னையற்ற குடும்பம். இவளே அனைத்துமாய் இருந்தாள்...

தம்பியொருவன் லீலைகளில் கண்ணனை மிஞ்சியவன். இன்னொருவன் கடும் முரடன்... ஊர் வம்புகளையெல்லாம் உடனடியாக இழுத்து வருபவன். தாயில்லாப் பிள்ளைகளைத் தாயைப் போல வளக்கணும் தாய் போல வளக்கணுமேனு... செல்லம் கொடுத்து வளர்த்ததே இவள் செய்த தவறென்று அடிக்கடி நொந்துகொள்வாள்.

தையல் தொழிலைத் தன்னகமாய்க் கொண்டே தங்களது வாழ்க்கைச் சக்கரத்தைச் சுற்றி வருகிறாள்... தோட்டத்தில் விளையும் காய்கறிகளை விற்று குழம்பு செலவ தேத்திப்பா... அவ்வப்போது #அவனை எண்ணி பொன்முறுவலும் பூத்துக்கொள்வாள்... தம்பிகளை நல்லா பக்குவப்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தால்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு கட்டுக்கோப்பாக வாழ்க்கைய நகர்த்திட்டு இருந்தாள்.

ஆனா இப்போ இந்த இரவுகளை வென்றவளாய் விழித்தபடியே யாருக்காகவோ காத்திருக்கிறாளே! ஏன்? இவளுக்கு அப்படி என்னதான் ஆச்சி.. ஏன் இரவுகளில் இப்படி உலாவிக்கொண்டிருக்கிறாள். அவ்வண்ணமே சோகமும் சுகமுமாய்ச் சென்றுகொண்டிருந்த வாழ்வில் வந்த திருப்புமுனையே #அவள்.

ஆம், அவள் பெயர் மணிமேகலை. நடுத்தர வர்க்கத்தவள். நகர வாசிகளைப் போல் மிடுக்கான ஆடைகளில் தென்படுவாள்.

*“Dei raja ne innuma kelampala...*

*Eppothan kilampuva... Yen ivlo late panra...”*

*“Raja...”*

*“Raja...”*

என்ற குறுஞ்செய்திகள் மூத்த சகோதரன் இராஜாவின் கைப்பேசியில் விழுந்ததன...

அங்கும் இங்கும் உலாவியவனாய், *“Iru di unna mathiriya nanu... Akka ayiram kelvi keappa ellathukum samalici pathil sollitu vara ve-andama knja nearam amaithiya iru msg pannama nanea velila vanthutta call panran”* என்று பதில் குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு செய்வதறியாது விழித்துக்கொண்டிருந்தான் இராஜா.

ரொம்பவே தயக்கமானவனாய்... நடுக்கமானவனாய்... எப்படி சொல்வது... என்ன சொல்வது என்பது விளங்காதவனாய்... திணறி மூச்சை வேகமாக விட்டவனாய் வெளியே கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த அப்பாவைப் பார்த்தான்.

உழைத்த களைப்பில் அக்கடா என்று படுத்திருக்கும் அவரைப் பற்றிய எந்தக் கவலையோ பயமோ இராஜாவிடம் தென்படவில்லை. அடுத்தபடியாக... அவன் கண்கள் தம்பியைத் தேடியது. மதுவுண்ட மயக்கத்தில் முற்றத்தின் மறு மூலையில் பொலம்பலை மென்றுகொண்டு “டேய் விட மாட்டேன் டே குடிக்கார நாயே! வி...ட... மா.. ட்டே...ன்...டா..” என்று படுத்திருந்தான்.

“ச்சே இவன் வேற வெட்டி பய நேரங்கெட்ட நேரத்துல பொலம்பிட்டு...” தான் என்னவோ பெரிய உத்யோகஸ்தர்

போல முனகிக்கொண்டு.. மெல்ல பூனையாக மாறலானான் இராஜா.

பாதங்கள் தரையில் பதியாவண்ணம் பதித்து... தையல் மெஷின் ட்ராவை நெருங்கினான். வெண்ணிலா துணி தைப்பதில் வரும் பணங்களை ட்ராவில் வைப்பதே வழக்கம் என்பதை வீட்டில் எல்லோருமே அறிந்திருந்தனர். தையல் மெஷின் பலகையை ஒரு கையால் பிடித்து மறு கையால் ட்ராவை ஓசையின்றித் திறக்க முயற்சித்தான்.

அமைதியான இரவுப் பொழுது ஆங்காங்கே உறங்கும் சொந்தம்... மெல்லச் சுற்றிக்கொண்டிருக்கும் மின் விசிறி. அதனூடே உற்றுக் கேட்டால் மட்டுமே செவி நுழையும் கடிகார ஓசைக்கு நடுவே திடீரென அவனையும் அவர்கள் வீட்டில் வளர்க்கும் மீனுவையும் அதிர வைத்தது... ஊரின் மையத்திலிருக்கும் மாதா கோவிலில் மணிக்கொரு முறை எழுப்பும் வேத வசனமும் அதன் பின்பொலிக்கும் மணிச் சத்தமும்.

அக்கா அசைந்துவிடுவாளோ என்று பயந்தவனாய்ப் பட்டென்று அருகிருக்கும் பீரோ பக்கம் ஒளிவதற்கும் பரணிலிருந்த மீனு தையல் மெஷின் பலகையில் குதிப்பதற்கும் சரியாக இருக்க பதட்டத்தில் கத்தரிக்கோலைத் தெரியாமல் தட்டிவிட்டான் இராஜா.

பதறி எழுந்தாள் வெண்ணிலா...

“மியாவ் மியாவ் மியாயாயாவ்...”

வாலை வேகமா அசைத்துக்கொண்டு வெளியே சென்றது பூனை மீனு.

“ஹேய் மீனுக் குட்டி எங்க போற.. கத்தாம படுத்துத் தூங்க மாட்ட... எப்போதும் கேக்குற சத்தம்தானா.. இராத்திரி நேரத்துல இப்பிடியா பண்ணுவ” கொஞ்சலாய் அதட்டியபடியே கத்தரிக்கோலை எடுத்து மேலே வைத்தபடியே வீட்டுக்குள் சுற்றும்முற்றும் பாத்துக்கிட்டே வீட்டை விட்டு வெளியே சென்றாள் வெண்ணிலா.

‘அப்பாவும் சின்ன தம்பியும் படுத்திருக்க... பெரிய பயல காணோமே, எங்க போயிருப்பான்...’ யோசித்தவளாய் நிலவொளி படர்ந்த இரவில் ‘இராஜா... இராஜா’ என்று மெதுவாக அழைத்தாள்...

அவன் இருப்பதற்கான தடம் ஏதுமில்லை. வாசலில் அடைத்து வைத்திருந்த மூங்கில் தட்டியை நகர்த்தி... தெரு விளக்கின் ஒளிக்கும் விரிந்த அவள் கோள விழிக்கும் எட்டிய தூரம் வரை வெறித்துப் பார்த்தாள்.

குழம்பியவளாய்... குட்டிப் போட்ட பூனை போல வாசலிலே நடக்கலானாள். உலவும் வெண்ணிலாவிற்கு உறுதுணையாக அவள் நிழலாய் அவளுடனே உலாவிக்கொண்டிருந்தது.. விண் நிலா. நிலவோடு அவளும் அவளோடு நிலவும் அங்கும் இங்கும் உலாத்திக்கொண்டிருந்தனர். மெல்ல அவள் கால்களைத் தனது வாலைக் கொண்டு உரசி “மியாவ்” “மியாவ்” எனக் கொஞ்சத் தொடங்கியது மீனு.

அங்கும் இங்கும் உலாத்திக்கொண்டிருந்தவள் நின்று நிதானமாக மீனுவைத் தூக்கி ‘என்னடி குட்டி பயந்துட்டியா? பெரிய அண்ணனைக் காணுமே மீனு. எங்க போனானு பாத்தியா... எங்க வேகமா ஓடுன...’ என்று பூனையின் தலையை நீவிக்கொடுத்துக் கொண்டே வந்து வாசலில் அமர்ந்தாள்.

பீரோவின் அருகில் மறைந்திருந்த இராஜாவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை... ‘அக்கா பாத்தா என்ன சொல்வாளோ தெரியலையே! என்னத்த சொல்லி எப்படி தப்பிப்பது... அவ வேற வெயிட் பண்ணுவாளே! என்ன காரணம் சொல்லி வீட்டை விட்டு வெளிய போறது.. அக்காகிட்ட என்ன பொய் எப்படியெல்லாம் சொல்லலாம்’ என்ற பயமென்னும் போர்வையிலிருந்து வேர்வைத் துளிகள் தேக வீதியில் நாட்டியமாட... என்ன நாடகமாடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே அடுத்த அழைப்பை விடுக்கலானாள் மணிமேகலை.

‘இராஜாவோ!’ கைப்பேசியின் குரல்வளையைச் சட்டென நெறித்தான்... அடுத்த நிமிடம்,

*“Enna raja varuviya vara matea”*

*"Unnala oru ponnu unakaga intha night nearathula wait panran"*

*"Ne ennadana en call cut panra"*

*"Ellarum solra mathiri ne oru play boy thana"*

*"Enna yeamathitea"*

*"Ipo mattum ne varalana nan enna seivanu enakea thaeriyathu"*

என்று பதில் எதும் டைப் செய்யவிடாமல் இராஜாவிற்கு ஐந்தாறு குறுஞ்செய்திகளை மளமளவென்று அனுப்பினாள். அதை இராஜா படித்துக்கொண்டிருக்கும்போதே அடுத்த அழைப்பு வந்தது. மீண்டும் நெறித்தான். இப்போது இவன்...

*"Iru di varan"*

*"En chlm di ne"*

*"Konjm en situation purinciko"*

*"Akka elunthutta"*

*"Nan vanthurvan kandeepa enna nampudi"*

*"Love you di meaga"*

என்று பதில் குறுஞ்செய்தி அனுப்பிக்கொண்டே தன் நாடகத்தைத் தொடங்கினான் இராஜா.

தனது கைப்பேசியை நார்மல் மோட்க்கு மாற்றி... கேலரியில் இருக்கும் தனது இசைப் பக்கத்திற்குச் சென்று எப்போதும் அவன் வைத்திருக்கும் ரிங்டோன் ஒலியைத் தானே ஒலிக்கச் செய்து என்னவோ தூக்கத்திலிருந்து எழுந்தவன் போலத் தாளிட்டிருந்த உள் அறையின் தாழ்ப்பாளைச் சத்தமாய்த் திறந்து உள்ளிருந்து வெளி வருபவனாக பாவனை செய்துகொண்டு பீரோவின் ஓரத்திலிருந்து,

"என்னடா பாபு இந்த நேரத்துல போன் பண்ணிருக்க.. என்னடா ஏதும் அவசரமா.." என்று வெண்ணிலாவின் காதில் விழுமாறு வாசலில் அமர்ந்திருந்த அக்காளைத் தன் கைகளினால் நகர்த்திக்கொண்டு வெளியே சென்றான் இராஜா.

கைப்பேசியில் "ம்" "ம்" "ம்" என்று சொல்லிக்கொண்டே அக்காளைப் பார்த்து 'என்ன தூங்காம வாசலுல உட்கார்ந்துருக்க..' என்றவாறு புருவங்களை உயர்த்தி விழிகளை உருட்டிக் கேட்டான். அவளோ பேசு பேசு என்று கைகளையும் இதழ்களையும் அசைத்தாள்.

இராஜா தனது நாடகத்தைத் தொடருவதற்கு ஏதுவாக... 'என்ன பாபு இந்த நேரத்துல இப்படி சொல்லுற.. நான் எப்படிடா வர.. சரி இரு அக்காட்ட கேட்டுப் பாத்துட்டு கால் பண்ற'னு கைப்பேசியைக் கைகளுக்குள் அடக்கிக்கொண்டான்.

வெண்ணிலாவும் தம்பியைப் பார்த்துத் திருப்தியில் தனது தேடலை மறந்தவளாய்த் தம்பியைப் பார்த்து, 'என்னய்யா என்னா ஆச்சு யாரு போனுல?' என மஞ்சள் முகம் வெளிற வெள்ளந்தியாகக் கேட்டாள்.

"பிரண்ட்கா. அவங்க அம்மாக்கு உடம்பு சரியில்லனு ஆஸ்ப்திரில சேத்ருக்கானாம் கா... தனியா இருக்க பதட்டமா இருக்குடா. நீ வாடா, எனக்குத் தொணையானு கூப்டுறான்கா... நான் அக்காட்ட கேட்டுச் சொல்றனு வைச்சுட்ன்கா"னு சொன்னான் நல்லவனாய்.

அம்மாவை இழந்து அம்மாவாக வாழும் அவளுக்கு அந்த வார்த்தைகள் வருத்தம் அளிக்கவே... 'நீ கெளம்புடா... இந்த மாதிரி நேரத்துல கூட இருக்கிறது ரொம்ப அவசியமும் ஆறுதலும்' என்று சொல்லிக்கொண்டே தனது தையல் மிஷினின் ட்ராவில் இருக்கும் பணத்தை எடுத்து எண்ணத் துவங்கினாள்...

"எய்யா இராஜா. 500 ரூவா இருக்குயா. இத வச்சிக்கோ... தேவபட்டா அவனுக்குக் கொடுத்து வொதவுயா"னு ரூபாய் நோட்டுகளை இராஜா கைகளில் திணித்தாள் வெண்ணிலா.

"ஏன்யா இந்த ராத்திரில எப்பிடியா போவ... இருந்த வண்டியையும் அடமானம் வைச்சித் தொலைச்சிட்டான் இந்த முரட்டுப்பய... எப்படி தூங்குறான் பாரு மண்ணுனு கூடப் பாக்காம... சொல்ற பேச்சைக் காதுல ஏத்துக்குறதே இல்லை... இவன எப்புடிதான் மாத்துறதோ தெரிலயே" என அக்கறை கலந்த வார்த்தைகளால் தனது

வசவுகளை விதைத்துக்கொண்டே தனது அப்பாவை உசுப்பினாள் வெண்ணிலா...

“அப்பா! அப்பா!”

“ம்... என்னம்மா... என்ன?” என்ற அப்பாவிடம்,

“நம்ம இராஜா ப்ரண்டோட அம்மாக்கு ரொம்ப முடியலனு டவுன் ஆஸ்பத்திரில சேத்துருக்காங்களாம்... நீங்க போயி பெரியவனை பஸ்டாண்டுல இறக்கி விட்டுட்டு வாங்கப்பா...” என உரிமையான வார்த்தைகளை உதிர்த்தாள். வெண்ணிலா பொறுப்பான பெண் ஆகையால் அவள் வார்த்தைகளை எப்போதும் மறுப்பதேயில்லை அப்பா.

“ம்... சரி சரிம்மா...”

“இப்ப நேரத்துல பஸ் இருக்குமாயா இராசா” என்றபடி அப்பாவின் குரல் ஒலிக்க... “ம்... இருக்கும் இருக்கும்...” எனச் சலித்துக்கொண்டான் இராஜா.

வெண்ணிலா ஓடிப் போயி அப்பா சட்டைய எடுத்து வர தனது சைக்கிளை எடுக்க ஆயத்தமானார் அப்பா. நினைத்ததை முடித்த நினைப்பில் நிம்மதிப் பெருமூச்சு விட்டவனாய் அப்பாவின் பின் சைக்கிளில் ஏறிக்கொண்டான்... இராஜா.

அவன் கைப்பேசி... “ஒரே ஜீவன் ஒன்றே உள்ளம் வாராய் கண்ணா!” என்றொலிக்க... “இந்தா கிளம்பிட்டன்டா” என்றபடியே மணிமேகலைக்குத் தகவல் அளிக்க சக்கரங்கள் சுற்ற ஆரம்பித்ததன. வச்ச கண்ணை மாற்றாமல் தெரு முனையைத் திரும்பும்வரை பார்த்துக்கொண்டிருந்தவளாய் வெளி வாசலில் இருக்கும் மூங்கில் தட்டியை அடைத்துவிட்டு... சின்னத் தம்பியை மண்ணிலிருந்து இழுத்து படுக்கையில் போட்டுவிட்டு வாயிற் கதவைப் பாதி மூடியவளாய்ப் படுத்து கண் அயரத் தொடங்கினாள் வெண்ணிலா.

இதையெல்லாம் கூரையில் இருந்து வேவு பார்த்துக்கொண்டிருந்தது வின்_நிலா.

இடது கை பிரேக் கம்பியை அழுத்திப் பிடிக்க தன் ஒற்றைக் காலைச் சாய்த்து ஊன்றியபடி அப்பாவின் சைக்கிள் பேருந்து நிற்கும் இடத்தை அடைந்தது.

வேகமாக இறங்கி நின்றான் இராஜா.

சைக்கிளுக்கு ஸ்டாண்ட் போட்டு ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு... அங்கும் இங்கும் பார்த்துவிட்டு ஓரமாக நின்றுகொண்டிருந்த ஆட்டோகாரரைப் பார்த்து...

“எப்பா ஆட்டோக்கார தம்பி, டவுனுக்கு போற கடைசி பஸ் போயிடுச்சா பா?”

என்று விசாரிக்கலானார் அப்பா.

“இல்லைய்யா... இனிமேதான் வரும். இன்னும் நேரம் கிடக்கு. நானும் அந்த பஸ்ஸிற்காகத்தான் காத்திருக்கேன்”னு சொன்னார் ஆட்டோகாரர்.

அதனைக் கேட்டுக்கொண்டிருந்த இராஜாவோ, “நீ வேணும்னா போப்பா... நான் பாத்து ஏறிப் போயிக்கிறன்”னு சொன்னான்.

“வேணாய்யா வேணாம், நான் அப்படி உக்காருறன். நீயும் வந்து உட்காருயா... விட்டுட்டு வந்துட்டனு சொன்னா அக்கா ஏதாவது சொல்லுவா... நீ பஸ்ல ஏறுனதும் நான் போறேன்யா”னு சொல்லிக்கொண்டே ஓர் கொடிக்கம்பத்தின் சுற்று வட்ட சிமெண்ட் திண்டில் அமர்ந்தார் அப்பா.

“எனக்கென்ன போகத் தெரியாதா? பஸ் வந்ததும் ஏறிப் போகப் போறேன்... நான் என்ன சின்ன புள்ளையா? என்னமோ போங்க... நல்ல அக்கா... நல்லா அப்பா” என்று அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்துக்கொண்டே நிறுத்தியிருந்த சைக்கிள் கேரியரில் அமர்ந்து தன் கைப்பேசியில் மணிமேகலைக்குக் குறுஞ்செய்திகளை அனுப்பத் தொடங்கினான்.

*“Hei meaga... bus stop la irukan”*

*“Innum bus varla”*

*“Epdiyo akkatta escape agitan”*

*“Bus yearitu call panran di”*

மன ஓட்டங்களை அவளிடம் பகிர்ந்தான்...

*“Mm sari da sari sari..”*

*“Bus eppo varum”*

*“Ethum doubt agalaila akka”*

*“Mmm ok da”*

மணிமேகலை பதிலளித்தாள்...

பதிலுக்கு *mm* என்ற குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டுத் தன் முகநூல் பக்கத்திற்குச் சென்றான் இராஜா. ஒவ்வொருவரின் பதிவுகளையும் ஒற்றை விரலால் தள்ளியவாறே கடந்துகொண்டிருந்தான். மெல்லமாக முகப் புத்தகத்திலிருந்து எட்டிப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது அவள் முகம். அவளைப் பார்த்ததும் இதழும் விழியும் ஏதோ ஒருவிதப் பூரிப்பில் மகிழ... தான் எதார்த்தமாகப் பதிவுகளிலும் கமெண்டுகளிலும் பேச ஆரம்பித்த அவளைத் தோழியாக்கி அடுத்த நாலே நாட்களில் காதலியாக்கிய தருணங்களையும்... அவளை முதல்முதலாகப் பார்க்கப் போகும் இந்தத் தருணத்தையும்... எப்படி இருப்பாளோ? என்னவெல்லாம் பேசலாம்.. போனுல பேசிட்டோம்... வீடியோ கால்ல பேசுனா மாதிரிதான் இருப்பாளா? நேருல எப்படி பேசுறது? என்றெல்லாம் தனக்குள்ளே ஒரு முன்னோட்டம் பார்த்துக்கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் ஒரு மஞ்சள் ஒளி அவ்விடத்தை சூழ... ‘பப்பர பப்ப பப்பப் பேம்... பப்பர பப்ப பப்பப் பேம்’ என்ற ஒலி எழுப்பியவாறே நெருங்கியது அவன் காத்திருந்த அந்தக் கடைசி டவுன் பஸ்.

சத்தத்தைக் கேட்ட அப்பாவோ எழுந்து கையை அசைத்தபடியே நின்றார். இராஜா கைப்பேசியை பேண்டு பாக்கெட்டுக்குள் நுழைத்தவனாய், ‘சரிப்பா... அக்காட்ட சொல்லிரு, நான் போய்ப் பாத்துட்டு அவங்க எப்படி இருக்காங்கனு காலைல போன் பண்றனு...’ சொல்லிட்டு பஸ்ஸில் ஏறிப்போய் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

“பாத்து பாத்து போகணும்யா...” அப்பா கையசைத்தார்.

‘எப்பாடி எப்படியோ பஸ் ஏறியாச்சு...’ அங்கலாய்த்துக்கொண்டான் இராஜா.

நன்றெது தீதெது என்றுணரா வாலிப வயது. தாம் செய்வதெல்லாம் சரியென்று உணர வைக்கும் இளம் மனசு. அப்படியே தூளிக்கட்டி ஆடிக்கொண்டிருந்தது. மூன்று மாதம் ஆன முகம் காணாக் காதலியை முதன் முதலாகக் காணப்போகும் உற்சாகப் பெருவெள்ளத்தில் மிதக்கலானான்.



கண்டக்டரிடம் டிக்கெட் ஒன்றை வாங்கி சட்டை பாக்கெட்டில் வைத்துக்கொண்டு... பேண்ட் பாக்கெட்டில் இருக்கும் கைப்பேசியை எடுத்து கால் செய்தான்.

“ஹேய் மேகாக் குட்டி பஸ்ஸில் ஏறி டிக்கெட் எடுத்தாச்சி... என் செல்லக் குட்டிய பாக்க வந்துட்டே இருக்கன்... இன்னும் *40* நிமிசத்துல என் பொண்டாட்டிய பாக்க வந்துருவேனே!” என்று சொல்லிக்கொண்டே மணியைப் பார்த்தான்.

“அடியே! இன்னும் பத்தே நிமிசம்தான்... டடான் டடான் டடான்... அப்பிடியே பேசிட்டே இருப்பியாம்...”

“மாமா.. உன்கிட்டே பர்ஸ்ட் ஆமா சொல்லிருவேனா...”

அப்படி இப்படினு வாலிபக் கடலைகளை இருவரும் மாற்றி மாற்றி வறுக்க... மணி 12.01 ஐத் தொட்டுக்கொண்டிருந்தது.

“ஹேய் மணி 12 ஆச்சிடி... ஹாப்பி பர்த்டே டி என் பொண்டாட்டி..”

என்று சொல்லிக்கொண்டே முத்தங்களை ஒற்றியெடுத்தான் கைப்பேசியில். சத்தங்களைச் சிதற விடாது... நேரடியாக மணிமேகலைக்குக் கொண்டு சேர்த்தது கைப்பேசி.

“யாராவது பாத்துற போறாங்கடா பஸ்ல...’’

“யாருமே இல்லடி ரெண்டு பெரிசு பின்னாடி நல்லா வாய பொளந்து தூங்கிட்டுருக்கு... கண்டக்டர் டிரைவர் பக்கத்துல இருக்காரு நம்மள கேக்க ஆளே இல்லடி” என்று கனைத்துக்கொண்டு மீண்டும் தனது வறுவலைத் தொடங்கினான் இராஜா. பேருந்து வேகமாகப் பறந்தும் கொண்டிருந்தது...

அப்பா மெல்ல மெல்ல சைக்கிளை மிதித்தபடியே வீட்டை அடைந்தார். மூங்கில் தட்டியைத் திறந்து வீட்டிற்குள் சென்று சட்டையைக் கழற்றி ஆங்கரில் தொங்கவிட்டு வெண்ணிலாவைப் பார்த்தார். ‘எழுப்ப வேண்டாம் நல்லாத் தூங்கிட்டு இருக்குது... காலைலதான் பெரியவன் போன் பண்றனு சொல்லிருக்கான்ல... அப்ப பேசிக்கிட்டும்...’ எனத் தனக்குத்தானே பேசிக்கொண்டு அவரும் வாசலில் இருக்கும் கட்டிலில் போய்ப் படுத்தார்.

நடக்கவிருக்கும் விபரீதம் அறியாதவர்களாய் அவள் தூங்க... அப்பாவும் தூங்கத் தொடங்கினார். சற்றே நேரம் செல்ல... கூரையின் உச்சில் வேவு பார்த்துக்கொண்டிருந்த நிலா ஜன்னல் வழியே இரசிக்கலானது... இரம்மிய இரவில் தனியே தூங்கும் தேவதை வெண்ணிலாவை.

மறுநாள் காலையே எழுந்து வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுத் தன் தம்பிக்கு போன் செய்யலானாள் வெண்ணிலா... “திஸ் நம்பர் ஈஸ் கரண்ட்லி ஸ்விட்ச் ஆஃப்” னு வந்ததும் சற்றே பயந்தவளாய்த் தன் வேலையைத் தொடங்கினாள். மதியம் ஆனது மாலை நெருங்கியது போன் ஆன் ஆவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அவன் நண்பர்களைத் தேடிப் பார்த்து விசாரிக்க... அதன் பின்னர்தான் தெரியவந்தது மணிமேகலை விசயம். அவர்கள் இருவருக்கும் பேஸ்புக் பழக்கம் என்றும் நாளடைவில் காதலாக மெருகேறிய கதையும்... அவளுடைய அப்பா பெரிய கட்டப்பஞ்சாயத்துக்காரர் என்றும் அவளிடம் கூறி அவளின் பதட்டத்தை அதிகரித்தனர். என்னாச்சோ ஏதாச்சோ எங்கே சென்றார்களோ என்று பல பல எண்ணங்களை எண்ணத்தில் மிதக்கவிட்டபடியே தத்தளித்தாள் வெண்ணிலா... இரவும் முடிந்தது. எந்த அழைப்பும் வரவில்லை, அவன் எண்ணுக்குப் போகவும் இல்லை... அப்பாவிடமும் சின்ன தம்பியிடமும் விசயத்தைச் சொல்ல கிராமமே பேச்சாகி சந்து பொந்தெல்லாம் காது வளர்த்துக் கதை கட்டலானது.

எதையும் பொருட்படுத்தாது அடுத்து என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் இறங்கினாள் வெண்ணிலா... நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்ததே தவிர தம்பி வந்தபாடில்லை... பித்து பிடித்தவளாய் ஆங்காங்கே திரிய ஆரம்பித்தாள் வெண்ணிலா... எல்லா இரவுகளும் விழிகளுக்கு விடுமுறைதான்.

தன் தம்பி பெண்ணொருத்தியைக் காணச் சென்றதும்... அவள் அப்பா அடியாட்களோடு சுற்றி வளைத்து அடித்து நொறுக்கி காணாப்பிணமாக்கியதும்... கண்மாயோரம் கிடைத்த பிணத்தைச் சமூக சேவகர்கள் அனாதை பிணமென்று அரசு ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதும்... வெண்ணிலா எத்தனை முறை போலீஸ்காரர்களிடம் சொல்லியும் கேட்டும் தன்னிலை மறந்தவளாக தம்பி தம்பி என்று தட்டியருகே அமர்ந்திருப்பதையும் நேரில் பார்த்த ஒரே சாட்சியாய் வெளிச்சத்தில் சொல்ல இயலாது இருளைச் சுமந்துகொண்டு இருக்கிறது வெண்ணிலா. ■

ஆதிரன்

# மனநிலைக் குறிப்புகள் - 10



## ஓவிய மனநிலை

'1498ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் தேதி இந்தியாவின் கேரளத்தில் உள்ள கோழிக்கோட்டை அடைந்தார் வாஸ்கோடகாமா. 1501ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக வாஸ்கோடகாமா இந்தியா வந்தார். அப்போது கேரளத்தில் கண்ணனூர் என்ற இடத்தில் போர்த்துக்கீசிய வணிகத் தலம் ஒன்றை நிறுவினார். பார்த்தலோமிய டயஸ் காட்டியிருந்த நல்வழியைப் பயன்படுத்திக்கொண்டு, நன்னம்பிக்கை முனையைத் தாண்டி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரம், கேரளப் பகுதியின், கள்ளிக்கோட்டைக்கு (கோழிக்கோடு) வாஸ்கோடகாமா வந்து சேர்ந்தார். கி.பி 12ஆம் நூற்றாண்டிலிருந்து, 16ஆம் நூற்றாண்டு வரையிலான ஐந்நூறு ஆண்டுகளில், இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே இருந்த வர்த்தக உறவுகள் வலுவானதாய் இருந்தன. குறிப்பாக ஐரோப்பாவில் அதிகம் உட்கொள்ளப்படும் அசைவ உணவுகளுக்குச் சுவையூட்டும் ஏலம், மிளகு, மிளகாய், இலவங்கம் போன்ற வாசனைப் பொருட்களிற்கு, ஐரோப்பிய சந்தைகளில் தேவை மிக அதிகமாக இருந்தது. 15ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கும், மேலை நாடுகளிற்குமிடையே வணிகம் நடைபெற மூன்று கடல் வழி மார்க்கங்கள் இருந்தன. கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வந்தடைந்தபோது, இங்கு நிலவிய அரசியல் சூழ்நிலை போர்த்துக்கீசியருக்கு சாதகமாகவே இருந்தது. அப்போது கள்ளிக்கோட்டை "ஜமோரின்" எனப்படும் இந்து அரசரால் ஆளப்பட்டு வந்தது. கள்ளிக்கோட்டையைத் தவிர கொச்சி, கண்ணனூர், விசயநகரம் ஆகிய இடங்கள் இந்து மத அரசர்களாலும், டில்லி, பீஹார், குஜராத், பீஜப்பூர், அகமது நகர் ஆகிய இடங்கள் முஸ்லீம் அரசர்களாலும் ஆளப்பட்டுவந்தன. இவற்றுள் இந்து மன்னர்கள் கோலோச்சி வந்த கேரளக் கடற்கரைப்பகுதியில் வாஸ்கோடகாமா காலடி வைத்ததால், அப்பிரதேச மன்னர்களின் ஆதரவு எடுத்த எடுப்பிலேயே போர்த்துக்கீசியருக்குக் கிட்டியது. அதுவரை கடல்வழியின் மூலம் இந்திய நாட்டின் வர்த்தக முற்றுரிமையை (Trade Monopoly) முஸ்லீம் வர்த்தகர்களே பெற்றிருந்தனர்...' இப்படித்தான் நமக்கு வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு எடுத்தாளப்பட்ட ஓவியம் வாஸ்கோடகாமாவின் இந்திய வருகையைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. எவ்வளவு துல்லியமான விவரணைகள். அரசவை ஒன்றின் அப்பட்டமான பதிவு. அரசன் அமைச்சர்கள் காவலாளிகள் அவர்களின் முகபாவங்கள் எங்கேயும் இந்து என்பதன் அர்த்தம் இல்லை. அரசனின் முகபாவம் என்ன ஒரு தீர்க்கம். உள்ளார்ந்த புன்னகை. காவலாளியின் சந்தேகக் கண்கள். அமைச்சர்களின் கூர்மையான சிந்தனை. பின்புலத்தில் ஒரு புலிக்கொடி. யன்னலின் பின்னால் தெரியும் கடல். நாவாய்கள். வாஸ்கோடகாமா உள்ளிட்ட போர்த்துக்கீசிய மனிதர்களின் வியாபாரப் பணிவு. ஆயிரம் பக்கங்கள் கொண்ட விவரணைகளின் தொகுப்பைக் கொண்ட ஒரு ஓவியம். என்ன ஒரு அற்புதம். யாரால் எப்பொழுது என்று அறியக் கிடைக்கவில்லை. அசலிலிருந்து நகலாக்கப்பட்டதாகக் கூட இருக்கலாம். என்னை மெய்சிலிர்க்க வைத்த ஓவியங்களில் இதுவும் ஒன்று. முதன்முதலில் ஒரு ஓவியத்தைப் பார்த்து மெய்சிலிர்த்த அனுபவம் எனக்கு மைசூர் அரண்மனையில் நிகழ்ந்தது.

...

## தத்துவ மனநிலை

'மனிதன் பார்க்கிறான் அதனால் ஒரு பொருள் தெரிகிறது' மற்றும் 'பொருள் இருக்கிறது மனிதன் பார்ப்பதனால் அது தெரிகிறது' இந்த இரண்டு வாக்கியங்களின் இடையேயான கருத்து மோதல்கள்தான் எல்லாக் காலங்களிலும் உலகின் பிரதானமான கருத்து மோதல்.

பின்னை அமைப்பியல், பின்னை நவீனத்துவம் போன்ற தத்துவங்களைப் புரிந்துகொள்வதற்கு முன்னால் நாம் 'இயங்கியல்' என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வது அவசியம் என்பது எனது எண்ணம். உலகில், பிரபஞ்சத்தில் அனைத்தும் இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கிறது.

இயற்கையில் எதிர் சக்திகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு புதுப்புது சக்திகளை உருவாக்குவதால் வரும் மாற்றம் என்பதே ஒட்டுமொத்தமான இயக்கத்திற்குக் காரணமெனக் கொள்ளப்படுகிறது. தொடர் மாற்றங்களின் இடைவிடாத செயல்பாடுகள்தான் இயக்கம். பொதுவாக இடையறாத முரண்பாடுகளின் மோதல்கள் மூலம் இயக்கம் நிலைகொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் முயற்சிதான் இயங்கியல் கோட்பாடு.

'மனித சிந்தனை யதார்த்த உலகைப் படைக்கிறது' என்றும் 'யதார்த்த உலகம் என்பதே மனித கருத்தின் வெளித்தோற்றம்' என்றும் ஹெகல் கூறுகிறார். அதாவது முதலில் சொன்னது போல, 'மனிதன் பார்க்கிறான் அதனால் ஒரு பொருள் தெரிகிறது' எனபது அவரது கோட்பாடு.

இதைத் தலைகீழாய் மாற்றியது மார்க்ஸிய சிந்தனை. இயற்கைப் பொருட்களும் அவற்றின் தோற்றங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கின்றன, மேலும் அவை முழுமைத்தன்மை அடைய ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன என்றும் ஒன்றின் பண்பை இன்னொன்றின் பண்பு நிர்ணயிக்கும்படி அமைந்திருக்கிறது என்றும் விவாதிக்கிறது இயங்கியல் தத்துவம். "வளர்ச்சி என்பது எதிர்மறைகளினிடையே நடைபெறும் போராட்டத்தையே குறிக்கிறது" என்றார் லெனின்.

ஹெகல், ஃப்யர்பாக் போன்ற சிந்தனையாளர்களின் தொடர்ச்சியாக உலகின் மூலச்சிறப்புமிக்க சிந்தனையை 'இயக்கவியல் பொருள்முதல்வாத' அடிப்படையில் உருவாக்கியவர் கார்ல் மார்க்ஸ். மார்க்ஸிய அடிப்படைகளைப் புரிந்துகொள்வது ஒட்டுமொத்த மனித குல அறிவைப் புரிந்துகொள்வதற்கு இணையானது. (இது கம்யூனிசம் பற்றியதல்ல. எனக்குக் கம்யூனிசத்தில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன).

மார்க்சியம் பிரபஞ்சத்தை, இயற்கையை அவற்றின் விளைவுகளை 'இயங்கியல்' அடிப்படையில் விஞ்ஞானப்பூர்வமாக

ஆராய்வதை முன் நிறுத்துகிறது. அதன் மூலம் மனிதகுல வளர்ச்சியை முழுமையாகப் புரிந்துகொள்ள முயல்கிறது. எனவே இது தத்துவ நோக்கோடு நில்லாமல் அறிவியல் விதிகளை உருவாக்குகிறது.

ஆக, மார்க்ஸியம் நான்கு அடிப்படை விதிகளை உருவாக்கியிருக்கிறது. அவை, 1. அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கிறது, (சிறிய நுட்பமான பொருள் முதலாக மிகப்பெரிய பொருள் ஈறாக, சிறு மணல் துகள் முதலாக சூரியன் ஈறாக, உயிரணு முதல் மனிதன் வரை, இயற்கையில் உள்ள எல்லாப் பொருட்களும் இடையறாது தோன்றி, வளர்ந்து, மறைந்து கொண்டேயிருக்கின்றன. இடையறாது இயங்கிவரும் நிலையிலும் மாறிக்கொண்டே இருக்கும் நிலையிலும் உள்ளது என்கிறார் ஏங்கல்ஸ்) 2. முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று இணைந்து மீண்டும் முரண்படுகிறது, (வளர்ச்சி என்பது அதன் போக்கில் எண்ணிக்கையில் இருந்து குணாம்சமாக மாறும் போக்கேயாகும். புலனுக்கு எட்டாதபடி படிப்படியாக, சிறுகச் சிறுக அளவில் ஏற்படும் மாறுதல்கள் அத்தனையும் திரண்டு ஒரு பாய்ச்சலாகவே இடம்பெறுகின்றன) 3. சுழலேணி வகையிலான வளர்ச்சி (நிலைமறுப்பின் நிலைமறுப்பு - வளர்ச்சி சுற்றிச் சுற்றி ஒரே வட்டத்தில் நிகழ்வதில்லை. புதிய படிநிலைகளில் மேலே மேலே முன்னோக்கிச் செல்வதாகவே இவ்வளர்ச்சி அமைந்திருக்கிறது.) 4. அளவு மாற்றம் பண்பு மாற்றம். இந்த நான்கு விதிகளின் அடிப்படையில் இயற்கையை அதன் இயக்கத்தைப் பிரித்துப் புரிந்துகொள்ள முயலவேண்டும் என்பது மார்க்ஸியம். அனைத்தும் ஒன்றுக்கொன்று சார்புடையது என்பதையும்.. தனியையும் பொதுவையும் பிரித்துப்பார்த்துப் புரிந்துகொள்வது என்பதையும்.. பொதுவாக அனைத்திற்குமான காரணங்களைப் புரிந்துகொண்டு அந்தக் காரணங்களின் விளைவுகளையும் புரிந்துகொள்வது என்பதையும்.. இயற்கையில் தற்செயல் மற்றும் அவசியத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளுதல் பற்றியும்.. பொருட்களின் தோற்றம் மற்றும் சாராம்சம் ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் உள்ளடக்கமும் வடிவத்தையும் பற்றிய அறிவு ஆகியவற்றையும், ஒட்டுமொத்தத்தில் யதார்த்த அறிவும் அவற்றின் சாத்தியப்பாடுகள் குறித்தான அறிவும் என்னென்ன என்பதை மிக விரிவாக விளக்கி உருவாக்கப்பட்டது மார்க்ஸியம். சு.பொ.அகத்தியலிங்கத்தின் ‘மார்க்சியம் என்றால் என்ன’ (பாரதி புத்தகாலயம்) என்கிற சிறிய புத்தகம் மார்க்சியத்தை எளிமையாகப் புரிந்துகொள்ள உதவும் சிறந்த நூல்களில் ஒன்று.

• • •

## இலக்கிய மனநிலை

காரைக்கால் அம்மையார் என்ற தமிழ் பெண்ணைப் பற்றித் தேடித்தேடித் தெரிந்துகொள்ளுங்கள். தமிழின் வழமை போற்ற ஆறு பாடல்களை இங்கு எடுத்தாண்டிருக்கிறேன்...

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்

பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர்
நீள்கணைக் காலோர்பெண்பேய்

தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்சடை
எட்டுத் திசையும்வீசி

அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள் அப்ப
னிடந்திரு ஆலங்காடே.

தெளிவுரை : மார்பகங்கள் வற்றி, நரம்புகள் மேல் எழுந்து, கண்கள் குழி விழுந்து, பற்கள் விழுந்து, வயிறு குழி விழுந்து தலை மயிர் சிவப்பாகி, கோரைப் பற்கள் இரண்டும் நீண்டு, கணுக்கால் உயர்ந்து நீண்ட கால்களையுடைய ஓர் பெண் பேய் தங்கி, அலறி, காய்ந்த காட்டில் தாழ்ந்த சடைகள் எட்டுத் திக்குகளிலும் வீசி அங்கம் குளிருமாறு ஆடும் எங்கள் அப்பன் இருக்கும் இடம் திருஆலங்காடாகும்.

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை

விள்ள எழுதி வெடுவெடென்ன நக்கு
வெருண்டு விலங்குபார்த்து

துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச் சுட்டிட
முற்றும் சுளிந்துபூழ்தி

அள்ளி அவிக்கநின் றாடும்எங்கள் அப்ப
னிடம்திரு ஆலங்காடே.

தெளிவுரை : கள்ளிக் கிளைகளுக்கு இடையில் காலை நீட்டி கொள்ளிக் கட்டையை வாங்கிக் குழைத்து மையை அழித்து எழுதி நடுநடுங்குமாறு சிரித்து, மருட்சியடைந்து குறுக்கே நோக்கி, குதித்து சுடலையில் எரிந்துகொண்டிருக்கும் பிணத்தின் தீயானது சுடவும், சினக் குறிப்புக் கொண்டு மணலை அள்ளி அவிக்க, நின்று ஆடுகின்ற எங்கள் அப்பன் தங்கியிருக்கும் இடம் திருஆலங்காடாகும்.

வாகை விரிந்துவெண் ணெற்றொலிப்ப,
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே

கூகையோா(டு) ஆண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித்(து) ஓடவீசி

ஈகை படர்தொடர் கள்ளிநீழல் ஈமம்
இடுசுடு காட்டகத்தே

ஆகம் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

தெளிவுரை : பாலை நிலத்துக்குரிய வாகை மரத்தின் முற்றிய வெண்மையான நெற்றுக்கள் காற்றினால் ஒலி செய்யவும், அறிவை மயக்கும் திணிந்த இருளையுடைய நள்ளிரவில் கூகை(கோட்டான்)யோடு ஆண் தலை போன்ற வடிவுடைய பறவை பாடவும், ஆந்தை கொம்புடன் அதன் மேற்குதித்து ஓடுமாறு வீசி கொடி படர்ந்த கள்ளியின் நீழலில் ஈமம் அடுக்கப்பட்ட சுடுகாட்டில், உடல் குளிர்ந்து அனலில் ஆடுகின்ற எங்கள் அப்பன் இருக்கும் இடம் திருஆலங்காடாகும்.

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டைஆந்தை

குட்டி யிடமுட்டை கூகைபேய்கள்
குறுநரி சென்றணங்(கு) ஆடுகாட்டில்
பிட்டடித் துப்புறங் காட்டில்இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டிஆங்கே

அட்டமே பாயநின்(று) ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

தெளிவுரை : பட்டு அடிபட்ட நீண்ட நகத்தையும், மாறுபட்ட கால்களையும் உடைய பேய், பருந்து, கூகை, சீவற் பறவை, ஆந்தை ஆகியவை முட்டையிடவும் குறுநரி வெறியாடவும் பின்புறம் அடித்து, சுடுகாட்டில் இட்ட பிணத்தினை வெளியே எடுத்து, குறுக்கே பாய நின்று ஆடுகின்ற எங்கள் அப்பன் கோயில் கொண்டிருக்கும் இடம் திருஆலங்காடே.

துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்

சச்சரி கொக்கரை தக்கையோடு,
தகுணிதந் தந்துபி தாளம்வீணை

மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்(து)

அத்தனை விரவினோடு ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

தெளிவுரை : துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, ஓசை என்ற ஏழு பண்களையும் இசைத்து, சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணி, துந்துபி, தாளம், வீணை, மத்தளம் கரடிகை, தமருகம், குடமுழா, மொந்தை முதலிய வாத்திய வகைகளை இயக்கி அத்தன்மையோடு ஆடுகின்ற எங்கள் இறைவன் எழுந்தருளியிருக்கின்ற இடம் திருஆலங்காடேயாகும்.

புந்தி கலங்கி மதிமயங்கி இறந்தவ
ரைப்புறங் காட்டில்இட்டுச்

சந்தியில் வைத்துக் கடமைசெய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா

முந்தி அமரர் முழலின்ஓசை திசைகது
வச்சிலம்(பு) ஆர்க்கஆர்க்க,

அந்தியில் மாநடம் ஆடும்எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே.

தெளிவுரை : அறிவு கலங்கி, மதி மயங்கி, இறந்தவர்களை மயானத்தில் வைத்து இறுதிச் சடங்குகளை நிகழ்த்தி ஈமச்சடங்கு செய்யும்

உரிமை உடையவர் இட்ட தீயை விளக்காகக் கொண்டு, முன்பு தேவர்களது மத்தளத்தின் ஓசை திசைகள்தோறும் நிறைய, சிலம்புகள் மிகுதியாக ஒலிக்க, யுகமுடிவில் மாநடனம் செய்யும் எங்கள் இறைவன் தங்கியிருக்கும் இடம் திருஆலங்காடேயாகும்.

• • •

## பொதுவான மனநிலை

மனிதர்கள்தான் பூமி என்கிற இந்தக் கிரகத்தில் மிக அதிகமாகப் பயப்படும் உயிரி என்று நரம்பியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். ஏனென்றால் மனிதனின் கற்கும் திறன் மற்றும் சிந்தனை ஆகியவை மூளையில் பயத்தை உருவாக்குவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற உயிரினங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான பயம் என்று ஒன்று இல்லை. ஒரு குறிப்பிட்ட வகையில் அறியாமைதான் பயத்தின் காரணி என்று சொல்லலாம். ஆனால் அறியாமை என்பது தனிப்பட்ட முறையில் ஆழமாகவும் விரிவாகவும் தெரிந்துகொள்ள வேண்டிய விசயம்.

பயம் கனவுகளின் திருடன் என்ற மேலைநாட்டுச் சொல்லாடல் ஒன்று உண்டு. இது ஒரு பெருந்தொற்றின் பிணிக் காலம். மனிதன் பயந்துபோய் இருப்பதற்கு புறச்சூழலில் அசாதாரண நிலை உருவாகி இருக்கிறது.

பயம் என்கிற உணர்வை மனிதர்கள் ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்துகொள்வது அவசியம். ஏனெனில், அடிப்படை உணர்வுகள் ஏழில் 'பயம்' மட்டுமே அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. நுண்ணுயிரிகள் முதல் மனிதர்கள் வரை – தாவரங்கள் உள்ளிட்டு – அனைத்து உயிருக்கும் பொதுவான உணர்வு பயம். ஒரே வித்தியாசம் மனிதருக்குப் பயம் என்றால் என்னவென்று தெரியும். அவ்வளவே.

பயத்தை வென்றவன் ஞானியாவான் என்பது அறிவியல் உண்மை. பயம் நான்கு வகைகளில் உருவாகிறது. முதலாவதாக, உள்ளுணர்வு *(instinct)*; குறிப்பிட்ட வகை பயம் என்பது அடிப்படை உள்ளுணர்வால் உருவாகிறது. எடுத்துக்காட்டாக, வலி ஏற்படுதல் பற்றிய பயம். காயம் பட்டால் வலிக்கும் என்பது உள்ளுணர்வு சார்ந்தது. பொதுவானது. (தமிழ் ஆசிரியர் எவ்வளவு கோபப்பட்டாலும் அடிச்சார்னா வலிக்கவே வலிக்காது, ஆனா கணக்கு ஆசிரியர் அடிச்சா பயங்கரமா வலிக்கும்).

இரண்டாவதாக, கற்றுக்கொள்ளுதல் *(learned)*; பயத்தை ஒருவகையில் நமக்கு நாமே கற்றுக்கொள்கிறோம். வளர்கிற போக்கில் சில பயங்களை நாம் கற்றுக்கொள்கிறோம். இளங்கன்று பயமறியாது. ஆனால், தண்ணீரில் விழுந்தால் மூழ்கிவிடுவோம் என்று தெரிய வரும்போது அந்த பயம் நம்மிடத்தில் நிரந்தரமாகத் தங்கிவிடுகிறது.

மூன்றாவதாக, கற்பிக்கப்படுதல் *(taught)*; சிலவகை பயங்கள் நமக்கு மற்றவர்களால் கற்பிக்கப்படுகிறது. 'சாமி கண்ணைக் குத்தும் அல்லது அவன் முகமே சரியில்ல அவன் உன்னை அழிச்சுருவான் அல்லது அந்த மரத்துல பேய் இருக்கு' போன்றவை இவ்வகையில் அடங்கும்.

இறுதியாக, கற்பனை *(imagined)*; இது முழுக்க முழுக்க ஒருவரது சுய கற்பனையால் உருவாகும் பயம். ஏதாவது தவறானது நடந்துவிடுமோ என்கிற கற்பனையில் அல்லது எதிர்மறை எண்ணங்களால் உருவாகும் பயம் இது. பெருந்தொற்றின் பேரிடர் காலத்தில் இவ்வகையான பயமே மனிதர்களுக்கிடையே பரப்பப்படுகிறது. இதனால் உருவாகும் பேரச்சம் பெரும்பாலான மருந்து நிறுவனங்களின் கொள்ளை லாபத்திற்குப் பயன்படுகின்றது.

'மூடநம்பிக்கையின் மூலாதாரம் பயம்... மேலும், குரூரத்திற்கும் பயம் மூலாதாரங்களில் ஒன்றாகும்...' என்கிற பெர்ட்ராண்ட் ரஸ்ஸலின் வார்த்தைகளை இங்கு நினைவுகூர்தல் சரியாக இருக்கும். ■



# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

## கடிதம் - 21

**கவிஞர் தேவதேவன்**

*பிச்சுமணி கைவல்யம்*

*16 oct 1980*

*4/5 மணிநகர்*

*தூத்துக்குடி 628003*

அன்புள்ள நம்பிக்கு

நலம்தானே. ரங்கநாதன் சொன்னார், உங்களுக்கு கவிதை அனுப்பச் சொல்லி. அஸ்வினி'யில் நீங்கள் வேலை பார்ப்பது கேட்க சந்தோஷமாகவிருக்கிறது. எப்படி இருக்கிறீர்கள்? எழுதுகிறீர்களா? எழுத வேண்டும் நீங்கள். உங்கள் எழுத்தை – ஒரு அசல் படைப்பிலக்கியக்காரனாகவும் உங்களைக் காண ஆசை. சமயவேலைக் காணும்போது இதுபற்றிக் கேட்டேன். நீங்கள் இரண்டொரு கதைகள் எழுதியிருப்பதாகவும் எழுதிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். சந்தோஷமாக இருந்தது. சமயவேல் எப்படி இருக்கிறார். பரிட்சை எல்லாம் முடிந்ததா அவருக்கு. உங்களுடன்தானே வேலை பார்க்கிறார். சமீபத்தில் நானும் மெட்ராஸுக்கு (அங்கே ஆறுமாதம் இங்கே ஆறுமாதம்) வந்துவிடலாமென்று நினைத்தேன். அப்போதுதான் முனிசிபலிலிருந்து வேலைக்கு ஆர்டர் வந்தது பதினோரு வருஷங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டு வெயிட்டிங்கில் இருந்த என் பெயருக்கு. இப்போது முனிசிபல் ஸ்கூலில் வேலையாகிவிட்டேன். சமயவேலுவுக்கும் சொல்லவும். கோடை விடுமுறையில் மெட்ராஸுக்கு வருகிறேன். ஒரு நாவல் எழுதிக்கொண்டிருக்கிறேன். 'டீச்சர்' என்று. முழுக்க முழுக்க பொயட்டிக்காக. இதுதான் இப்போதைய ஜோலி. நீங்கள் கேட்டுள்ளபடி இத்துடன் நான் அனுப்பியிருக்கிற கவிதைகள் எனது 'விஷம்' கவிதைத் தொகுதியில் இடம்பெறுகிற இதுவரை பிரசுரமாகாத எனது கவிதைகளுள் மிகச் சிறந்ததாக வந்துள்ளவை.

எனக்கு எழுதுங்கள்.

அன்புடன்

பிச்சுமணி கைவல்யம்.

• • •

## கடிதம் - 22

**கவிஞர் தேவதேவன்**

*தூத்துக்குடி 628003*

*29.06.'81*

அன்புள்ள நம்பிக்கு

உங்களைக் கொஞ்ச நேரமே சந்திக்க முடிந்ததில் வருத்தம்தான். ஊர் வந்து

இன்றுதான் சாவகாசம் கிடைத்து அனைவர்க்கும் எழுதுகிறேன்.

ரங்கநாதனைப் பார்த்தேன். 'நம்பி, மயனில் இல்லை போலல்லவா தெரிகிறது' என்றும், தாயில் இருப்பதையும் அவர் ஊகித்திருக்கிறார். உங்கள் முகவரி கேட்கப் போய் அவர் டைரியிலிருந்துதான் தாய் முகவரி பார்த்து உங்களுக்கு எழுதுகிறேன். நீங்கள் அவரைக் கதைகள் அனுப்பச் சொன்னதைச் சொன்னேன்.

அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது நிறையப் பேச நினைத்திருக்கிறேன். இடையில் இங்கே வந்தால் அவசியம் தூத்துக்குடி வரவேண்டும். வண்ணநிலவன் முகவரி தெரியவில்லை. ரங்கநாதனுக்கும். ஆகவே உங்கள் முகவரியிட்டு வருகிறது. அவரிடம் சேர்த்துவிடுங்கள். நாடகங்களை வண்ணநிலவன் படித்துச் சொல்லச் சொல்லியிருக்கிறேன். நீங்களும் படித்து உங்கள் அபிப்பிராயங்களை எழுத வேண்டும். மற்றவை உங்கள் கடிதம் பார்த்து.

அன்புடன்

பிச்சுமணி கைவல்யம்.

• • •

## கடிதம் - 23

**கவிஞர் தேவதேவன்**

பிச்சுமணி கைவல்யம்

*4/5 மணிநகர் தூத்துக்குடி 628003*

*03.07.1991*

அன்புள்ள நம்பிக்கு

நலம். நலமறிய அவா. சமயவேல் மூலமாக உங்கள் கவிதைத் தொகுதி திரு.உத்தர கோசமங்கை கிடைத்தது. எனக்கு அவ்வளவு திருப்தியாக இல்லை. சிறுகதைகளையும் நீங்கள் எழுத முயலவேண்டும். உங்கள் ஆளுமையும், வாக்கும், துக்கங்களும் வேறு ஒரு மீடியத்தில் இக்கவிதைகளின் தரத்தோடே சிறகு முளைத்து வெளிப்பட வேண்டும். முயற்சி செய்தால் என்ன? கவிமூலம் என்று நீங்கள் எழுதியதை (2 இதழ்) பார்த்திருந்தேன். அது போதாது. சிறுகதை ரூபம் அவசியம். வலம்புரிஜான் அழைப்பில் யாகவா முனிவர் சந்திப்புக் கூட்டம் என்று கடந்த மாதம் 1ம் தேதி சென்னைப் பயணத்தை நான் ஆவலோடு மேற்கொண்டதே அங்கே உங்களைக் காண முடியும் என்ற அவாவில்தான். நீங்கள் தென்காசிக்குச் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். ஏமாற்றமடைந்தேன். தென்காசி வந்தால் இந்தப்பக்கம் வரக்கூடாதா? எனக்கு இப்போது நமது பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டமுடியாமல் போய்க் கொண்டிருக்கிறது. அதுவேறு சங்கடமாக இருக்கிறது. மற்றவை பிறகு.

அன்புடன்

(கையொப்பம் - பிச்சுமணி கைவல்யம்).

• • •

## கடிதம் - 24

**கவிஞர் பழமலய்**

விழுப்புரம், *15.5.96*

அன்புள்ள கவிஞருக்கு, வணக்கம்.

உங்கள் *10.9.* மடல் கிடைத்தது. நன்றி. சென்னையில் இருப்பீர்கள் என்று நினைத்திருந்தேன்.

என் கவிதைகள் குறித்த உங்கள் கவனிப்புக்கும் கரிசனத்திற்கும் நன்றி. மெய்தான். உங்களைப் போன்றவர்கள் அருகில் இருந்தால் உதவியாக இருக்கும். நாம் கடிதம் எழுதி விவாதிப்பதில் உள்ள சங்கடங்களை நானும் உணர்கிறேன். உங்கள் அன்புக்கு நன்றி.

உளியின் அபிப்ராயம் தொந்தரவு செய்வதாக உணர்ந்தால் கல் சிலையாக முடியாது – இதில் உங்கள் தயக்கம் என்னிடம் தேவை இல்லாதது. வெளிப்படைதான் இந்த வாழ்க்கையில் ஏதாவது பயனுள்ள காரியமாக இருக்கும்.

வெளியீட்டுக்கு என்னால் ஆனதை உதவுகிறேன்.. நீங்கள் உளுந்தூர்ப்பேட்டையில் – ஏன் விருத்தாசலத்தில் – இறங்கிப் பல்லடம் அவர்களைப் பார்த்துக்கொண்டு விழுப்புரம் வரலாம். *TITC* பணிமனை நிறுத்தத்தில் இறங்கி வீடு வரலாம். எதிரே இருக்கும் தேநீர்க் கடைகளில் இருக்கும் இளைஞர்கள் உதவுவார்கள். குறிப்பாகக் கவிஞர் ஜெயச்சந்திரன்.

முடிந்தால் நானும் உங்களுடன் காஞ்சிபுரம் வரமுடியும். யார், நாராயணன் ஏற்பாடா? இல்லை ஜமுனா மூர்த்தியா? மீரான் வந்து கலந்துகொள்கிறாரா? நீங்கள் எனக்குக் கடிதம் எழுதுங்களேன்.

அல்லது உங்கள் சவுகரியப்படி போகையிலோ, திரும்புகையிலோ என்னை வந்து சந்தியுங்கள். பெரும்பாலும் இருப்பேன். சந்திக்கத்தான் வேண்டும் என்பதில்லை. உங்கள் சவுகரியம். சிரமம் வேண்டாம் என்றுதான் இப்படி எழுதுகிறேன். உடம்பு எப்படி இருக்கிறது. அளவுக்கு மீறினால் அமுதமே நஞ்சாகுமானால்.. நஞ்சு... என்னாகும்.. அமுதமாகுமா –

எங்கள் மகாகவிஞன் ஒருவன் இன்னும் சாதித்துவிட்டுச் சாக வேண்டும்.

அன்புடன், த.பழமலய்.

குற்றாலம் பூந்தோட்ட நாற்றங்காலை நினைக்கிறேன். நான் அங்கிருந்து வருவதாக இருந்தால் சிவப்பு மற்றும் வெள்ளை மெசண்டா பதியன்களுடன் வருவேன்.

உங்களுக்குப் பொறுமை இருக்காது. பெரிய சாதனையாக இருக்கும். வண்டிகள் மாறவேண்டும். என்னைத் திட்டித்...

**(இறுதி ஒரு வரி சேதாரமாகியிருக்கிறது.)**

• • •

## கடிதம் - 25

**கவிஞர் தேவதச்சன்**

மதிப்பிற்குரிய நம்பிராஜன் அவர்களுக்கு

தங்கள் கடிதத்தின் மூலம் என்னைக் கௌரவித்திருக்கிறீர்கள். தாங்கள் குன்றக்குடியில் பணிபுரிவதாக சமயவேல் கூறியிருந்தார். வேலைத் தன்மை எப்படி யிருக்கிறது? இவ்விடம் சமயவேல் மற்றும் நண்பர்கள் நலம். அன்றாடம் பொறிபறக்கும் விவாதங்கள், மற்றும் யுத்தங்கள். கூடவே ஒவ்வொருத்தரும் மற்றவரால் ஒளியூட்டப்பெற்று கூடுதல் நெருக்கங்கள்.

வேறு என்ன விசேஷம். தாங்கள் ஏதாவது எழுதிக்கொண்டு இருக்கிறீர்களா? சமீபத்தில் வேறு எதுவும் புத்தகம் கிடைக்கவில்லை. ஆகவே, ஒன்றும் படித்துக்கொண்டிருக்கவில்லை.

தாங்கள் ஏதாவது எழுதியிருந்தால் எனக்குப் படிக்க அனுப்பிவைப்பீர்களா?

தங்கள்

(ஆங்கிலத்தில் A.S. ஆறுமுகம் என்று கையொப்பம்)

25/7/83 • கோவில்பட்டி•

விடுதல்கள் : • கௌரிஷங்கர் 'முன்னூறு யானைகள்' என்ற பெயரில் கதை ஒன்று எழுதியிருக்கிறார். சமயவேலுக்கு 'அது' பிடிக்கவில்லை என்பதாக அபிப்ராயம் சொன்னார். எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.

• சமயவேல் ஒரு கவிதை காண்பித்தார், நன்றாக வந்திருக்கிறது. தேடலில் பிரசுரிக்கலாம் என்றேன். அவர் என்ன உத்தேசித்திருக்கிறார் என்று சொல்லவில்லை.

• போனவாரம் பூமணி, ஞானக்கூத்தன், ஆனந்த், முனைவன் இவ்வூருக்கு வந்து போனார்கள்.

• ஒரு கவிதை என்னிடம் நோவு எடுத்து சிரம் இறங்குகிறது. உயிரோடு பிறந்தால் அனுப்பிவைக்கிறேன்.

• • •

## கடிதம் - 26

**கவிஞர் தேவதச்சன்**

9.12.85

A.S. ஆறுமுகம்

125, South Bazaar

Koilpatti.

மதிப்பிற்குரிய நம்பிராஜன் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. அங்கு துரை, மாரிஸ், வண்ணநிலவன், மாமல்லர் மற்றும் இதர நண்பர்களின் நலத்தை விசாரித்ததாகச் சொல்லவும்.

தங்கள் கடிதத்தின் கேள்விகள் வெகு எளிமையாகத் தோன்றினாலும், ரொம்பக் கஷ்டமானவை. *Assertive* ஆகச் சொல்வதற்கு என்னிடம் இப்போது பதில் கூறும் திறன் இல்லை. எனவே கவிதைகளிலிருந்து என்ன கிடைக்கிறதோ அதையே பயன்படுத்திக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். *Passport size* போட்டாவை விரைவில் அனுப்பிவைக்கிறேன். ஆனால் அது அவ்வளவு அவசியமா? அது இல்லாமல் போட்டால் சந்தோஷம். முடிந்தவரை போட்டாவைத் தவிர்க்கப் பாருங்கள். போட்டா தேவையில்லை என்ற செய்தியைக் கடிதம் மூலம் சொல்லுங்கள். தவிர்க்க முடியவில்லை என்றால் அனுப்பிவைக்கிறேன்.

கோவில்பட்டியிலிருந்து தமிழ்ச்செல்வன் – கதைத்தொகுதி வரும் வாய்ப்புள்ளது. தாங்கள் எப்படி யிருக்கிறீர்கள். சமயவேல் கைவசம் கொஞ்சம் கவிதைகள் வைத்துள்ளார். இன்னும் நிறைய எழுதும்படி அன்றாடம் நச்சரித்துக் கொண்டிருக்கிறேன்.

ஏனைய நண்பர்களும் நலம். மற்றவை தங்கள் கடிதம் கண்டு.

உண்மையுள்ள

(ஆங்கிலத்தில் A.S. ஆறுமுகம் என்று கையொப்பம்)

■

# பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி



முதன்முதலில் என்னை நான்
புகைப்படம் எடுத்துக்கொண்டபோதுதான்
புறப்பட்டு வெளியே வந்தான்
எனக்குள்ளிருந்து அவன்...

என் புகைப்படத்தைப் பார்த்து
உண்மையானது இதுதான் என்றான்...

நானோ இது வெறும் பொய்
நான்தான் உண்மை...
இது வெறும் நகல்
இது வெறும் பிம்பம்
இது வெறும் காகிதம்
மொத்தத்தில்
இது வெறும் எந்தன் பிரதியென்றேன்...

மெல்ல புன்னகைத்தவன்
இந்தப் பார்வையில்
எந்தக் கள்ளத்தனமும் இல்லை
இப்போதிருக்கும் உன் பார்வையைப் போல...

இனி எப்போதும்
இம்முகம் எச்சலனத்திற்கும்
ஆட்படப்போவதில்லை...

எந்தச் சோகமும் இதை
அணுகப்போவதுமில்லை

யாருக்காகவும் எதற்காகவும்
அழப்போவதுமில்லை

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும் பன்முகம்
இல்லையிதற்கு

அதீதப்பெரு மகிழ்வோ தீராத்துயரோ இல்லாத
தெளிந்தநன் நீரோடை போன்றதோர் முகம்

இந்தப் படத்தில் தலை இருந்தாலும்
தலைக்கனம் இருப்பதில்லை
தலைக்குனிவும் வரப்போவதில்லை...

முக்கியமாக இது
உன்னைப் போல நடிப்பதுமில்லை...

இதற்கு வாழ்நாள் என்பது
கூடுவதுமில்லை குறைவதுமில்லை...

கூடுதல் தகவல் உனக்கு...
இதற்கு மரணம் என்பதே இல்லையென்றான்...

இதை இப்போதே கிழித்து
இது வெறும் பொய்
இது வெறும் நகல் என்று என்னால்
நிரூபிக்க முடியுமென்றேன் கோவமாக...

உனது அனுமதிச் சீட்டில் ஒட்டியிருக்கும்
இந்தப் புகைப்படம் மாதிரி
நீ இல்லை என்றால்
உன்னையே விரட்டிவிடுவார்கள்...
இப்போது சொல்
எது பொய்? எது உண்மை?
என்றான் அவன் நிதானமாக...

– அவன் இன்னும் சொல்வான்...

● கரிகாலன்



# தேநீர் சாலை

**அங்கமாலியை நெருங்குவதும் இந்தியாவை விலகுவதும்!**

~

ஆப்பிளும் பலாவும் ஒரு நிலத்தில் கனிவதில்லை. மலைப்பிரதேசமும், குளிரும், ஆப்பிளைப் பழுக்கவைக்கிறது. செம்மண்ணும் வெய்யிலும் பலாவை மணக்க வைக்கிறது. தோற்றத்தில் பலா சற்று கரடுமுரடாக இருக்கிறது. ஆப்பிள் அப்படியில்லை. ஆகவேதான் நோயாளிகளுக்கு பலாவைத் தராமல் ஆப்பிள் வாங்கிச் செல்கிறோம். ஆப்பிளை எளிதில் அரிந்து சுவைக்க முடியும். பலாவின் சுளையை வெளியே கொண்டு வருவதற்குச் சற்று உழைப்பு தேவை. இதன்பொருட்டு ஆப்பிள் மேலானதென்றோ, பலா தாழ்ந்ததென்றோ பொருளில்லை!

அடிப்படையில் இரண்டும் கனிகளே. இரண்டின் குணங்களும் இனிப்புதான். கனிகளின் குணமே நிலத்தையும் காலத்தையும் சார்ந்திருக்கும்போது, மனிதர்கள்? காஷ்மீர் பண்டிட்களும் கன்னியாகுமரி மீனவர்களும் ஒரே இயல்பில் இருக்க முடியுமா? டாக்டர்களைப் போல் கசாப்புக் கடைக்காரர்களால் காதோடு பேச முடியுமா? ஒவ்வொரு நிலத்தில் வாழ்பவர்களுக்கும் ஒவ்வொரு இயல்புகள். இதைப் பேசுவதுதான் நம் திணைக் கோட்பாடு. அந்தத் திணைக் கோட்பாடு இன்று உலகளாவிய கலை இலக்கியக் கோட்பாடுகளுடன் இணைத்துப் பார்க்கப்படுகிறது.

மனிதப் பண்பாடு என்பது இடம், காலம், சூழல் என்னும் பௌதிக அடிப்படையில் ஒன்றிணைந்து செயலாற்றுவது. ஒரு பனுவலில் முதல்பொருள், உரிப்பொருள், ஒன்றோடொன்று இயைந்து செயல்பட வேண்டியிருக்கிறது. இதன்வழிதான் ஒவ்வொரு நிலத்தின் பண்பாடும், பிற பண்பாடுகளோடு ஒத்திசைவையும் வேற்றுமையையும் பேணுகின்றன. இங்கே பனுவல் என்று குறிப்பிடுவது சினிமாவையும் சேர்த்தும்தான்.

துரதிர்ஷ்டவசமாக வணிக சினிமாக்களில் காலம் இரவு, பகல், மழை.. இப்படி சுருங்கிப்போகிறது. கருப்பொருள் காதல், பிரிவு என இரண்டோடு நின்றுவிடுகிறது. நிலம் என்பது வெறும் நகரமாக, கிராமமாகத் தேங்கிவிடுகிறது. உலகமயமாக்கல் நகரங்களின் முகங்களை நுகர்வுவெறி என்கிற ஒரே அடையாளத்தில் காட்ட முனைகிறது.

ஆனாலும் நவீன சினிமா பார்வையாளர்கள் இவற்றைப் பார்த்துச் சலித்திருக்கிறார்கள். அவர்கள், இதுவரை காட்சிப்படுத்தப்படாத புதிய மனிதர்களைச் சந்திக்க விரும்புகிறார்கள். நல்லவன் வாழ்வான்.. கெட்டவன் வீழ்வான்.. எம்ஜியாருக்குத்தான் சரோஜாதேவி.. தேனழித்த நம்பியார் புறங்கையைத்தான் நக்க வேண்டும்.. என்கிற கதைகளை அவர்கள் புறக்கணிக்க விரும்புகிறார்கள்.

சினிமாவில் பார்த்த நாயகிகள் அவர்களது தெருக்களில் இல்லை. சினிமாவில் பார்த்த உணவு வகைகள் அவர்களுடைய தட்டில் இல்லை. சினிமாவில் பார்த்த மென்மையான, தியாகம் செய்யும் தாய் தந்தைகள் அவர்களது வாழ்க்கையில் இல்லை. ஒருநாளும் சினிமா ஹீரோக்கள் பேசுவதுபோல பத்து வார்த்தைகளை அவர்கள் உதடுகள் திக்காமல் திணறாமல் பேசியதே இல்லை. சினிமா காட்டிய நாயகியை, சினிமா காட்டிய கடவுளை, சினிமா காட்டிய நீதியை ஒருநாள்கூட அவர்கள் வாழ்வில் தரிசித்ததே இல்லை.

தினந்தோறும் பன்றிவெட்டுவதை வாழ்க்கை முறையாகக் கொண்டவனிடம், சங்கராபரணம் ஒரு கிளாசிக்! என்று

பார்க்கச் சொன்னால், அதை அவன் எப்படி எதிர்கொள்வான். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசம்! என்று இதை ஒருவன் சொன்னால், அது எத்தனை பெரிய வன்முறை.

ஆக, எல்லோருக்கும் ஒரே சினிமா! என ஒன்று இருக்க முடியாது.

நல்ல சினிமா என்பது உங்களை, உங்களது உன்னதமான வாழ்க்கையிலிருந்து, உங்களது மேன்மையான நீதி முறைகளிலிருந்து, உங்களது உயர்ந்த கலாச்சாரத்திலிருந்து, உங்களது நாகரீகமான உறவினர்களிடமிருந்து, வேரோடு பெயர்த்து வேறு ஒரு முரண்பட்ட புதிய நிலத்தை வாழ்க்கையை பண்பாட்டைக் காட்டுவதாக இருக்கிறது.

மனிதர்களது நாகரீகமும், பண்பாடும், இயல்பும் அவர்கள் வாழும் பிரதேசங்களின் தன்மையிலிருந்தே உருவாகின்றன. காவிரிக்கரையிலிருந்து தோன்றிய கதைகளும், தாமிரபரணி கரைகளில் செழித்த கதைகளும், மீனவக் குப்பங்களில் வளர்ந்த கதைகளும், திருநங்கைகளின் கூடாரங்களில் எழுந்த கதைகளும் ஒரே மொழியை ஒரே முடிவை ஒரே நீதியைக் கொண்டிருக்க முடியாது.

அப்படித்தான் அங்கமாலி டைரிஸ் திரைப்படமும். இதில் பெரிதாய் கதையொன்றும் இல்லை. சில நாட்களுக்குமுன் கிரேட் இந்தியன் கிச்சன் சினிமா குறித்து எழுதியிருந்தேன். அதில் மீண்டும் மீண்டும் நாயகி காய்களை, மீன்களை, இறைச்சியை வெட்டுவது, பொறிப்பது, தாளிப்பது போன்ற காட்சிகளே வரும். ஏனென்றால் அவளுடைய தினப்பாடு அப்படித்தான் இருக்கிறது.

அங்கமாலி சிறு நகரும் அப்படித்தான். அழுக்கும் கசகசப்பும் நெரிசலும் கூச்சலும் புலால் நாற்றமும் மதுவாடையும் பியர் பாட்டிலால் மண்டையை உடைப்பதும், ஒருவரையொருவர் குரோதம் கொண்டு துரத்துவதுமாக இருக்கிறது.

இந்தியாவில் பல சிறுநகரங்கள் இப்படித்தான் இருக்கின்றன. வன்முறை அதன் பிரதான குணமாக இருக்கிறது. புலிக்கு எப்படி உப்புமா கொடுக்க முடியாதோ, அப்படித்தான் அங்கமாலியில் இந்தியாவின் மையநீரோட்ட பண்பாடும் சட்டமும் செல்லுபடியாகாது.

எங்களூரில் கஸ்பா என்றொரு குடியிருப்புப் பகுதி இருக்கிறது. அங்கிருந்து வரும் இளைஞர்களை இந்த நகரம் அச்சத்தோடு பார்க்கும். நான் எத்தனையோ முறை கஸ்பாவின் சிறிய தெருக்களில் நுழைந்து கடந்திருக்கிறேன். தெருவிலேயே பெண்கள் இட்லி அவிப்பார்கள். துணி துவைப்பார்கள். சாப்பிடுவார்கள். கதைகள் பேசுவார்கள்.

அந்த இளைஞர்களிடம் ஒருவித செருக்கு, திமிர், தெனாவெட்டு தென்படும். அது இச்சமூகம் தங்கள் மீது திணித்த தீண்டாமை வறுமை இவற்றுக்கான எதிர்வினை. இவையெல்லாம் இல்லையென்றால் இந்த நகரத்தின் சக்கரங்கள் இவர்களைக் கோழிக் குஞ்சுகளைப்போல் நசுக்கிவிடும். அதனால்தான் கூரான ஆணிகளைப்போல இவர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்கிறார்கள்.

இப்படி முரடர்களைப்போல இருக்கும் இவர்கள் முள்ளம்பன்றிகள் அல்ல.. பலாக்கள் என்பதையும் இந்நகர் அறிந்துவைத்திருக்கிறது. இந்நகர் நைச்சியமாக அணுகி, இவர்களையே, தங்களுடைய ஆயுதமாகவும் கேடயமாகவும் பயன்படுத்திக் கொள்கிறது.

இப்படி எல்லா நகரங்களிலும், எல்லாக் கிராமங்களிலும் ஏதோ ஒரு ஓரத்தில் ஒரு அங்கமாலி இருக்கவே செய்கிறது. அதன் டைரிகளைத் திறந்து, படித்துப் பார்க்கும்போது, நம் வழக்கமான கதை படிக்கும் மனசை அது சிதறடிக்கிறது.

ஈ மா யு படத்தைப் பலரும் பார்த்திருப்பீர்கள். அதில் நடித்திருக்கும் செம்பன் வினோத் எழுதிய கதைதான் அங்கமாலி டைரிஸ்.. இது ஏதோ ஒருவர் இருவர் கதை அல்ல. எண்பதுக்கும் மேற்பட்டவர்களின் கதை.

முதல் காட்சியில் ஒரு தாதா இன்னொருவனுக்கு சரக்கு ஊற்றிக் கொடுக்கிறார். கறியை அவனிடம் நீட்டுகிறார். தானும் ஒரு துண்டு கறியைச் சுவைத்தபடி அது மலைப்பாம்பு கறி என்கிறார். தின்றவனுக்கு வாந்தி வருகிறது. இந்த தாதா இந்த ஒரு காட்சியில் மட்டுமே தோன்றுகிறார். அந்த ஒரே காட்சியில் அவருடைய, அங்கமாலியுடைய, குணாம்சம் வெளிப்பட்டுவிடுகிறது.

அங்கமாலி பலருடைய கதைகளின் ஒரு பகுதியைக் காட்டுகிறது. மீதியை நம்மையையே யூகித்துக்கொள்ளச் சொல்கிறது. மாடும் பன்றியும் வெட்டும் வீதிகளையுடைய அங்கமாலிகளால் நிரம்பியது இந்தியா. எங்கோ ஓரிடத்தில் அது ராமர் கோவிலைக் கட்டுகிறது.

வழக்கம்போல இதன் கதையை, ஒரே நேர்க்கோட்டில் சொல்லிவிட முடியாது. ஒருவகையில் இப்படம் வின்சென்ட் பெப்பேவின் கதையைச் சொல்ல முயல்கிறது.

வின்சென்ட் பெப்பேவைச் சொல்வதென்பது வேறொன்றுமில்லை.. அங்கமாலியைச் சொல்வதுதான்.

அந்த நகரத்தின் ஒவ்வொரு தினத்திலும் வின்சென்ட் பெப்பே, பாபுஜி, ரவி, ராஜன், லிச்சி, சக்கி போன்றோரின் வாழ்வு அடங்கியிருக்கிறது. இந்த மனிதர்கள் அங்கமாலியை இயக்குகிறார்களா? இல்லை, அங்கமாலி இம்மனிதர்களை இயக்குகிறதா? மயக்கத்தைத் தருகிற படம்.

அங்கமாலிக்குரிய தனிச் சிறப்பே அதன் இளைஞர்களுடைய தெனாவெட்டுதான். இந்தக் குணம்தான் அவர்களை உயிரோட்டத்தோடு வைத்திருக்கிறது.

வின்சென்ட் பெப்பே நண்பர்கள் குழு, ஃபுட்பால் வீரனான பாபுஜியை ஆதர்சமாக கொண்டு வளர்பவர்கள். அம்மா, பொறுப்பற்ற தந்தை, தங்கை இப்படி ஒரு கீழ் நடுத்தரக் குடும்பத்தில் வளர்பவன் வின்சென்ட். குடி, சைட் அடிப்பது, தம்மடிப்பது என வளர்கிறது இவர்களது நாட்கள். பாபுஜியை ரவி, ராஜனின் ஆட்கள் குத்திவிடுகிறார்கள். வின்சென்ட் குழுவினரது வாழ்வும் மாறுகிறது. பள்ளிக்காலத்தில் அவனுக்கொரு காதலி. வசதியான வரன் வரும்போது, அவனைப் பிரிந்து புதுவாழ்வுக்குள் நுழைகிறாள். தட்டுத்தடுமாறி ஒரு டிகிரியை முடிக்கிறான் வின்சென்ட். இப்போது வேறு ஒரு காதலி. அவள் சக்கி. நர்ஸ். ஜெர்மனியில் வேலை தேடுபவள். இவளோடு ஜெர்மனில் செட்டிலாகலாம் என நினைக்கிறான் வின்சென்ட்.

இடையில் சின்னதாக கேபிள்டிவி தொழில் செய்கிறான். ஆனாலும் அங்கமாலி வாழ்வு அவர்களை அப்படி அமைதியாக இருக்கவிடுவதில்லை. பன்றிக்கறி கடை வைக்கிறார்கள். விலை குறைத்து விற்பதாக ரவி, ராஜன் டீம் சண்டைக்கு வருகிறார்கள். திருட்டுத் துப்பாக்கிகள், நாட்டு வெடிகுண்டுகள், உயிர் பலி எனத் திசை மாறும் வாழ்வு.

சக்கியை எப்படியாவது அவனோடு சேர்த்துவைக்க முனைகிறாள் வின்சென்ட்டின் பழைய தோழி லிச்சி. ஆனாலும் இருள் சூழ்ந்த தன் வாழ்விலிருந்து விலகுவதே சக்கிக்கு நல்லது என நினைக்கிறான் வின்சென்ட்.

கொலையிலிருந்து மீள ரவி, ராஜன், செத்தவனின் அம்மா இப்படி பலருக்கும் பணம் செட்டில் செய்ய அலைகிறார்கள். அங்கமாலிக்காரர்களை எப்படி விளக்க முனைந்தாலும் போதாமை இருந்துகொண்டே இருக்கிறது.

ஒரு சாவு. பிணத்தின் கையும் காலும் விரைத்தபடி சவப்பெட்டிக்குள் அடங்க மறுக்கிறது. ஒருவன் அதன் கையையும் காலையும் திருகி உடைத்து சவப்பெட்டியில் திணிக்கிறான். இப்படி ஈவு இரக்கமில்லாத கல்மனசும், அதற்குள் சின்னதாகச் சுரக்கும் ஈரமும் நிறைந்தவர்கள் அங்கமாலிக்காரர்கள்.

மூன்று வேளையும் சாப்பிட்டு, ஏசி அறையில் படுத்து, புணர்ந்து, பிள்ளை பெற்று, அவர்களுக்கு டைகட்டி, ஷூ போட்டு, வேனில் ஏற்றி டாட்டா காட்டும் மனிதர்களிடம் என்னதான் புதிதாகக் கதை இருந்துவிடப்போகிறது?

ஒரு வன்முறை நிகழ்வுக்குப்பிறகு, காதலுக்குத் தூதாக வந்த லிச்சியே வின்சென்ட்டை மணக்கிறாள். அவளோடு இப்போது சிங்கப்பூரில் இருக்கிறான் வின்சென்ட். அவன் விட்டுச்சென்ற அங்கமாலி அதே உயிர்ப்போடு, அதே ரணகளத்தோடு தடதடக்கிறது. ஒரு வீக் எண்டில் அந்தக் கதைகளை நண்பர்களிடம் கேட்டால்தான் வின்சென்ட்டுக்கு நிம்மதியாக இருக்கிறது.

எங்கு சென்றாலும் வின்சென்ட், நம்மில் பல பேரையும் போலவே, தானொரு அங்கமாலிக்காரன் என்கிற எண்ணத்தோடே வாழ்கிறான்.

நம்முடைய மாட்டுத் தாவணியையும், கோரிப்பாளையத்தையும் இங்கே சினிமாவில் காட்டுகிறார்கள். ஆனாலும் இவை, அதன் உள்ளூர் பண்பை ஆன்மாவை சினிமாவாகும்போது இழந்துவிடுவது வருத்தத்துக்குரியது. ஆனால் அங்கமாலியை அதன் முழுப்பரிமாணத்தோடு நம் கண்முன்னே கொண்டுவருகிறார் லிஜோ ஜோஸ் பள்ளிசேரி.

அங்கமாலி போன்ற படங்கள் தன்னளவில் ஒரு கலைப் படைப்பாகவும், அதேவேளை வலதுசாரி அரசியல் கட்டமைக்க விரும்பும் ஒற்றை அடையாளமுடைய இந்தியாவுக்கு எதிரான அரசியலாகவும் விளங்குகிறது.

கரிகாலன் இந்தியனில்லை. அவன் மருங்கூர்காரன். அவனுடைய ஊருக்கென்று இந்தியாவுக்குப் பொருந்தாத சில தெய்வங்கள் இருக்கின்றன. மருங்கூர்காரர்கள் சாப்பாடும், அமித்ஷா மோடியின் டின்னரும் வெவ்வேறானவை. ஒரு மருங்கூர்காரனாக என்னால் அங்கமாலியை நெருங்க முடிகிறது. இந்தியாவைத்தான் நெருங்க முடியவில்லை! ■

● மதுரா
● ஓவியம் - அழ.ரஜினிகாந்தன்

# பாப்பம்மாவின் வாருகோல்..



புலர்ந்தும் புலராத விடியல். பறவைகளின் கீச்சொலி. அத்தோடு சரக்சரக்கென்று கூட்டும் சத்தம். பாப்பம்மா வந்தாச்சு போல. ஒருநாள் பார்த்தாற்போல் நாலரை மணிக்கெல்லாம் வந்து ஒரே லயத்தோடு பெருக்குவதெல்லாம் அவருக்கு மட்டுமே கைவந்த கலை.

அதிகாலையில் பெருக்குவதை ஒரு தவம் மாதிரி செய்வார். ஒரு ஓவியனின் தூரிகை மாதிரி.. வாருகோல் அவர் கையில் பேசும். அவர் வாருகோல் செய்வதே ஒரு வேள்வி மாதிரி இருக்கும். தினம் தென்னை மட்டைகளை ரக வாரியாகப் பிரித்து ஓலைகளைப் பிடித்து அவரது அரிவாள்மனையில் தீட்டும் அழகே அழகு. இளம் தோகையாக ஒன்று, சற்று நீளமாக முனையில் அழுத்தமாக ஒன்று, முற்றம் கூட்டுவதற்கான கட்டை விளக்குமாறு என்று சீவும்போது பிரித்து வைத்துவிடுவார்.

எப்போதாவது வரும் கங்கம்மா ஆச்சி இதைப் பார்த்ததும் விளக்குமாற்று கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் எனக் கழுத்தை நொடிப்பார். ஒரு இலை.. சருகு இல்லாமல் துடைத்தது போல் தெருவைக் கூட்டுவார். கர்ணன் மாதிரி வாருகோலோடு பிறந்திருப்பா போல.. எனத் தெருவாசிகள் முணுமுணுப்பதுண்டு.

எதிர்வீட்டு கேட் படாரென சத்தத்தோடு திறந்தது கேட்டது. முத்துசாமித் தாத்தா சைக்கிளோடு கிளம்பிவிட்டார். காலைத் தூக்கத்தைப் பாப்பம்மா கெடுப்பதாக எரிச்சல் நெடுநாளாய். 'சனியன் காலங்கார்த்தால எழவெடுக்குது..' துண்டை உதறிப்போட்டு முணுமுணுத்திருப்பார்.

காதில் விழுந்தால் பாப்பம்மா பேசுகிற பேச்சில் நாலு நாளைக்கு வெளியில் தலை காட்ட முடியாது.

அடுத்து அம்மா சத்தமின்றி அறைக்கதவு திறந்து வெளியில் போவதும் புரிந்தது.

இன்று நேற்றல்ல மகேசுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து இதுதான் நடக்கிறது.

திண்ணை.. தாழ்வாரம்.. கூடம் என்ற அந்தக் காலத்து வீடு அவர்களுடையது.

வாசல் தெளித்து பெருக்கி முடித்ததும் சந்து வழியாகக் கொல்லைக்குப் போய்விடுவார் பாப்பம்மா. கூடவே முதல் டிகாஷனில் போட்ட காபியுடன் அம்மாவும்.

பாப்பம்மா பாத்திரம் துலக்க துவைக்கும் கல்லில் அமர்ந்து அம்மா அவரைப் பார்த்துக்கொண்டிருப்பார். அப்போது அம்மாவின் கண்கள் ஒளிரும். மற்ற நேரத்தைவிட அப்போது அம்மா

அதீத அழகோடு இருப்பதாகத் தோன்றும் மகேஷுக்கு. ஓடிப்போய் அம்மாவை இறுக்கிக்கொள்வான்.

பால்குடியை மறக்காத தங்க பேபி.

பஞ்சுமிட்டாய் வாங்கியாரேன் தங்க பேபி.

பாப்பம்மா பாடியபடியே இவனை நெட்டி முறிப்பார். இப்போதெல்லாம் மகேஷுக்குக் கூச்சமா இருக்கிறது.

பெரிய மனுஷன் ஆயிட்டாரு எங்க துரை

ஆனாலும் மீசையில்லாப் பாண்டித் துரை.

பாப்பம்மா கேலி செய்ய 'பதிமூணு வயசு ஆகுதில்ல.. அதான்' என்று அம்மா சமாளிப்பாள்.

பாப்பம்மா நெடுநெடுவென்று உயரமாய் சிவப்பாய் இருப்பார். வெற்றிலை குதப்பும் வாய், அலட்சிய நடை எனக் கம்பீரமாயிருப்பார்.

'அதுக்கொண்ணும் ரொம்ப வயசில்லை. புருஷனில்லாத பொம்பளை. யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதேனு கிழக்கோலம் போட்டுக்குது.'

அம்மா ஒருமுறை அப்பாவிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். இத்தனைக்கும் அப்பா எதிரில் பாப்பம்மா வருவதில்லை. அப்பா வேலைக்குப் போன பிறகே வீட்டுக்குள் வருவார்.

'காலங்கார்த்தால தூக்கம் கெடுது, புழுதி பறக்குது, தெரு மண்ணையே பெருக்கிடுது..'

இப்படித் தெருவாசிகள் அம்மாவிடம் பாப்பம்மா பற்றிப் புகார் சொல்வதுண்டு.

ஆனால் அம்மா ஒருபோதும் பாப்பம்மாவை யாரிடமும் விட்டுக் கொடுத்ததில்லை.

ஒருமுறை அத்தை இங்கு தங்கியிருந்தபோது.. 'வேலை செய்யறவளுக்கு இத்தனை இடம் கொடுக்க வேண்டியதில்லை. கொதிக்க கொதிக்க காஃபி.. சூடா இட்லி னு...' என்று அம்மாவிடம் கடிந்துகொண்டார்.

அப்போதும் அம்மா காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு அத்தை பெரியம்மா என யார் வந்தாலும் பாப்பம்மாவை வரவேண்டாம் எனச் சொல்லிவிடுவாள்.

பாப்பம்மாவுக்குச் சட்டென்றால் கோபம் வரும். அம்மாவிடமே சிலசமயம் கோபித்துக்கொண்டு போய்விடுவார். அடுத்த நாளே வாருகோலோடு வந்து நிற்பார்.

அரையாண்டுத் தேர்வு விடுமுறை சமயம். மகேஷ் வினாத்தாளுக்கு விடை எழுதிக்கொண்டிருந்தான். பள்ளி திறந்ததும் அசைன்மெண்ட் சமர்ப்பிக்க வேண்டும். பாப்பம்மா கொல்லைத் தாழ்வாரத்தைக் கூட்டிக்கொண்டிருந்தார்.

அன்று அப்பா ஆபீஸ் போகவில்லை. காலையிருந்தே கோபமாக இருந்தார். அம்மாவிடம் காரசாரமான விவாதம் வேறு. கோபமாக அம்மாவை அடிக்கக் கையோங்க.. உள்ளே ஓடி வந்தார் பாப்பம்மா..

'இதோ பாருங்க. பொம்பளைப் பிள்ளையை அடிக்கிற வேலை வச்சுக்காதீங்க.'

கையில் வாருகோலை ஆட்டி ஆட்டி உரத்து பேசியவரைப் பார்க்க பயமாயிருந்தது.

அப்பாவின் கோபம் அதிகரிக்க கண்ணெல்லாம் சிவந்து ஏதோ பேச வாயெடுத்தார்.. அதற்குள் 'வெளியே போ..' என்றாள் அம்மா.

ஏதோ பேச முற்பட்டவரை.. 'உன்னையெல்லாம் வைக்கிற இடத்தில வைக்காதது என் தப்பு. இனிமே இங்கே நிற்காதே. வரவும் வராதே,' என்றாள்.

வாருகோலை அப்படியே போட்டுவிட்டு தலைகுனிந்து வெளியே போனவர்தான். வரவே இல்லை.

அம்மா முகத்தில் இப்போதெல்லாம் பழைய களை இல்லை. பாப்பம்மா போனபிறகு அம்மா அழுதிருக்கக் கூடும். அதிக வேலையினாலோ என்னவோ சோர்வாக இருந்தாள். அப்பாகூட வேறு ஆள் வைத்துக்கொள்ளச் சொன்னார். அம்மா ஒத்துக் கொள்ளவில்லை.

ஒரு மாதம் சென்றிருக்கும்.. மீண்டும் அதிகாலையில் சரக் சரக் என்ற சத்தம்..

மகேஷ் ஓடிப்போய் சன்னல் வழியாகப் பார்த்தான். அம்மா கூட்டிக் கொண்டிருந்தாள். கையில் பாப்பம்மாவின் வாருகோல்.. ■

● கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

நிலவறைக்குள்
தங்கையைத் தள்ளி
கதவைச்-
சாத்தினாள்
காரணம் புரியாமல்
கலவர முகத்தோடு
நின்ற
தங்கையின் முதுகில்
இரண்டு சாத்து -
சாத்தினாள்

“சொல்லடி ஊர்மிளை
சொல்
உற்சாகத்தோடு
துள்ளியாடும் வேளையில் -
ஒதுங்கி நிற்கிறாய்
பட்டத்து இளவரசர்கள்
பதவியேற்கும்
வேளையில் -
பதுங்கி நிற்கிறாய்
வெற்றிக் களிப்பில்
கலந்து கொள்ளாமல் -
வெதும்பி நிற்கிறாய்
கற்சிலை போல
கள்ள மௌனத்தோடு
எதற்காக -
கலங்கி நிற்கிறாய்..
சொல்ல முடியாத
சோகத்தைச் சுமந்து -
சுணங்கி நிற்கிறாய்

நடந்ததைச் சொல்
அதன்பிறகு
இங்கிருந்து
நகர்ந்து -
செல்
நீ சுமந்திருக்கும்
சோகத்தை
என்னிடத்தில் -
சொல்

கூடப்பிறந்தவள்
என்ற உரிமையில்
கேட்கிறேன்
உனது
குழப்பத்திற்கான
காரணத்தைச் -
சொல்
அல்லது
என்னைக் குழப்புவதுதான்
உனது குறிக்கோள்
என்றால் இந்த
குறுவாளால் என்னைக்-
கொல்”
என்றாள் சீதை

ஆதுரத்தோடு
தலையை வருடி
அணைத்துக்கொண்டு
அழுகிற அக்காவின்
மார்பில் சாய்ந்து
அலறினாள் -
ஊர்மிளை
அவள்
அழுது முடிக்கும் வரை
காத்திருந்தாள் -
சீதை

“அங்கமெல்லாம் சோகம்
ஆறாக வழிகையில்
பொங்கிவரும்
துக்கத்தை
எப்படி அக்கா
புன்னகையில் -
மறைப்பது...?

அன்புக்கு
ஏங்குபவளின்
குறைகளை
எப்படி அக்கா
அவை நடுவே -
உரைப்பது...?

அடக்கி வைத்திருக்கும்
ஆற்றாமையை
எல்லாம்
எப்படி அக்கா
அரை நொடியில் -
குறைப்பது..?

அடிமனதில்
கல்லாடிக் கிடக்கும்
எனது
ஆதங்கத்தை எல்லாம்
எப்படி அக்கா -
கரைப்பது...?”

ஊர்மிளை
சொல்லச் சொல்ல
உருகினாள் -
சீதை
மாசற்ற தங்கையின்
மனக்குறையை
அறிந்து -
மருகினாள்
காரணமறியாமல்
அவளைக்
கடிந்து கொண்டதற்காக
காந்தலாய் மனதுக்குள் -
கருகினாள்...

- ஊர்மிளை வருவாள் ■



கட்டுரை

தங்கத்துரையரசி

# இலக்கியமும் கொரோனாவும்

ஏழாம் நூற்றாண்டு! தமிழறிவில் சிறந்த பெரியவர் ஒருவர் தம் சீடர்களுடன் கொங்குநாடு செல்கிறார். இவரும் இவரது குழுவினரும் சென்ற நேரத்தில் அங்கு வாழ்ந்த மக்கள் நளிர்சுரத்தால் பாதிக்கப்பட்டிருக்க, வந்து சேர்ந்த இவர்களுக்கும் தொற்றுகிறது அந்நோய். நோய் பீடித்ததனால் துன்பமுற்று வருந்திய தம் சீடரது துன்பம் பொறாது அவர் தம் இறைவனை அழைத்துப் பாடுகிறார் ஒரு பாடல்.

‘கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம் / செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா’ என்றவர் வேண்டி நிற்கிறார். ‘அடியவர்கள் ஆகிய நாங்கள் உனக்குத் திருப்பணிகள் செய்தே வாழ்ந்து வருகிறோம். எங்களை வாட்டும் இந்த நோயில் இருந்து எங்களைக் காத்தருள்வாயாக’ என்றுருகிப் பாட, சுரம் நீங்கி சீடர்களும் மக்களும் நலமுற்றதாகக் காட்டுகின்றது பழந்தமிழ் இலக்கியம் ஒன்று.

‘நளிர்சுரம்’ என்று அந்நோயைக் குறிப்பிடும் அப்பெரியவர் அதன் அறிகுறிகளைக் குறிப்பிடவில்லை; மருந்து எதுவும் கொடுத்ததாகவும் குறிப்பிடவில்லை. வெறுமனே பாடல் பாடியே நோயில் இருந்து மீட்டதாகப் பாடல் கூறுகிறது. இவ்விலக்கியம் காட்டும் காட்சிவழி நுழைந்து பகுத்தறிந்து பார்ப்போமாகில் பழந்தமிழர் காட்டும் வாழ்நெறிகள் வியப்பிலாழ்த்துகின்றன.

கண்ணுக்குத் தெரியாத பகையோடு உலகே போரிட்டுக்கொண்டு இருக்கிறது. அணு ஆயுதங்களால் வரக்கூடும் என்ற கணிப்புகளை எல்லாம் பின்தள்ளி தீப்பெரும்நுண்மி பற்பல வடிவம் கொண்டு மாறுபாடடைந்துகொண்டே சத்தமில்லாமல் ஒரு உலகளவிலான போரை நடத்திக்கொண்டு வருகிறது. தாக்குதல்கள் தொற்றுதல்களாக இருக்கும்போது அவற்றின் முன் அத்தனை ஆயுதங்களும் அசந்துபோகின்றன.

பெருந்தொற்றுகளைக் காணாததல்ல உலகு. நுண்மிகளில் இருந்தே ஒரு செல் உயிரினங்கள் தோன்றியதாக மெய்ப்பிக்கின்றது யூரே-மில்லர் ஆய்வுகள். தொற்றுகள் மனிதன் தோன்றுமுன்னரே தோன்றிவிட்டவை. எனின் அவைகளும் நமது மூதாதைகளே. அவைகளைக் கண்டு இன்று நம் வீடுகள் தரைக்குமேல் பதுங்குகுழிகள் ஆகின்றன. நாம் தலைமறைவாகிறோம்.

எங்கிருந்தாலும் தேடி வந்து உறவாகிறது. செல்லும்போது பலரையும் உடனழைத்தே சென்றுவிடுகிறது. பல்லூடகப் பெருக்கம் மிகுந்த சூழலில், கிராமங்களிலும்கூட அகலுலகப் பண்பாடு பெருகிவிட்ட சூழலில் வீடடங்கி இருப்போர் தொலைக்காட்சியையோ, திறன்பேசிகளையோ திறந்துவிட்டால் அது காட்டும் உலகில் கோரதாண்டவம் ஆடிக் களிக்கும் நுண்தொற்று நட்புகளையும் உறவுகளையும் விட்டுவைக்கவில்லை என்ற செய்தி உள்ளத்தில் பெரும்பீதியை உருவாக்குகின்றன என்றால் அது மிகையில்லை.

கைமீறிப் போயிருக்கும் இச்சூழலைக் கடந்துபோக என்ன வழி... இச்சூழல்

மட்டுமல்ல, எச்சூழலிலும் மனித உடல் என்பது, ‘பொல்லாப் புழுமலி நோய்ப்புண் புரம்பை’ என்பாளே அவ்வை, அதுபோல் நோய்கள் வந்து தங்கிப் போகும் கூடுதான். எப்போதும் போல் இலக்கியங்கள் காட்டும் வழியில் நடந்தால் இருக்கும் இச்சூழலையும் கடந்து செல்லலாம்.

நளிர்சுரம் கண்டால் செய்யும் சிகிச்சையை நற்றத்தத்தனார் என்னும் புலவர், ‘முந்நீர் சிவணிய செந்நீர் யாக்கை / முப்பிணி ஆனவை வெப்பமா நளிரே / மாறிய நாள்பகல் வீறிய யாமமும் / மாசுறு காய மூசுபு வெவ்வினை / மருந்தனு பானமும் இருந்தையில் தாளகம் / அருநறா முத்திறம் இருமுறை இல்செய / மீச்சுரம் ஆகிய மீசுரப் படலிகை / பெருமூல வைக்கெதிர்ப் பூளைக் குவையே’, என்று பாடுகிறார்.

காற்றிற்கு எதிர்நிற்க ஒண்ணாதவை பூளைப்பூக்கள். அவற்றைப் போல மிகக் கடுமையான நளிர்சுரமும் தாளகத்தின் முன் மறைந்தோடிப்போகும் என்பது இப்பாடலின் பொருள். இப்படி தாளகத்தையும் இரசத்தையும் கடுஞ்சுரத்திற்கான மருந்துப்பொருள்களாகக் காட்டும் நற்றத்தத்தனாரும் மதுமலர்த்தண்டார் பகுமனார் என்பவரும் எழுதிய பாடல்கள் அகம், புறம் எனுமிரு பொருள்களுக்குள் அடங்காது மருத்துவப் பொருள் தருபவை. ‘தேரையர் யமக வெண்பா’ என்னும் நூலுக்கு உரைமேற்கோளாக அமைந்தவை.

இரசமும் தாளகமும் சீனம், கிரேக்கம், இத்தாலி போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டனவாம். அந்நாடுகள் அவற்றை உள்மருந்தாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால், தமிழ் மருத்துவர்கள் பண்டுதொட்டே பயன்படுத்தி வந்துள்ளனர். தாளகம் நச்சுத்தன்மை உடையதாம். சுத்தியினாலும் மூலிகைச் சருக்கினாலும் மருந்தாகிறது என மருத்துவ ஆற்றுப்படையின் பாடல்கள் கூறுகின்றன. சங்ககாலத்திற்கும் முந்தைய இக்குறிப்பு கொண்டு தாளகத்தை இப்போது எங்கே தேடுவது?

மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியாக எது வடிவுகொண்டாலும் அதை வணங்கி ஏற்று, மகிழ்வித்து அனுப்புவதே தமிழர் பண்பாடு. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை ‘அம்மை’யை அப்படித்தான் கொண்டாடுவோம்.

‘அம்மை போட்டிருக்கும்போது அசைவம் ஆகுமா? இப்படி கருவாட்டுக்கறி வைத்திருக்கிறாயே!’, என்று அங்கலாய்த்த அக்கம்பக்கத்து வாய்களை அடைத்ததோடு ‘ஆத்தா வாய்க்கு எது நல்லாருக்கோ அதக் கேக்குறா. எது கேட்டாலும் வச்சுக் குடுத்துரணும். மனசுகுளிர சாப்பிட்டு சீக்கிரம் எம்பேரன விட்டுக் கிளம்பிருவா ஆத்தா’, என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு ‘அம்மை’யைக் கவனித்த அப்பத்தாக்கள், அவர்களிடம் அம்மை கண்டிருக்கும்போது எது கேட்டாலும் உடனே கிடைக்கும் என்பதால் கிண்டலாக கருவாட்டுக்கறி கேட்ட பேரன்களின் குறும்பை அறியாதவர்கள்!

அம்மை நோய்க்குரிய அடையாளம் வெளிப்பட்டுத் தெரியுமுன் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் மெழுகி தனியே ஓரிடத்தில் வேப்பிலை படுக்கையிட்டு படுக்க வைப்பார்கள். அது தொற்றுநோய் என்பதால் ‘அம்மை கண்டிருப்பதை’ அண்டை அயலாருக்குத் தெரிவிக்கும்படியாக வேப்பிலையை வீட்டுவாயிலில் அல்லது நிலைப்படியில் கட்டி வைப்பார்கள். சிறுகுழந்தைகள் என்றால் வேப்பிலைதான் ஆடையே.

வேம்பும் மஞ்சளும் கலந்தரைத்து சிறு உருண்டைகளாக உள்ளுக்கு உண்ணக் கொடுப்பார்கள். கொழுந்து வேப்பிலைகளை மென்று விழுங்கத் தருவார்கள். உடலைக் குளிர்விக்கும் திரவ உணவுப்பொருள்களைக் குடிக்கக் கொடுப்பார்கள். மஞ்சளும் வேப்பிலையும் கலந்த, சூரிய ஒளியில் சில மணி நேரங்கள் வைக்கப்பட்டு வெதுவெதுப்பு ஏறியிருக்கும் நீரில் குளிக்க வைப்பார்கள். தவறியும்கூட மருத்துவமனைப் பக்கம் தலைவைத்துப் படுக்காத தலைமுறைகள். எல்லாமே கை பக்குவம்தான். உணவே மருந்தாக மருந்தே உணவாக ஒரு வாழ்க்கை.

வரலாற்றை ஆய்ந்தால் இதுபோன்ற பெருந்தொற்றுகளை மற்ற மருந்துகளால்



எதிர்கொள்ள முடியாத நிலையில் தொன்மையான முன்னோர்களின் வழிகாட்டல்களே அவற்றை வழியனுப்பி வைக்க உதவின வகையை அறிய முடியும். மஞ்சள் காமாலை வரும்போது கீழாநெல்லி, ஆமணக்கு இலைக்கொழுந்து, கரிசலாங்கண்ணி இவைகளே இன்றளவும் கட்டுப்படுத்துகின்றன. சிக்குன்குன்யா என்ற சுரம் வந்தபோது நிலவேம்போடு பப்பாளிச்சாறும் சேர்த்தருந்தி விரட்டியது நம் நெஞ்சுரம்.

அதன்பின் அதிரடியாகப் பரவிய டெங்குவிற்கும் இதே கலவைதான் எதிரியானது. H1N1 மிரட்டியபோது அதன் உருவழித்தது கபசுரக் குடிநீர். இப்போது பரவி அச்சுறுத்திக்கொண்டிருக்கும் சார்ஸ் வகை நுண்மி மாறுபாடடைந்துகொண்டே வருகிறது.

சூழலுக்குஏற்பதன்னைமாற்றிக்கொண்டு மிரட்டும் இப்பெருந்தொற்றால் உயிரிழப்புகள் கணக்கற்று பெருகிவரும் சூழலிலும் கடந்த 45நாட்களில் சுமார் 1.20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் யோகா, மூச்சுப் பயிற்சிகளாலும் சித்த மருந்துகளாலும் குணமடைந்துள்ளனர் என்ற செய்தி புதிய நம்பிக்கை தருகிறது.

ஆம் நண்பர்களே! எப்படியும் வரப்போகிறதுதான் எல்லோருக்கும். நம்மால் செய்யக்கூடுவதென்ன? 'வரும்முன் காத்தல்; வந்தபின் பொறுத்தல்' மட்டுமே. மனையிலுள்ளவர்கள்நோய்வாய்ப்பட்டாலோ ஊரில் நோய்க்குறி தென்பட்டாலோ நோய்த்தடுப்பு முறையில் மனையையும் மனையைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தூய்மைப்படுத்துவர்.

அதோடு, நோய்க்கிருமி மனையிலுள்ளோருக்கு இருப்பதைத் தெரிவிக்கும் பொருட்டு மனையின் இறைப்பில் வேம்பின் இலைகளைக் கொத்துக்கொத்தாகச் செருகி வைக்கும் பழக்கம் இருந்திருப்பதை இலக்கியம் காட்டுகிறது. நாம் இதைக் கடைபிடிக்கலாம். இதையே 'தீங்கனி இரவமொடு வேம்பு மனைச்செரீஇ' என்கிறது இலக்கியம்.

'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்றுஅப்பால்நாற்கூற்றேமருந்து', என்று வள்ளுவம் காட்டும் வழியும் இங்கு நோக்கத்தக்கது. 'நோயுற்றவர், மருத்துவர், மருந்து தேடிக்கொண்டு வருபவர் அல்லது காலத்திற்கேற்ப தற்காலத்தில் மருந்தை உடனிருந்து கொடுப்பவர், அதன்பிறகே மருந்து' என்பதாக நான் இக்குறளுக்குப் பொருள்கொள்கிறேன்.

இக்குறள் காட்டும் நெறிப்படி இந்நாளில் நோயுற்றவர் முதலில் நாம் நலமடைவோம் என்று முழுமையாக நம்ப வேண்டும். நெஞ்சுரம் எச்சுரத்தையும் காட்டிலும் வலியது. பதட்டம் கொள்ளாமல் இருக்கும் ஒருவரால்தான் உடலில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளைச் சரியாக மருத்துவரிடம் எடுத்துரைக்க முடியும். தன்னம்பிக்கையே பெருமருந்து.

அடுத்து மருத்துவர் மீது முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். நோய் அறிகுறிகளைக் கொண்டு தகுந்த மருந்துகளைக் கொடுப்பார். தகுந்த மருந்துகள் கண்டறியப்படாத சூழலில், இருக்கும் மருந்துகளில் சிறந்ததைத்தான் மருத்துவர் பரிந்துரைப்பார் என்ற நம்பிக்கையும் ஒருவகை மருந்தே.

அந்தக் காலத்தில் மருத்துவர் சொல்லும் இலைகளைச் சரியாகக் கண்டறிந்து பறித்துக்கொண்டு வந்து மருந்தை உரிய முறையில் தயாரிப்பவர்கள் இருந்தார்கள். அவர்களே 'மருந்துழைச் செல்வான்' என்று வள்ளுவர் குறிப்பிடும் மருந்து தேடிச் செல்பவர்கள். மருந்தையும் தடுப்பு மருந்தையும் கண்டறிபவர்களை அவ்வகையில் கொள்ளலாம்.

மருத்துவமனையில் தங்கினால் செவிலியர் பார்த்துக் கொள்வார்கள். வீடு திரும்பி தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் உடன் இருப்பவர்கள் கவனித்துக்கொள்வார்.

இவையெல்லாவற்றிற்கும் பின்னர்தான் நோயைக் குணப்படுத்துவதில் மருந்தின் பங்களிப்பு உள்ளது. மருந்து மட்டுமே நோய்க்கான தீர்வன்று என்பதாகவே நான் கருதுகிறேன்.

மருந்து மட்டுமின்றி நோயுற்றவர் வாழும் மனையில் நறுமணம் கமழும் நறும்புகை புகைத்து, யாழினால் பல்லிசை இசைத்து, ஆம்பல் எனும் குழலூதி, காஞ்சிப்பண் பாடி அவர்களைத் தூங்கச் செய்தனராம் பண்டைத் தமிழர். இற்றை நிலைக்கேற்றபடி நம் மனதையும் சுற்றுப்புறத்தையும் தயார்படுத்திக்கொண்டு அடுத்த இருபது நாட்களுக்கு முழு ஓய்வென்று மனதில் குறித்துக்கொண்டு துவங்க வேண்டியதுதான் நம் போரை!

பெருந்தொற்றுக்கு ஆளாகிவிட்டால் மருத்துவமனைக்குப் போயேதான் ஆக வேண்டுமா? நம் வீட்டைக் காட்டிலும் பாதுகாப்பான இடம் வேறெதுவாகவும் இருக்க முடியாதே. ரத்த அழுத்தம், சர்க்கரை, இன்ன பிற நோய்கள் இல்லாதவர்கள் வீட்டிலேயே நம்மை நாம் கவனித்துக் கொள்ளலாம்.

வரும்போதே சளியையும் உடனழைத்து வருகிறது இக்கொடூரன். சளிக்கு 'வைத்தியம் பார்த்தால் ஒரு வாரத்தில் போகும்; பார்க்காமல் விட்டால் ஏழு நாட்களாகும்' என்பது யார் அறியாதது? ஏழுநாட்களுக்கு சுரத்தோடு சளியும் படுத்தும். வேறொரு பச்சிலையும் கிடைக்காவிட்டாலும் போகிறது. அடிக்கடி வெறும் வெந்நீரிலேயே கூட ஆவி பிடிக்கலாம். தொண்டையில் தொல்லை கொடுக்கும் சளியையும் அது தரும் வலியையும் உப்பு கலந்த வெதுவெதுப்பான நீரால் கொப்புளித்துக் குறைக்கலாம்.

சுரம் இருக்கும்போது உணவு உள்ளே இறங்காது. உப்பைக் குறைத்துக்கொள்வது மருந்தின் செயல்திறனை அதிகரிக்குமாகையால் அளவான உப்பிட்ட அன்னப்பால் கஞ்சியைக் குடித்துவிட்டு, மனதுக்குப் பிடித்த இசையை ஒலிக்க விட்டுவிட்டு, நமக்குத் தெரிந்த வீரியம் குறைந்த மாத்திரைகளை எடுத்துக்கொண்டு, அசதி தீர ஓய்வெடுப்பது ஒன்றுதான் வழி.

நுண்பெருந்தொற்றுக்கு ஆளானவர்களைக் கண்டு மற்றவர்கள் ஒதுங்கும் மோசமான பழக்கமும் நம்மவரிடையே மலிந்துகிடக்கிறது. தம்மைக் காத்துக் கொள்வது தவறாகாது. 'முருவினை யுள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும் கள்வரின் அஞ்சப்படும்' என்றுரைக்கிறதே திரிகடுகம். கள்வருக்கு அஞ்சி எச்சரிக்கையாய் இருப்பது போல உரு அழிக்கும் நோய்க்கு அஞ்சி, செய்ய வேண்டுவன செய்து, எச்சரிக்கையாக இருக்க வேண்டும்தான்.

ஆனால், 'பரலோகத்தில் நீ நுழையும்போது உனக்கு அருகே இருந்த உன் தமையன் எங்கே என்ற உன் பிதாவின் வினாவிற்கு நீ விடையளிக்க வேண்டியிருக்கும்' என்ற பைபிள் வாசகங்களையும் நாம் நினைவில் கொள்ளலாம். நமக்கருகில் பிணி கண்டோருக்கு இயன்ற உதவிகளைச் செய்யலாம்.

'அல்லல் ஒருவற்கு வந்தக்கால் மற்றவர்க்கு / நல்ல கிளைகள் எனப்படுவார் – நல்ல / வினைமரபின் மற்றதனை நீக்கு மதுவே / மனைமரம் ஆய மருந்து' என்கிறது பழமொழி நானூறு. ஒருவருக்குத் துன்பம் நேரிடும்போது நல்ல உறவுகள் என்பவை 'வீட்டில் நட்டு வளர்க்கப்பட்ட பச்சிலை மரங்களைப் போல உதவவேண்டும்' என்கிறது அது, சரிதானே? அப்படி நாம் நடந்துகொள்கிறோமா?

நோயாளியைக் கவனிக்கும் முறை பற்றி சமஸ்கிருத இலக்கியமொன்று இப்படிக் கூறுகிறது.. 'மைத்ரீ காருண்யமார்தேஷு சக்யே/ப்ரீதி ருபேக்ஷணம்'. 'நோய்வாய்ப்பட்டவனிடம் நட்பும் இரக்கமும் காட்டு. மகிழ்ச்சிப்படுத்து. நோய் வந்ததற்கு அவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாதே'.

எத்தனை உண்மை? மறுக்க முடியாது, நோய்வாய்ப்பட்டவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திப் பார்க்கிறதுதான் இந்தச் சமூகம். வீட்டில், பணியிடத்தில் எங்கும் பரவலாகக் காணக் கிடைக்கிறதுதான் இந்தப் பழக்கம். யாரும் வேண்டி விரும்பி நோயை அழைத்து வருவதில்லை. வந்தவர்களின் திண்டாட்டத்தை நம் கண்ணோட்டத்தால் மாற்ற முடியும்.

மாற்றுவோம்! ■


படைப்பு பெருமையுடன் வழங்கும்
என்னழகே என்னுயிரே
வெளியீடு விரைவில்